மாத இதழ் - September 2012

# வண்ண வானவில்

பருவம் 02 වන්න වානවිල් Vanna Vaanavil உதயம் 23 30/-



## பாவனா Album

## உலகை உலுக்கிய கொள்ளை நோய்கள்

## ட்ரகூலா: அச்சத்தின் முகவரி

## கிழக்கு மாகாணம்: அபிவிருத்தியின் உதயம்







S.Krishnakanthan @ ANCL 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குவாலாலும்பூரில் நடைபெற்ற அனைத்துலக முருக பக்தி மாநாடு

**ஆர். மகேஸ்வரன்**

முருகன் திருத்தலங்களைக் கொண்ட தமிழகத்தில் நடைபெற்றிருக்க வேண்டிய ஒரு மாநாடு இஸ்லாமிய நாடான மலேசியாவில் அதன் தலைநகரான குவாலாலும்பூர் (அதுதான் கோலாலம்பூர்) பெருநகரில் நடைபெற்றது வித்தியாசமான ஒன்று. எதெச்சையாக பத்திரிகையில் விளம்பரம் பார்த்து, சந்தேகப்பட்டு, விசாரித்து எழுதிப் போட்டதில் அம் மாநாட்டில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிக்கும் வாய்ப்பு கிட்டியது. அது சரி, அது என்ன குவாலாலும்பூர்? அதுதான் சரியான தமிழ் உச்சரிப்பாம். ஆங்கிலத்தில்தான் கோலாலம்பூராம். இது அசல் தமிழ்ப் பெயர் என்றெல்லாம் விசாரித்ததில் விவரம் சொன்னார்கள். அதை பின்னர் பார்ப்போம்.

நான் சென்று கலந்து கொண்ட மாநாடு, அனைத்துலக முருக பக்தி மாநாடு-2012 என்பதாகும். தமிழகத்தில்தானே இது நடைபெற்றிருக்க வேண்டும்?

மலாயப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையுடன் இணைந்து மலேசியா பெட்டாலிங் ஜெயா திருமுருகன் திருவாக்கு திருப்பீடம் ஏற்பாடு செய்திருந்த இந்த அனைத்துலக முருக பக்தி மாநாடு 2012 ஆகஸ்ட் 9 முதல் 12 வரை நடைபெற்றது. மலாயப் பல்கலைக்கழக பெர்டாணாசிஸ்வ மண்டபத்தில் நடைபெற்ற இம்மாநாட்டில் இலங்கையிலிருந்து பேராதனை பல்கலைக்கழகம், கிழக்கு பல்கலைக்கழகம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஆகியவற்றை சேர்ந்த ஆய்வாளர்கள் பங்குபற்றி ஆய்வுகளை சமர்பித்தனர். இம்மாநாடு ஏற்பாட்டாளர்களுல் மிக முக்கிய மாணவர் திருமுருகன் திருவாக்கு திருபீடத்தை சேர்ந்த தவத்திரு பாலயோகி சுவாமிகள். இவரது விளக்கமளிப்பு உரையுடன் மாநாடு ஆரம்பமானது. இதற்கு முன் 2003ம் ஆண்டு அனைத்துலக முருக பக்தி மாநாடு நடைபெற்றிருக்கிறது. இது இரண்டாவது மாநாடு. மலாயப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல்துறை தலைவர் பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன் மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் சார்பாக உரையாற்றினார்.

தினமும் மாநாடு நாத வேள்வியுடன் ஆரம்பமாகியது. திருத்தணி சுவாமிநாதன் திருக்குழுவனர், சிவஸ்ரீ வைத்தியநாத தேசிகர், பன்னிரு திருமுறை வளர்ச்சி மையத்தினர் இந்த நாத வேள்வியினை தினமும் அரங்கேற்றினர்.

இந்தியாவைச் சேர்ந்த பலர் சிறப்பு சொற்பொழிவாளர்களாக கலந்து கொண்டனர். பேராசிரியர் சொ.மீ.சுந்தரம், முருகன் அடியவர்கள் மற்றும் காவடி வரலாறு என்ற தலைப்பிலும், சிவஸ்ரீ கார்த்திகேசு சிவம், வேத ஆகமத்தில் முருகப் பெருமான் என்ற தலைப்பிலும், சைவ சித்தாந்தத்தில் முருக பெருமான் என்ற தலைப்பில் திருவாதுறை ஆதினப் புலவர் சிவஸ்ரீ குஞ்சித பாதம், இசைபாடல்களில் இன்தமிழ் முருகன் என்ற தலைப்பில் திருமதி சாரதா நம்பி அரூரன், பன்னிரு திருமுறைகளில் முருகப் பெருமான் என்ற தலைப்பில் ஈரோடு விஸ்வநாதன், முருக தத்துவமும் கந்தர் கரிவென்பாவும் என்ற தலைப்பில் பேராசிரியர் சிவகுமாரும், சித்தர் தொழிலில் முருகப் பெருமான் என்ற தலைப்பில் குருதேவ் மு.ம.செல்வராஜ், புராண இதிகாசங்களில் முருகப் பெருமாள் என்ற தலைப்பில் சிவஸ்ரீ கார்த்திகேய சிவமும் உரையாற்றினார்.

தென்.ஆபிரிக்க இந்து வழிபாட்டில் காவடியின் முக்கியத்துவம் பற்றி மலேசியாவைச் சேர்ந்த கலாநிதி சரஸ்வதி படையாச்சி ஆங்கிலத்திலும், இலக்கியத்தில் முருக பெருமாள் என்ற தலைப்பில் கிழாம்பூர் சங்கரசுப்பிரமணினும், முருகபக்தி என்ற தலைப்பில் ஆங்கிலேயரான பெற்றிக் ஹெரிகனும் உரையாடிய தோடு இந்தியாவைச் சேர்ந்த முனைவர் ரவி பாரதி கவிதையும் வாசித்தார்.

தினமும் மூன்று அரங்குகளில் ஆய்வுக் கட்டுரைகளை ஆய்வாளர்கள் சமர்பித்ததோடு மாலை கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. சிறப்பு சொற்பொழிவுகளுக்கு அருட் செல்வர் கர்ணல் கரு.சாத்தையா, முனைவர் தவத்திரு குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள், டான்ஸ்ரீ க.குமரன், மறவன்புலவு க.சச்சிதானந்தன், டத்தோ ஆ.தெய்வீகன், கலாநிதி டியோ ஆகியோர் தலைமைதாங்கினர்.

மாநாடு ஆரம்ப வைபவத்தில் அமைச்சர் டத்தோ ஸ்ரீ ஜி.பழனிவேல் கலந்துகொண்டார். பலரது வாழத்துரைகளும் இடம் பெற்றன. மாலை வேளைகளில் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. 'கந்தனுக்கு கதம்பமாலை' என்ற கலைநிகழ்ச்சியினை டாக்டர் சிபி (சோபனம் ஆர்ட்ஸ்) தயாரித்து வழங்கினார். பண்டிட் சொன்தோஸ் குமா சடர்ஜியின் கதக் நாட்டியம், சாவித்திரி சீர்னிவாசின் வயலின், கோலாலம்பூர் இந்திய கலாசார நிலையம் வழங்கிய கலை நிகழ்வுகள், டாகடர் சி.இராதகிருஷ்ணனின் புல்லாங்குழல் இசை, பத்மா நிர்த்தியாலய வினோஸ்ரீ சங்கரின் மாணவிகளின் பரநாட்டியம், ஸ்ரீமதி ரூபாலவாணிய்யாவின் பரதநாட்டியம், ஸ்ரீமதி ரூபாலாவாணிய்யாவின் பரதநாட்டியம், பிரியா கிருஷ்ணதாசின் மோகினியாட்டம், ரூபா லாவன்யா நாட்டியாலயத்தின் பரத நாட்டியங்கள் ஆகியன இடம்பெற்றன.

இம் மாநாட்டில் இரண்டு மலர்கள் வெளியிடப்பட்டன. அனைத்துலக முருக பக்தி மாநாடு 2012 சிறப்பு மலர், பல்நோக்குப் பார்வையில் முருகத் தத்துவம் ஆகியவையே அவை. ஆய்வாளர்களது ஆய்வு கட்டுரைகள் அனைத்தும் பல்நோக்குப் பார்வையில் முருகத்தத்துவம் என்ற நூலில் உள்ளன. இரண்டாவது மலரில் வாழ்த்துச் செய்திகளும் கட்டுரைகளும் அடங்கியுள்ளன.



கட்டுரையாளர், கலாநிதி துரை மனோகரன் மற்றும் பேராசிரியர் புஷ்பரட்ணம்

ஆய்வு மாநாடு மூன்று அரங்குகளில் நடைபெற்றது. 'ஞானவேல்சபை', 'மயில்வாகனம் சபை', 'சேவற்கொடி சபை' என்பதே அவையாகும். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த பேராசிரியர் அ.நோ.கிருஷ்ணணி 'தமிழ் இலக்கியங்களில் முருக வழிபாட்டின் சிறப்பு: திருமுருகாற்றுப்படை அடிப்படையாகக் கொண்டு ஓர் ஆய்வு' என்ற தலைப்பிலும், யாழ் பல்கலைக்கழக வரலாறு மற்றும் தொல்லியல் துறை தலைவர் பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் 'இலங்கையில் முருக வழிபாட்டின் தோற்றம் வளர்ச்சியும்-தொல்லியல் சான்றாதாரங்களை முதன்மையாகக் கொண்ட ஆய்வு' என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரையும் பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் வ.மகேஸ்வரன் 'முருகனும் தமிழும்' என்ற தலைப்பிலான கட்டுரையும், பேராதனை பல்கலைக்கழக கல்விசார் சிரேஷ்ட துணை நூலகர் ஆர்.மகேஸ்வரன் 'இலங்கையில் முருக வழிபாட்டின் வரலாற்றினைக் கூறும் நாட்டுப்புறவியல்' என்ற ஆய்வு கட்டுரையையும், பேராதனை பல்கலைக்கழகத்தை சேர்ந்த கலாநிதி துரை. மனோகரன் 'கதிரைமலைப் பள்ளு பேசும் கதிர்காம முருகன்' என்ற தலைப்பில் ஆய்வு கட்டுரையையும் இலங்கையரான லண்டனைச் சேர்ந்த காலநிதி இரத்தினம் நித்தியானந்தன்' 'முருகும் முருகனும்' என்ற கட்டுரையையும், கிழக்கு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த திருமதி எஸ்.கேசவன் 'ஆளுமை வளர்ச்சியில் முருக வழிபாடு-சமூக உளவியல் நோக்கு' என்ற தலைப்பில் ஆய்வு கட்டுரையும், இந்து கலாசார திணைக்கள பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் 'முருக வழிபாடும் முருகன் அடியார்களும்' என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரையும், கிழக்கு பல்கலைக்கழகத்தை சேர்ந்த திருமதி ஷார்மிளா ரஞ்சித்குமார், 'தமிழ் இலக்கியம் காட்டும் முருகன் பற்றிய கூத்துகளும், இன்றைய பரதநாட்டிய இசையில் முருகள் பற்றிய ஆடல்களும்' என்ற தலைப்பிலும், மட்டக்களப்பு ஆசிரியை திருமதி சிவானந்த ஜோதி ஞானசூரியம் 'முருக வழிபாடும் வாழ்க்கை நெறியும்' என்ற ஆய்வினையும் சமர்பித்தனர்.



(31ஆம் பக்கம் பார்க்க)

அட்டையை அலங்கரிப்பவர்கள்
விஷால், த்ரிஷா



ஒக்டோபர் மாத வானவில் 01ம் திகதி முதல் கடைகளில்...

வண்ண வானவில்
Vanna Vaanavil
சிந்தையெங்கும் வர்ணஜாலம்
எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு
– பாரதிதாசன்

முகவரி:
ஆசிரியர்,
வண்ண வானவில்
த.பெ. இல. 1218
கொழும்பு

Address:
Editor,
Vanna Vaanavil,
P.O. Box No: 1218
Colombo

தொலைபேசி: 0112429275
E-mail: vannavaanavil@gmail.com

விற்பனை தொடர்பாக தொடர்பு கொள்ள: 0112333924, 0112429378, 0112429381



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரேஸ் உடலில் புகுந்த அப்பாவின் ஆவி!



ரிஷி

மறு நாள் மாலை.

கிரேஸ் வழமை போல தன் வேலைகளை முடித்துக் கொண்டு கணவருக்காக காத்திருந்தாள். கந்தையா கிளாக்கர் வீடு வந்ததும் இருவரும் சாப்பிட்டு முடித்து உறங்குவதற்குத் தயாரானார்கள். அப்போது கீழே லயத்தில் உடுக்கு அடிக்கும் ஓசை கேட்டது. தோட்டங்களில் சடங்குகள் செய்வதும் சில சமயம் பேய் ஓட்டுவதும் உடுக்கு அடிப்பதும் அவ்வப்போது நிகழ்பவை தான். யாரும் இதைப் பொருட்படுத்துவதில்லை.

உடுக்கு அடிக்கும் ஓசை இரவில் தெளிவாகக் கேட்டது. என்ன விஷயம் என கிரேஸ் கேட்க, கிளாக்கருடன் அன்று ஏதோ வேலை விஷயமாக வந்திருந்த மாடசாமி, பணிய லயத்து சொர்ணத்துக்கு பேய் பிடித்திருப்பதாகவும் பேய் ஓட்ட சடங்குகள் செய்யப்படுவதாகவும் சொன்னான். பின்னர் சமையலறை பக்கமாக இருந்த அறையில் படுப்பதற்காகச் சென்றான் மாடசாமி.

படுப்பதற்கு முன் கைகால் அலம்பச் சென்ற கிரேஸ், படுக்கை அறைக்குள் நுழைந்தபோது அவள் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. அடிக்கடி பெருமூச்சு விட்ட கிரேஸ் இடையிடையே உம்...உம்... என்று ஒலி எழுப்பினாள். பத்திரிகை படித்துக் கொண்டிருந்த கந்தையா இதை பொருட்படுத்தவில்லை. கையில் வைத்திருந்த டவலை அவள் வீசி எறிந்த போது தான், அவளை நிமிர்ந்து பார்த்த கிளாக்கர், அதிர்ந்து போனார்.

தன் மனைவியை அப்படி ஒரு கோலத்தில் அவர் பார்த்ததே இல்லை. நெருப்புத் துண்டங்கள் போலக் கண்கள் சிவந்திருந்தன. முகம் கறுத்து உணர்ச்சியற்றிருந்தது. தலைவிரி கோலமாக அவள் அவரைப் பார்த்த பார்வையில் வெறுமை மண்டிக் கிடந்தது. ஒவ்வொரு மூச்சுக் காற்றும் பாம்பின் சீறல் போல வெளிவந்து கொண்டிருந்தது.

''என்ன கிறேஸ், என்ன நடந்தது? உடம்புக்கு சுகமில்லையா?'' கேட்ட படி எழுந்த கணவரை அவள் போட்ட அதட்டல் நிலை குலையச் செய்தது.

''யார்டா நீ? அப்படியே நில்! நான் யார் தெரியுமா? சுடலை மாடன். இரத்தப் பழி எடுக்காமல் இங்கிருந்து போக மாட்டேன்டா!''

கிரேஸ் கரகரத்த ஆண் குரலில் கிறீச்சிட்டாள். சடசடவென தலைமயிரை கோதிவிட்டு தலையை இப்படியும் அப்படியுமாக ஆட்டினாள். தோள் பட்டைகளை கைகளால் சடசடவென தட்டிவிட்டாள்.

''இங்கே பார்டா! அவ்வளவும் மண்... உடம்பில் இருந்து மண்ணா கொட்டுது... இப்போதான் சுடுகாட்டில் இருந்து எழும்பி வந்தேன்... மேலெல்லாம் மண்'' சடாடென காலை விரித்தபடி நாட்காலியில் அமர்ந்து கந்தையா கிளாக்கரை கூர்ந்து பார்த்தாள் கிரேஸ். கிளாக்கருக்கு குப்பென வியர்த்தது. அவளது பேச்சும் தோற்றமும், ஆண் குரலும் அவள் நினைத்தால் அவரை தூக்கி பந்தாடி விடுவாள் போலத் தெரிந்தது.

எதுவும் பேசாமல் மெல்ல எழுந்து வெளியே சென்ற அவர், அறைக் கதவை வெளிப்புறமாகப் பூட்டினார். மாடசாமியைத் தேடிச் சென்றார். மாடசாமியை எழுப்பி வெளியே அழைத்து மெல்லிய குரலில் தனக்கு நேர்ந்த அனுபவத்தை சொன்னார். அவன் விக்கித்துப் போனான்.

''சேர், கீழே பேய் விரட்டுறாங்க.. வெளியே வந்த பேய் அம்மாவை பிடிச்சிருச்சோ தெரியலை... இப்போ நாம் எதுவும் செய்ய வேண்டாங்க.. எனக்கு கொஞ்சம் தண்ணி மந்திரிக்க தெரியுமுங்க. அவங்க திரும்பவும் சத்தம் போட்டா அப்போ பாத்துக்குவோம். இப்போ நீங்க வேற ரூம்ல படுத்துக்குங்க உள்ளே போக வேண்டாம். அறை வாசல்லில் தண்ணி மந்திரிச்சு நான் ஊத்துறேன். காலையில் பாத்துக்குவோம்...''

குழப்பத்துடன் கந்தையா வேறு அறையில் உறங்கச் சென்றார். அவருக்கு உறக்கமே பிடிக்கவில்லை. யார் என்ன செய்திருப்பார்கள்? இவளுக்கு என்ன நடந்தது?

ரொம்ப நேரத்தின் பின்னர் இருவரும் தூங்கிப் போனார்கள். கிரேஸ் அறையில் இருந்து எந்த சத்தமும் வரவில்லை. காலையில் கந்தையா கிளாக்கர் கதவைத் திறந்த போது கிரேஸ் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள். மாடசாமியிடம் இரவில் நடந்தது பற்றி வெளியே மூச்சுவிட வேண்டாம் என்று அவர் கூறி வைத்தார். தோட்டம் முழுவதும் கதை பரவி விடுமோ என்ற அச்சம் அவரைப் பிடுங்கித் தின்றது.

ஒன்பது மணியளவில் விழித்தெழுந்த கிரேஸ், ''ஐயோ, இவ்வளவு நேரம் தூங்கி விட்டேனே, நீங்களாவது எழுப்பியிருக்கக் கூடாதா? சுத்த மோசம் நீங்கள்'' என்று குறைபட்டுக் கொண்டே அரக்க பரக்க சமையல் அறையில் நுழைந்து வேலையைத் தொடங்கினாள்.

அலுவலகம் புறப்பட்டுக் கொண்டிருந்த கந்தையா கிளாக்கர் ஒன்றும் பேசவில்லை. முன்னிரவில் நடந்த விஷயம் பற்றி எதுவுமே அவள் பேசவில்லை. அவள் வழமை போலவே நடந்து கொண்டாள். அன்றிரவும் எதுவும் நடக்கவில்லை.

நாட்கள் சில நகர்ந்தன. பௌர்ணமிக்கு முதல் இரவு அந்தக் கூத்து திரும்பவும் மேடையேறியது. அதே மூர்க்கம், ஆவேசம், ஆக்ரோஷம், இது சுமார் ஒரு மணித்தியாலத்துக்கு நீடித்தது. சுடலை மாடனுக்குப் பதிலாக இறந்து போன அவளது தந்தையின் ஆவியே வந்திருப்பதாக அவள் சொன்னாள். ''நீ ஒரு மனுஷனா? உனக்குப் போய் என் மகளை கொடுத்தேனே! மகளை ஒழுங்காக வைத்து பார்க்கவில்லையானால் நார் நாராக உன்னை கிழித்து விடுவேன்'' என அவள் அப்பா பேசுவதைப் போலவே ஆண் குரலில் ஆவேசப்பட்டாள் கிரேஸ். அதுவும் ஒரு மணித்தியாலத்துக்கு நீடித்தது. பின்னர் குப்புறப்படுத்து உறங்கிப் போனாள்.

மறுநாள் கந்தையா கிளாக்கர் மாடசாமியிடம் சொல்லி ஒரு மாந்திரிகரை ஏற்பாடு செய்தார். கந்தையா தன் மனைவியிடம் பக்குவமாக விஷயத்தை எடுத்துச் சொன்னார். அவள் முதலில் தனக்கு நேர்ந்திருப்பதை நம்ப மறுத்தாள். மாடசாமியும் 'நோனா'விடம் இரவுகளில் அவள் மாறிப்போய் ஒரு ஆணைப் போலவே நடந்து கொள்வதைச் சொல்லி, மாந்திரிகரைப் போய்ப் பார்த்தால் எல்லாம் சரியாகி விடும் என்று சொன்னான். இறுதியில் அவள் அவர்களுடன் ஒத்துழைக்க சம்மதித்தாள்.

மூவரும் ஒரு மாந்திரிகரை சந்தித்தார்கள். முழு விவரத்தையும் கிளாக்கர் மாந்திரிகரிடம் சொன்னார். சுடலை மாடனின் பார்வை இருப்பதாகவும் இறந்துபோன அவள் அப்பாவை மாடன் கூட்டி வந்து உடலில் புகுந்து கொள்வதாகவும் கூறிய மாந்திரிகர். பரிகாரங்கள் செய்யாவிட்டால் துஷ்ட ஆவிகளின் வீரியமும் மூர்க்கமும் அதிகரித்து அது கந்தையாவுக்கும் கிரேசுக்கும் ஆபத்தாக முடியலாம் என்றார்.

ஒரு தொவில் செய்ய வேண்டும். அதை இங்கேயே வைத்துக் கொள்வோம் என்ற யோசனையை கந்தையா ஏற்றார். தொவிலுக்கான நாளும் குறிக்கப்பட்டது.

ஒரு நாள் இரவு மாந்திரிகரின் வீட்டில் தொவில் ஆரம்பமானது. மந்திர உச்சாடனம். வேகம் பிடிக்கவே கிரேஸ் தலைவிரி கோலமாக ஆடத் தொடங்கினாள். அந்த வேகத்தையும் ஆக்ரோஷத்தையும் பார்த்த கந்தையா, இவளுடனா இவ்வளவு காலம் குடித்தனம் நடத்தினோம் என்று ஆச்சரியப்பட்டார். நள்ளிரவைத் தாண்டி ஒரு கறுப்பு சேவலின் தலையைத் துண்டித்து இரத்தக் காவு கொடுத்த பின்னரேயே அவள் அடங்கி, சோர்ந்து விழுந்தாள்.

அன்றைய தினம் அப்பாவின் ஆவியோடு இன்னும் இரண்டு 'தோழர்'களும் கிரேஸ் உடலில் குடி புகுந்திருப்பதாக மாந்திரிகர் சொன்னார். இரண்டாயிரம் ரூபா கைமாறியது. மூவரும் மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினார்கள்.

இரண்டு மாதங்கள் பிரச்சினையின்றி கழிந்தன. ஒரு நாள் சுமார் ஏழு மணியளவில் மீண்டும் கிரேஸ் சந்திரமுகியாக மாறினாள். இம்முறை அப்பாவின் குரலில் மட்டுமன்றி கீச்சிக்குரலிலும் ஒரு குழந்தையின் குரலிலும் மாறி மாறி பேசினாள். நடு நடுவே பன்றியின் உறுமலும் வந்தது.

''மந்திரவாதிகளுக்கு நான் மசிவேனா? என்னை நீ ஏமாற்ற முடியுமா? நினைத்தால் உன்னை நார் நாராக கிழித்து குடலை உருவி மாலையாக போடுவேன்'' என்று கத்தியவள் சாரியை அவித்து எறிந்தாள். தூஷண வார்த்தைகளை கொட்டித் தீர்த்தாள்! கந்தையா என்ன செய்வது என்று தெரியாமல் நடு நடுங்கினார். லீட்டர் கணக்கில் தண்ணீரைக் குடித்து நிலத்தில் விழுந்து புரண்டாள். சில சமயம் புரியாத மொழியில் படு வேகமாக பேசினாள்.

இந்த நேரத்தில் வாசல் கதவு தட்டப்பட்டது. மாடசாமி சரியான தருணத்தில் வந்தான் என்ற ஆறுதலுடன் கதவைத் திறந்தார் கந்தையா. வாசலில் நின்றது மாடசாமி அல்ல. அந்த வீட்டுக்கு அடிக்கடி வந்து போகும் டேவிட் அங்கே நின்று கொண்டிருந்தான். முதலில் முகம் கறுத்த கந்தையா சமாளித்தபடி அவனை வரவேற்றார். ஒரு ஆண் துணை கிடைத்ததில் அவருக்கு மகிழ்ச்சி!

கால்களை விரித்து போட்ட படி பாவாடை, பட்டன் கழன்ற ஜெக்கட்டுடன் சுவரில் சாய்ந்திருந்த கிரேஸ் தன் மருண்ட பார்வையை டேவிட் மீது மேய விட்டாள். அவளது கோலத்தை மிகுந்த திகைப்புடனும் ஆயிரம் கேள்விகளுடனும் டேவிட் பார்த்துக் கொண்டிருக்க, விருட்டென எழுந்தாள் கிரேஸ். சட்டென அறைக்குள் ஓடி மறைந்தாள்.

தன் நிலையை டேவிட்டிடம் சுருக்கமாகக் கூறிய கந்தையா அவனை வெளியே அமரச் சொல்லி விட்டு அறைக்குள் நுழைந்தார்.

ஒழுங்காக சாறி அணிந்து தலை சீவி சாதாரண பெண்ணாக கீழே பார்த்தபடி அறை மூலையில் ஒரு முக்காலியில் அமாந்திருந்தாள் கிரேஸ். துஷ்ட ஆவிகள் அவளை விட்டுப் போயே போயிருந்தன. (அடுத்த இதழிலும்...)

வண்ண வானவில்

வண்ண வானவில் விளம்பரக் கட்டணங்கள்

| | |
|---|---|
| முழுப்பக்கம் (கறுப்பு வெள்ளை) | - ரூ 25,000.00 |
| கறுப்பு மற்றும் ஒரு கலர் | - ரூ 28,000.00 |
| கறுப்பு மற்றும் இரண்டு கலர் | - ரூ 30,000.00 |
| முழு வர்ணப் பக்கம் | - ரூ 32,000.00 |

சாதாரண விளம்பரங்கள்

| | |
|---|---|
| கறுப்பு வெள்ளை | - ரூ 125.00 கலம் செ.மீ |
| கறுப்பு மற்றும் ஒரு கலர் | - ரூ 140.00 கலம் செ.மீ |
| கறுப்பு இரண்டு கலர் | - ரூ 150.00 கலம் செ.மீ |
| முழு வர்ணம் | - ரூ 160.00 கலம் செ.மீ |

12% வட் வரி சேர்க்கப்படும்.

தொடர்பு கொள்க : 0112429367
ப(f)க்ஸ் : 0112429320

வண்ண வானவில்

சந்தா விபரம்

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.30 |
| 1 வருட சந்தா | ரூ.360.00 |
| 6 மாத சந்தா | ரூ.180.00 |
| 3 மாத சந்தா | ரூ.90.00 |

சந்தாவை செலுத்தியதும் நாம் உங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்வோம் எமது ஏஜண்ட்டிடம் இதனை பெறலாம்.

தபால் மூலம் பெறுவதற்கு:

| | |
|---|---|
| 1 வருட சந்தா | ரூ.552.00 |
| 6 மாத சந்தா | ரூ.276.00 |

மேலும் விபரங்களுக்கு:
011-2319760, 2429444
மின்னஞ்சல்:
subscription@lakehouse.lk




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்ன... மன்னர்
போர்களத்தில் வீரன்...
வீரன் ஏன் ஓடுறார்?

அட நீ வேறா ஏ... நன்...
[we run] ஆகையால
எல்லோரும் ஓடுவோம்னு
இங்கிலீஷ்ல சொல்றாரு!

- வினோத்



ஆசிரியர்: பாம்பைப் போலவே
தோல் உரிக்கும் இன்னொரு
உயிரினம் சொல்லு

மாணவன்: ஆசிரியர் சேர்

- எஸ். ஜெகதலன்



# விஜய் அன்டனிக்கு பாட்டெழுதச் சென்ற அஸ்மின்

**மூன்று நாட்கள்**
**400 தாள்கள்**
**60 பாடல்கள்**
**அன்டனியை திருப்திப்படுத்த...**

தென்னிந்திய தமிழ் சினிமாத்துறை ஒரு பெருங்கடல். அதில் இறங்குவது தமிழக இளைஞர்களுக்கே குதிரைக் கொம்பு. காசு, பசி, தூக்கம், குடும்பம் ஆகியவற்றை தியாகம் செய்தால்தான் அதன் கரையைத் தொடலாம். நீரில் இறங்குவதற்கு மேற்கூறிய தியாகங்களுடன் பொறுமையும் சகிப்பும் எக்கச்சக்கமாக இருந்தாக வேண்டும். இல்லையென்றால் தூர இருந்தே கடலைப் பார்த்து ரசித்துக் கொண்டிருக்க வேண்டியது தான்.

இந்த நிலையில் கரையில் இருந்த ஒரு இலங்கைக் கவிஞரை கைப்பிடித்து அழைத்துச் சென்று கடலில் இறக்கியிருக்கிறார் ஒரு தென்னிந்திய தமிழ் இசையமைப்பாளர்.

அந்த இசையமைப்பாளர் வேறும் யாரும் அல்ல தற்போது தயாரிப்பாளராகவும் நடிகராகவும் உயர்ந்துள்ள இசையமைப்பாளர் விஜய் அன்டனி.

இலங்கை இசைத்துறையுடன் ஏற்கனவே கைகோர்த்துக் கொண்டுள்ள இசையமைப்பாளர் விஜய் அன்டனி, 'ஆத்திசூடி' பாடல் மூலம் இலங்கைப் பாடகர் திலேஸ் கனகரட்ணத்துக்கு தமிழ் திரைப்படத்துறை அறிமுகத்தை பெற்றுத்தந்தவர். 'வேட்டைக்காரன்' படத்தின் மூலமும் சில இலங்கையர்களுக்கு இவர் வாய்ப்பளித்திருந்தார். தனது தயாரிப்பில் உருவாகிய 'நான்' என்ற புதிய தமிழ் படத்தில் பாடல் எழுதும் வாய்ப்பை இலங்கைக் கவிஞர் ஒருவருக்கு கொடுத்திருக்கிறார். அந்த இலங்கை கவிஞர்தான் பொத்துவில் அஸ்மின். அஸ்மினுக்கு இந்த வாய்ப்பு எப்படி கிடைத்தது என்று 'வானவில்' சார்பாக கேட்டோம்.

''நான் என்ற தனது புதிய படத்தின் மூலம் புதிய ஒருவருக்கு திரைப்படப் பாடல் ஒன்றை எழுதும் வாய்ப்பை வழங்க விரும்பியிருக்கிறார், இசையமைப்பாளர், விஜய் அன்டனி. படத்தின் தயாரிப்பாளரும் அவர்தான். இது தொடர்பாக வலைப்பதிவு ஊடாக ஒரு போட்டி நடத்தப்பட்டது. தரப்பட்ட தத்தகாரத்துக்கு ஏற்ப பாட்டு எழுத வேண்டும். 20 ஆயிரம் பேருக்கு மேல் இதில் கலந்து கொண்டு பாட்டு எழுதினர். இதில் ஒரு பாடலைத் தெரிவு செய்து அவரை சென்னைக்கு அழைத்தார்கள். அவர் தான் நான்'' என்கிறார் அஸ்மின்.

கடந்த மார்ச் மாதம் 10ஆம் திகதி விஜய் அன்டனியின் அழைப்பின் பேரில் சென்னை சென்றார் அஸ்மின். அன்றைய இரவை ஹோட்டலில் கழித்த அஸ்மின் அடுத்த நாள் இசையமைப்பாளரின் ஸ்டூடியோவுக்கு சென்றார். அங்கு அவரை கைலாகு கொடுத்து வரவேற்ற இசையமைப்பாளர், எழுத வேண்டிய பாடலுக்காக எடுக்கப்பட்ட காட்சிகளை போட்டுக் காட்டியிருக்கிறார்.

அது பின்னணியில் ஒலிக்கும் ஒரு தத்துவப்பாடல். ஆள் மாறாட்டம் செய்யும் ஒருவன் செய்யும் செயல் சூழ்நிலையை பொறுத்து தப்பான செயல் அல்ல என்பதை விளக்கிக் கூறும் பாடல் அது.

''இந்த காட்சிகளுக்குத்தான் பாட்டெழுத வேண்டும். உங்கள் திறமையை இனி எழுத்தில் காட்டுங்கள் மாலை சந்திக்கிறேன்'' என்று கூறிவிட்டு சென்று விட்டார் இசையமைப்பாளர்.

அந்த குளு குளு அறையிலும் படபடப்பால் வியர்த்திருக்கிறது அஸ்மினுக்கு. சிறிது நேரத்துக்குப் பின் தனது இயல்பான சுபாவத்துக்கு வந்த அஸ்மின் பாடல் வரிகளை சேர்த்திருக்கிறார். பல்வேறு கோணங்களில் சிந்தித்து முழுப் பாடலையும் உருவாக்கியிருக்கிறார்.

மாலையில் வந்த விஜய் அன்டனி வரிகள் நன்றாக இருப்பதாக கூறிவிட்டு வரிகளில் மாற்றங்கள் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

இசையமைப்பாளர் விஜய் அன்டனிக்கு நல்ல தமிழ் இலக்கிய அறிவு உண்டு. அவரது பாட்டனார் தமிழில் முதல் நாவல் எழுதியவர்களில் ஒருவர்.

இத்துடன் பாடல் எழுதி முடிந்தது என்று நினைத்திருக்கிறார் அஸ்மின். எனினும் தொடர்ந்து மூன்று பகல் இரண்டு இரவு என்று சுமார் 400 தாள்களை எழுதி எழுதி கிழித்து 60 மேற்பட்ட பாடல்களை எழுதிய பிறகு அவற்றை அடித்துத் திருத்தி தனக்கு வேண்டிய முழுப் பாடலையும் தனது மனதுக்கு பிடித்தவாறு எழுதி வாங்கிக்கொண்ட பின்னரே தனது திருப்தியை வெளியிட்டிருக்கிறார் விஜய் அன்டனி.

பாட்டுக்கு மெட்டமைப்பது எளிது. ஆனால் மெட்டுக்குப் பாட்டெழுதுவது சிக்கலும் சிரமுமானது.

பூமி தான் காசுக்கு வாலாட்டும்
பொய்களை தாலாட்டும்
உண்மைக்கு தீ மூட்டும்
ஏற்காதே போனது போகட்டும்
சந்தோஷம் கூடட்டும்

என்ற அஸ்மினின் வரிகளை பாராட்டியிருக்கிறார் விஜய் அன்டனி.

இதனையடுத்து இடம்பெற்ற 'நான்' இசை வெளியீட்டு விழாவின் போது கவிப்பேரரசு வைரமுத்து, இசையமைப்பாளர் கங்கை அமரன் ஆகியோரின் பாராட்டுகளையும் ஆசீர்வாதத்தையும் இந்த வரிகள் அஸ்மினுக்கு பெற்றுத் தந்தன.

சக்தி டி.வியின் இசை இளவரசர்களில் ஒருவராக அறிமுகமான கவிஞர் அஸ்மின் கிழக்கிலங்கையில் பொத்துவிலில் பிறந்தவர். இவர் ஏற்கனவே இலங்கையில் தயாரிக்கப்பட்ட பனை மரக்காடு, வல்லைவெளி மற்றும் வெளிவராத மற்றொரு இலங்கை தமிழ் படத்திலும் பாடல் எழுதியிருக்கிறார்.

- ராம்ஜி

# யாழ்ப்பாணத்தில் சுமை தாங்கிகள்

பல வருடங்களுக்கு முன் போக்குவரத்துச் சாதனங்கள் குறைவாக இருந்தது மட்டுமல்ல, தொலைத்தொடர்பு சேவைகள், மருத்துவ வசதிகள் என்பனவும் முன்னேற்றமடையாத நிலையில் இருந்தன.

ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குச் செல்ல வேண்டுமானால் நடைப் பயணமாக அல்லது மாட்டு வண்டிகளில் செல்வது வழக்கமாயிருந்தது. இதனால் இடையிடையே இளைப்பாறவும், மழை வெயிலுக்கு ஒதுங்கி நிற்கவும், இருண்ட பின்னரோ அல்லது இடைவழியில் ஏற்படும் அனர்த்தங்களின் போதோ அல்லது நோய் வாய்ப்படல், கர்ப்பிணிப் பெண்களுக்கு பிரசவ வலி ஏற்படல் போன்ற நிலைமைகளின் போதோ வழியில் தங்கிச் செல்லக் கூடியதாக தெருவோரங்களில் இளைப்பாறு மடங்களும், வழிப்போக்கர் மடங்களும் அமைக்கப்பட்டிருந்தன. இவற்றுக்குப் பக்கத்தில் கேணி அல்லது கிணறு, நீர்த்தொட்டி, ஆவுரஞ்சிக் கல், சுமை தாங்கி என்பவையும் மரபொன்றாகக் காணப்பட்டன.

கால்நடைகள் தாமாக தண்ணீர் அருந்தக் கூடிய வகையில் பக்கம் கொண்டதாக தொட்டிகள் அமைக்கப்பட்டிருந்தன. தாகம் தீர்த்த கால்நடைகள் தம் உடலின் உளைவையும் உடலிலுள்ள பேன், உண்ணிகளையும் தேய்த்து நீக்கிக் கொள்ளும் வகையில் ஆவுரஞ்சிக் கல் உயரமாக இருக்கும்.

இவற்றுடன் இணைந்ததாக அமைக்கப்பட்டிருந்த சுமைதாங்கி இன்னொரு வகையில் முக்கியத்துவம் பெற்று விளங்கியது. அதாவது, தமது தலைகளில் அல்லது தோள்களில் சுமையோடு நடைப்பயணமாக வருபவர்கள் எவரது உதவியுமின்றி தம் சுமையை இறக்கி வைப்பதற்கு சுமைதாங்கி பெரிதும் உதவியது. தாகம் தீர்த்து இளைப்பாறிய பின்னர், ஏற்கனவே சுமைதாங்கியில் இறக்கி வைத்த சுமையை மீண்டும் எவரது உதவியுமின்றி நிலையில் நின்றவாறே தோளில் தூக்கிக் கொள்வர்.

பொதுவாகக் குறிப்பிடுவதானால் சுமையை இறக்கிவைக்கவும் அல்லது தூக்கிவிடும் பணிகளை சுமைதாங்கிகள் செய்துவந்தன என்று சொல்லலாம்.

முன்னைய காலத்தில் யாழ் குடாநாட்டின் பல இடங்களில் சுமைதாங்கிகள் காணப்பட்டன. குறிப்பாக வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் பகுதிகளிலேயே இவை அதிகமாக காணப்பட்டன. இவை நீள் சதுரமானதாக இரண்டு வகையான வடிவங்களில் அமைந்திருந்தன. ஒன்று நடுவில் உயர்ந்தும், அதன் இரு பக்கங்கள் தாழ்ந்தும் இருந்தன. மற்றைய பகுதிகள் போன்று கிழக்கில் மேலாக ஒரு நிலையில் காணப்பட்டன.

தெருவோரங்களில் காணப்படும் மடங்கள், சத்திரங்கள் … கட்டுவிக்கப்பட்டன. ஆனால் சுமைதாங்கி, நீர்த்தொட்டி என்பன ஓரளவு வசதிபெற்றிருந்த சாதாரண மக்களால் தமது குடும்பத்தைச் சேர்ந்த இளம் வயதில் இறந்தவர்களின் ஞாபகார்த்தமாக கட்டுவிக்கப்பட்டன என்று தெரியவருகிறது.

இப்பொழுது வீதி திருத்த வேலைகள், வீதி விஸ்தரிப்பு என்பன காரணமாக பெரும்பாலான சுமைதாங்கிகள் அமைந்த இடங்களிலிருந்து அகற்றப்பட்டுவிட்டன. சில சேதமடைந்த நிலையிலும் காணப்படுகின்றன. போக்குவரத்து வசதிகளும் ஏற்பட்ட பின்னர் வெகுதூரம் நடைப் பயணம் மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்படாததால், சுமைதாங்கிகளின் பயன்பாடு படிப்படியாகக் குறைந்து இப்போது முற்றுமுழுதாக மறைந்துவிட்டது.



- அ. கனகசூரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயத்தின் மடியில் கிழக்கிலங்கை...


இலங்கையின் நீண்ட பாலமான கிண்ணியா பாலத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திறந்து வைத்தபோது...

பின்தங்கிய கிழக்கு மாகாணத்தை ஏனைய மாகாணங்களின் தரத்துக்கு அபிவிருத்தி திட்டங்கள் மூலம் கொண்டு வருவதற்காக அரசு தன்னாலான சகல நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறது. இத்திட்டங்கள் அனைத்தினதும் இறுதி குறிக்கோள் அப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதாகும். அதற்காக பல்வேறு துறைகளை உள்வாங்கிய அபிவிருத்தி கருத்திட்டங்கள் துரிதமாகவும் சிறப்பாகவும் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவைகளுள் சில கருத்திட்டங்கள் தற்போது வெற்றிகரமாக முடிவுற்று வெற்றிகரமாக முடிவுற்று கொண்டிருப்பதில் அரசின் தொடர்ச்சியான கண்காணிப்பும், வழிநடத்தலும் முக்கிய காரணியாக அமைந்தது.

## மின்சாரம் வழங்குதல்

கிழக்கு பிரதேச மக்களை வாட்டி வதைத்த மற்றொரு பிரச்சினை. நீண்ட கால யுத்தத்தின் விளைவாக மின்சாரம் வழங்குவதற்கு உதவும் தொகுதிமுறைகள் சேதமாக்கப்பட்டமையாகும்.

கிழக்கில் வாழ்கின்ற மக்களின் அன்றாட தேவைகளுக்காகவும் கைத்தொழில் உட்பட பாரிய அபிவிருத்தி திட்டங்களுக்காகவும் மலை நீர் மின்சார உப நிலையங்களை விரிவாக்கவும் திருகோணமலை-கிராங்கொடை-அம்பாறை-ரன்தம்பே மற்றும் வாழைச்சேனை ஆகிய இடங்களுக்கிடையே மின் மாற்றங்கள் மற்றும் விநியோக கம்பிகள் பொருத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த அபிவிருத்தி திட்டங்களின் பயனாக 2015ஆம் ஆண்டாகும் போது கிழக்கு

# பசுமையின் உதயம் நோக்கி வீறுநடை போடும் கிழக்கிலங்கை

## வீதி அபிவிருத்தி

கிழக்கு மாகாணம் 857 கிலோ மீட்டர் நீளமான தேசிய வீதிகளையும் 1100 கி.மீ நீளமான மாகாண வீதிகளையும் 8250 கி.மீ நீளமான கிராம வீதிகளையும் உள்ளடக்கியதாக 10207 கி.மீ நீள வீதி வலையமைப்பை கொண்டுள்ளது.


கிழக்கு மாகாண அபிவிருத்தித் திட்டங்கள்

இருப்பதுடன் அதன் பயன்களை கிழக்கு மாகாண மக்கள் அவர்கள் தமிழ் அல்லது முஸ்லிம் மக்களாக இருந்தாலும் சரி, சிங்களவர்களாக இருந்தாலும் சரி தற்போது அனுபவித்து வருகிறார்கள்.

யுத்தம் முடிவுற்ற உடனேயே அரசு தொடர்ச்சியாக அமுல் நடத்திய அபிவிருத்தி கருத்திட்டங்கள், கிழக்கின் உதயம் வேலைத்திட்டம் ஊடாக சிறப்பாக கண்காணிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட மின்சார பிறப்பாக்க கருத்திட்டங்கள் பல வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. அதற்கு புறம்பாக உத்தேச சம்பூர் நிலக்கரி மின்நிலையம் பூர்த்திசெய்யப்பட்ட பின்பு 500 மெகாவோட் மின்சாரம் மக்களின் தேவைக்காக வழங்க ஆரம்பம் செய்யப்பட்டுள்ளது.

2011 தொடக்கம் 2015 வரையிலான காலகட்டத்தில் ஹபரண, திருகோண-மாகாணத்தில் மின்வசதியளிக்கும் வாய்ப்புகள் 70% தொடக்கம் 100% வரை அதிகரிக்கப்பட்டு விடும். இவ்வாறு கிழக்கு மக்களின் மின்சார தேவைகளை நிவர்த்தி செய்ய அரசின் முறையான திட்டமிடலே முக்கிய காரணம் என்பதை நாம் மறந்துவிட முடியாது.

மின்சார வளங்கள் பற்றிய அரசின் தொலைநோக்கு மஹிந்த சிந்தனையில் பின்வருமாறு கூறப்படுகிறது.

''2012 ஆம் ஆண்டாகும் போது 100 சதவீதமான வீடுகளுக்கு தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்கவும் 2020 ஆகும் போது அதிகரிக்கும் மின்சார தேவைக்காக குறைந்த பட்ச மின் உற்பத்தி திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு அவசியமான மின் நிலையங்களை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகளை நான் முன்னெடுப்பேன்"

இந்நோக்கின் பயனாகத்தான் இதை கருத்திட்டங்களுக்கான முதலீடுகளை சிறப்பாகக் கண்காணித்து மக்களின் அடிப்படை தேவைகளில் ஒன்றான மின்சார வளங்களை கிழக்கில் உருவாக்கும் நடவடிக்கையை அரசு மேற்கொண்டு வருகிறது.

2005/2009 காலப்பகுதியில் 368 கி.மீ நீளமான தேசிய வீதிகளும் மற்றும் 362 கி.மீ நீளமான மாகாண வீதிகளும் புனரமைக்கப்பட்டுள்ளன.


இதற்கு புறம்பாக புறக்கிராம வீதிகளை அபிவிருத்தி செய்யும் அபிவிருத்தி கருத்திட்டங்களும் அமுல் நடத்தப்பட்டு வருகின்றன. அதன் சிறப்பான பெறுபேறுகளை மக்கள் அனுபவித்து வருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.


வீதி அபிவிருத்தியுடன் நின்றுவிடாது அணுகு பாதைகள் வழியாக

(14ஆம் பக்கம் பார்க்க)

அடைவுகள்

| | 2006 | 2009 | 2014 |
|---|---|---|---|
| [illegible] | [illegible] | 201 | 787 |
| [illegible] | 64 | 185 | 477 |
| [illegible] | [illegible] | [illegible] | 2.0 |
| | 113 | 107 | [illegible] |
| [illegible] | 0.8 | 0.51 | [illegible] |
| [illegible] | N/A | 05.1 | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] | 100.0 |
| [illegible] | N/A | 7.7 | 3.1 |








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழின் தொடர்ச்சி

# இன்னும் 3 மாதங்களில் உலகம் அழிந்துவிடுமாமே!

# ஒரே சமயத்தில் பல இடங்களில் பொம்பே ஃபீவர் காய்ச்சல் தாக்கியது எப்படி?

மணி ஸ்ரீகாந்தன்

எரிகற்கள் எரிந்த மிகுதித் துண்டுகளாக மண்ணில் கிடக்கின்றன. நமக்குத்தான் அவை கல்லா, எரிகல்லா என்று தெரியாது. ஏன் நீங்கள் கூட சில சமயங்களில் விண்கற்களை மிதித்து நடந்திருக்கலாம். அவுஸ்திரேலிய பழங்குடியினர் இவற்றை மந்திர சக்தி கொண்ட கற்களாகக் கருதுகிறார்கள். குறிப்பாக இப்படியான கற்களை ஈமு பறவை இரையுடன் சேர்த்து விழுங்கி விடுமாம். அதனால் ஈமுவை கொன்று அதன் இறப்பையிலிருந்து இந்த விண்கற்களை எடுக்கும் ஒரு முறையை இந்த மாந்திரீகர்கள் கையாள்கிறார்கள். ஆவிக-ளுடன் பேசுவற்கு இந்த விண் கற்கள்தான் மாந்திரீகர்களுக்கு கை கொடுக்கிறதாம்.

விண் கற்களின் தாக்கத்தால் இன்னொரு பயங்கர ஆபத்து இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. அது வெளிக்கிரகத்திலிருந்து வரும் பக்டீரியாக்கள். இதனால் பெயரிடப்படாத பல நோய்கள் இப் பூமிக்கு வந்து கொண்டிருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. வெடித்து சிதறும் எரிமலைக் குழம்பிலும் அந்த வெப்பத்தை தாங்கும் பக்டீரியாக்கள் உயிர் வாழ்வதால். எரிகற்களிலும் வேற்று கிரக பக்டீரியாக்கள் பூமிக்குள் மிகவும் இலகுவாக வந்து பல புது நோய்களை ஏற்படுத்தும் ஆபத்து இருப்பதாகவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. ஏன் இந்தக் கட்டுரையை நீங்கள் படித்துக் கொண்டிருக்கும் போது கூட இப் பூமியின் ஏதாவது ஒரு மூலையில் ஒரு விண் கல் பக்டீரியாவோடு வீழ்ந்திருக்கலாம்.

வால் நட்சத்திரங்களுக்கு தூமகேது என்று ஒரு பெயர். வால் வெள்ளி அபசகுனத்தின் குறியீடாக நீண்ட நெடுங்காலமாக மக்கள் கருதி வந்திருக்கின்றனர். 1912ம் ஆண்டு புகழ்பெற்ற ஹெலீஸ் வால் நட்சத்திரம் பூமிக்கு அருகே வந்து சென்ற போது, என்ன நடக்கப் போகிறதோ என மக்கள் அஞ்சி நடுங்கினர். இந்த வருடத்தில் தான் டைட்டானிக் கப்பல் கடலில் மூழ்கி ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகளை பலி கொண்டது. இரண்டு ஆண்டுகளின் பின்னர் முதலாம் மகா யுத்தம் வெடித்தது. கோடிக்கணக்கானோரை பலி கொண்ட யுத்தம் அது. இந்த விபரீதங்களுக்கு வால் நட்சத்திரத்தின் மீதே மக்கள் பலிபோட்டார்கள்.

ஹெலீஸ் வந்து போன பின்னர் அது கோடிக் கணக்கான சிறிய கற்கள், தூசுகளை பூமி பயணிக்கும் பாதையில் இறைத்து விட்டுச் சென்றது. பூமி அந்த இடத்தைக் கடந்த சமயத்தில் பல நூற்றுக்கணக்கான விண்கற்கள் பூமியில் சீறி விழுந்த அற்புதமான காட்சி இரவுகளில் அரங்கேறியது.

பேராசிரியர் சந்திரா விக்கிரமசிங்க என்ற இலங்கை விண்ணியல் ஆய்வாளர் மற்றொரு பிரிட்டிஷ் ஆய்வாளரான பிரட்ரிக் ஹொயிலுடன் இணைந்து ஒரு கோட்பாட்டை உருவாக்கினார். அக் கோட்பாட்டின் அடிப்படை, உலகின் முதலாவது நுண் உயிரினம் விண்கல் மூலமே பூமிக்கு வந்து அதில் இருந்தே உயிரினங்களின் தோற்றம் நிகழ்ந்திருக்க வேண்டும் என்பதாக இருந்தது. பூமிக்கு வெளியே இருந்து பக்டீரியாக்கள், வைரசுகள் போன்ற நுண்ணுயிர்கள் உள்ளே வர முடியும் என்பதை அவர் சான்றுகளுடன் நிரூபித்தார்.

நாற்பதுகளின் போது 'பொம்பே ஃபீவர்' என்ற ஒரு விஷக் காய்ச்சல் இன்றைய மும்பையில் திடீரெனத் தோன்றி பரவத் தொடங்கியது. இதுவல்ல விஷயம், உலகின் வேறு பகுதிகளிலும் இதே காய்ச்சல் தோன்றிப் பரவியது தான் ஆச்சரியம்!

இந் நிகழ்வை சுட்டிக் காட்டும் சந்திரா விக்கிரமசிங்க, பொம்பே ஃபீவருக்கான வைரஸ் இதற்கு முன் கண்டறியப்பட்ட வைரஸ் அல்ல என்றும் போக்குவரத்து கஷ்டங்கள் கொண்ட அக்காலத்தில் ஒரே சமயத்தில் ஒரு வைரஸ் காய்ச்சல் உலகின் வெவ்வேறு இடங்களில் பரவியதற்கு, இந்த வைரஸ்கள் பூமிக்கு வெளியில் இருந்து வந்ததே காரணம் என்று வாதிடுகிறார். இன்புளுவன்சா போன்ற சில நோய்கள் அவை காணப்பட்ட காலத்துக்கு முன்னர் பரவியதற்கான சான்றுகள் இல்லை என்றும் இவை விண்கற்கள் வாயிலாக பூமிக்கு வர முடிந்ததாலேயே புதுப்புது வியாதிகள் தோன்றின என்பதும் அவரது வாதமாகும்.

நமது இந்து புராணங்களிலும் விண் கற்கள் பற்றி சில விடயங்கள் குறிப்பிடப்படுகிறது. சூரிய பகவான் தமது பக்தனுக்கு அளித்ததாக கூறப்படும் சியாக மண்டக மணி அல்லது வானுலகிலிருந்து வந்த ரத்தினம், உண்மையில் ஒரு விண்கல்லாக இருந்திருக்கலாம். இதுப்போல ஐரோப்பிய நாடுகளில் இளம் பச்சை நிறத்தில் ஒளி ஊடுருவும் கற்களைக் கொண்டு விலையுயர்ந்த ஆபரணங்களை உருவாக்குகிறார்கள். இந்த கற்கள் மிகவும் அரிதாக கிடைக்கும் பொருளாம். இதுவும் விண் கற்களின் துகள்களாக இருக்க கூடிய வாய்ப்பு இருக்கிறதாம்.

பூமியின் மீது விழுந்த மிகப் பெரிய விண் கற்களில் ஒன்று இந்திய மகாராஷ்டிர மாநிலத்தில் வீழ்ந்திருக்கிறது. அந்த இடம் லோனார் ஏரியாக இன்று காட்சியளிக்கிறது. 1.8 கிலோ மீட்டர் விட்டமுடையது இந்த ஏரி.

இந்த ஏரியை பீமன் நீராடிய இடம். லாவன் என்ற அரசன் ஒளிந்த இடம் என்றே பத்மபுராணமும், கந்த புராணமும் குறிப்பிடுகிறது. ஆனாலும் விண்கல் ஒன்று தாக்கியதால் உருவானது என்ற உண்மை கடந்த முப்பது ஆண்டுகளுக்கு முன்னரேயே கண்டறியப்பட்டது. இந்த விண்கல் தாக்குதல் ஏறத்தாழ 5000 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டிருக்க வேண்டுமாம். அப்போது இந்திய பெருங் கண்டத்தில் உயிரினங்கள் வாழ்ந்திருந்தால் அது பாரிய உயிர்ச் சேதத்தை ஏற்படுத்தியிருக்கும். என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

பூமியை அழிக்க வல்ல விண்கற்களின் தாக்குதல் பற்றிய திரைக்கதைகளைக் கொண்ட ஹொலிவூட் திரைப்படங்கள் நிறைய வெளியாகி இருக்கின்றன. இந்த பிரபஞ்சம் பற்றிய புனைக் கதைகள் புகழ்பெற்ற நாவல்களாக இருந்து பிறகு திரைப்பட வடிவை பெற்றன. 1979ல் வெளியானது மீட்டியர் (Meteor) என்ற படம். அமெரிக்க ரஷ்ய விண்வெளி வீரர்கள் பூமியைத் தாக்கி அழிக்க வரும் 8 கி.மீ அளவுள்ள இராட்சத விண்பாறையை எப்படித் தாக்கி அழித்து மக்களை காப்பாற்றுகிறார்கள். என்பதை சித்தரித்த படம் அது. அது போல சமீபத்தில் வெளியான ARMAGADON என்ற திரைப்படத்திலும், பூமியை அழிக்க வரும் 'டீப் இம்பெக்ட்' என்ற வால் நட்சத்திரத்தை நோக்கி செல்லும் விண்வெளி வீரர்கள் 'டீப் இம்பெக்ட்' வால் நட்சத்திரத்தை அணு குண்டை வீசி அழித்து விடுவதாக கதை சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு திரைப்படங்களிலும், உலக மக்கள் அனைவரும் காப்பாற்றபட்டு நலமாக வாழ்வதாக காட்டப்படுகிறது. ஆனால் பெரிய விண்கல் ஒன்று பூமியை எப்போது வேண்டுமானாலும் தாக்கலாம் என்பது மருள வைக்கும் உண்மை.


பூமியின் மீது மோதிய விண்கல்லை நேரில் கண்ட ஒருவர் எழுதினால் எப்படி இருக்குமோ என்பது போன்ற சுவாரஸ்யமான ஒரு குறிப்பு பைபிலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த வசனம் இதுதான் 'தீவட்டி போன்று எரிந்து கொண்டிருந்த விண்மீன் வானிலிருந்து பாய்ந்து வந்து நிலத்தின் மீது மோதியது. கல் மழையும் நெருப்பும் நிலத்தின் மீது பொழிந்தன. நிலத்தில் மூன்றில் ஒரு பகுதியும் அதிலிருந்த மரங்களும், புல் பூண்டுகளும் தீக்கிரையாகி சாம்பலாயின. அது விழுந்த படுகுழியிலிருந்து சூளையில் எழும் புகை போல புகை எழும்ப, கதிரவனும் வான் வெளியும் இருண்டன..' இது போன்ற விவரங்கள் இந்துப் புராணங்களில் குறிப்பிடப்படவில்லை என்றாலும் 'கல்கி' எழுதிய பொன்னியின் செல்வனில் ஆழிப் பேரலை தமிழகத்தை சின்னா பின்னமாக்கியது பற்றியும், கடலில் இராட்சத அலைகள் வானுயர எழுந்து வீழ்ந்ததையும் விபரிக்கப் பட்டுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ட்ரகுலா:

## பயந்து சாக விரும்புவோரின் முகவரி

**ட்ரகுலா** படங்கள் ஐம்பது, அறுபது மற்றும் எழுபதுகளில் ரொம்பப் பிரசித்தம். தமிழில் இரத்தக் காட்டேறி என்று சொல்லலாம். இத்திகில் ஆங்கிலத் திரைப்படங்கள் உலகெங்கும் வெற்றிகரமாக ஓடின. பயந்து நடுங்குவதற்காகவே மக்கள் இதைப் போய் பார்த்தார்கள். கிறிஸ்தோபர் லீதான் அப்போது புகழ் பெற்ற ட்ரகுலா நடிகராக விளங்கினார். அவர் நடித்த இத் திகில் படங்கள் வசூலை வாரி இறைத்தன. இப் படங்களைப் பார்த்துவிட்டு இரவிலே தெருவில் இறங்கியவர்கள் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே நடந்தார்கள்!

இன்றைக்கும் இந்த மோகம் தீரவில்லை. வான் ஹெல்சிங், பிளேட் எனப் பல பெயர்களில் நவீன தொழில்நுட்ப உதவிகளுடன் பல்வகையான ட்ரகுலா, வெம்பயர் படங்கள் வந்து கொண்டுதான் இருக்கின்றன. பயம் உள்ளவரை ட்ரகுலா படங்கள் எந்த உருவிலாவது வந்து கொண்டுதான் இருக்கும்.



இறந்துபோன உயிரற்ற மனிதன் இரவில் எழுந்து நடமாடுவான். மனித இரத்தம்தான் இவனது உணவு. தன் கோரைப் பற்களை கழுத்தில் பதித்து இரத்தத்தை குடித்துபசி தீர்த்துக் கொள்வான். அவனால் இரத்தம் உறிஞ்சப்பட்டவர்களும் பின்னர் ட்ரகுலாவாக மாறிவிடுவார்கள். சூரிய வெளிச்சம் இவனுக்கு எதிரி. சிலுவைக் குறியைக் கண்டாலும் பயந்து ஓடுவான். இந்த ட்ரகுலாவின் கொடுமைகளில் இருந்து தப்பி அவனை வதம் செய்வதுதான் ட்ரகுலா படங்களின் அடிநாதம். இவனால் திடீரென வௌவாலாக மாறி பறந்து சென்று விடவும் முடியும். கதவு இடுக்கில் நுழைந்து வீட்டுக்குள் புகுந்து நித்திரை செய்யும் அழகிகளின் இரத்தத்தைக் குடிக்கும் காட்சிகள், பீதியையும் காமத்தையும் கிளறும் காட்சிகளாக அமைந்து ரசிகர்களின் ஆவலைத் தூண்டி விட்டன.

ட்ரகூலாவை அக்காலத்தில் பலர் உண்மை என்றே நம்பினர். டார்சனையும் வேதாளரையும் உண்மைக் கதாநாயகர்களாக சிறுவர்கள் நம்பியதைப் போலவே தான் இதுவும்!

1430ம் ஆண்டு ட்ரான்சில்வேனியாவில் (இப்போது ருமேனியாவில் இருக்கிறது) வ்ளாட் டிரகுலா என்ற ஊர் இளவரசன் இருந்தான். பிறகு இந்த சிறுவன் மன்னனான பிறகு தான் சிறைப் பிடிக்கும் துருக்கியர்களைப் பழிக்குப் பழி வாங்க அவர்களை இரும்பு கம்பிகளால் குத்திக் குத்தி சித்ரவதை செய்தான். அப்போது அவனுக்கு ரத்தத்தின் சுவை பிடிக்க ஆரம்பித்தது மனித மாமிசம் அவன் நாக்கை தாளம்போட வைத்தது. தன்னை எதிர்ப்பவர்களை அவன் கொதிக்கும் நீரில் தள்ளினான். பாலியல் குற்றம் புரியும் பெண்களின் உடம்புத் தோலை முழுவதுமாக உரித்துவிட்டு அவர்கள் கதறக் கதற நம்மால் கற்பனை செய்யவே முடியாத காரியங்களை செய்தான்.

ஒருநாள் சோம்பலான ஒரு பொழுதில் தன் படைகளோடு ஒரு கிராமத்துக்குப் போன அவன் ஒரே நாளில் தன் சொந்த நாட்டைச் சேர்ந்த முப்பதாயிரம் மக்களை மிருகங்களைப் போல வேட்டையாடிக் கொன்றான். வ்ளாட் டிரகுலா பற்றி இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். 1475ம் ஆண்டு அவன் துருக்கியர்களால் தலை துண்டிக்கப்பட்டுக் கொல்லப்பட்டான். ஆனால், சில ஆண்டுகள் கழித்து அவன் சவப்பெட்டியைத் திறந்துபார்த்தபோது அங்கே அவனது பிணம் இல்லை. இந்தச் செய்தி மக்கள் மத்தியில் பரவ வ்ளாட் டிரகுலாவால் பலர் ரத்தம் உறிஞ்சப்பட்டுக் கொல்லப்படுவதாக வதந்தி பரவியது. அப்போது ஆரம்பித்த வதந்தியும் பயமும் பல நூறு ஆண்டுகள் ஆகியும் மறையவில்லை. இந்தப் பயத்தை மறையவிடாமல் செய்யும் பொறுப்பை வதந்திகளும் மக்களின் அறியாமையும் ஏற்றுக்கொண்டன. ருமானிய மொழியில் ட்ராகூல் என்றால் ரத்தவெறி பிடித்த சாத்தான் என்று அர்த்தம். டிரகுலா யாரைக் கொன்று ரத்தத்தைக் குடிக்கிறதோ, அவர்களும் ரத்தவெறி பிடித்த டிரகுலாவாக மாறிவிடுவார்கள் என்பதால் டிராகுலாவால் கொல்லப்பட்டவர் என்று சந்தேகப்படும் நபர்களின் பிணங்களை அட்டைக்கரி ஆகும் அளவுக்குத் தீயிலே பொசுக்கிப் வெகு ஆழத்தில் புதைத்தார்கள்.

நீல நிறக் கண்களை உடையவர்கள், பிறக்கும்போதே பற்களோடு பிறக்கும் குழந்தைகள் மூளைக்கோளாறு கொண்டவர்கள் எல்லோரையுமே டிரகுலா என்று ஐரோப்பியர் அஞ்சி விலகினர்.

உலகில் ஒவ்வொரு மூலையிலும் வெவ்வேறு பெயர்களில் வெவ்வேறு அரக்கத்தனங்களுடன் இக்கதைகள் தோன்ற ஆரம்பித்தன.


சிலுவைக்குறி, பூண்டு இவை இரண்டுக்கு மட்டுமே டிராகுலா அஞ்சும் என்பது நம்பிக்கை. ஜெர்மனியில் 1828ம் ஆண்டில் வெற்றிகரமாக ஒரு டிராகுலா நாடகமே போட்டார்கள். பிறகு 1897ம் ஆண்டு ப்ரா ஸ்டோக்கர் எழுதிய டிரகுலா தான் இதில் நம்பர் வன். கற்பனை கலந்து எழுதிய அந்த புத்தகம் உலகப்புகழ் பெற்று இன்றுவரை அந்தப் புத்தகத்தின் அடிப்படையில் தான் டிரகுலா சினிமாக்கள் எடுக்கப்படுகின்றன. பிறகு வந்த திரைப்படங்களில் கிறிஸ்டோபர் லீ டிரகுலாவாக வந்து எல்லோரையும் பயமுறுத்தியது தனிக்கதை.

டிரகுலா எப்படித் தோற்றமளிக்கும் என்பதையும் மிகுந்த கற்பனையோடு எழுத்தாளர்கள் முடிவு செய்தார்கள். வெளிறிப் போன முகம், 'ஜில்'என்று உடல், நீண்ட கருப்பு அங்கி. கதவு மூடி இருந்தால்கூடச் சாவித் துவாரம் வழியாக அறைக்குள்ளே புகுந்துவிடும். அதன் உடல் அட்டை மாதிரி ரத்தம் கிடைக்காவிட்டால் 'எகிப்திய மம்மி' மாதிரி இளைத்து விடும். ரத்தம் குடிக்க குடிக்கக் 'கும்'மென்று பருமனாகும். கூர்மையான கோரைப் பற்கள், நீலநிற விழிகள் உண்டு. நமக்கெல்லாம் மூக்கில் இரு துவாரங்கள் டிரகூலாவுக்கு ஒன்றுதான். சென்ற நூற்றாண்டில் பாதிரிமாரின் உதவியுடன் கல்லறைகளைத் தோண்டி ட்ரகுலாவைத் தேடிக் கண்டுபிடிப்பார்களாம். உடனே தலையை வெட்டி எடுத்து அங்கேயே அதனுடைய கால்களுக்கு நடுவில் தலையை வைத்துவிட்டால், டிரகுலா பிறகு எழுந்து வராதாம். கல்லறையில் உள்ள டிரகுலாவை ஊசியால் குத்தினால், டிரகுலாவுக்கு ரத்தம் வரும். ரத்த ஓட்டத்தை நிறுத்த, அதன் இதயத்தைப் பிய்த்தெடுத்து கொதிக்கும் எண்ணையில் போட்டு எரித்துவிடுவார்களாம். மற்றொரு வழிதான் மரத்தால் செய்யப்பட்ட பெரிய ஆணியை அல்லது சிலுவையை அதன் இதயத்துக்குள் செலுத்துவது. மொத்தத்தில் உலகமெங்கும் மக்கள் டிரகுலாவை விரும்பினார்கள்.

அதனால் இன்றைக்கும் ட்ரகுலா படங்கள் ரசிகர்களினால் விரும்பிப் பார்க்கப்படுகின்றன! பயந்து சாவதிலும் நமக்கு ஒரு விருப்பம் இருக்கிறது!

**லக்ஷான்**

## வாடா மல்லி



தமிழ்த் திரையுலகின் குறிப்பிடத்தக்க நடிகர்களில் வி.கே. ராமசாமியும் ஒருவர். ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்த் திரையுலகம் மற்றும் நாடக உலகத்தில் தன் வசீகரக் குரல், உச்சரிக்கும் பாணி, நகைச்சுவை கலந்த வில்லன் நடிப்பு ஆகியவற்றின் மூலம் ரசிகர்களைக் கட்டிப் போட்டிருந்த வி.கே.ஆர், சிவாஜி, எம்.ஜி.ஆர், ஜெமினி கணேசன், கமல், ரஜினி என முக்கிய நடிகர்களோடு நடித்தவர். சொந்தமாகத் திரைப்படங்களை தயாரித்தவர். இறுதியாக மன உளைச்சலிலும் ஏழ்மையிலும் உழன்ற அவர் 2002ம் ஆண்டு காலமானார்.







## குருவும் சிஷ்யனும்

இப் படத்தை நகல் செய்யும் போது அலுவலக பையன் சில தவறுகளைச் செய்து விட்டான். வலப்பக்க படத்தில் ஆறு தவறுகளை செய்திருக்கிறான். அவற்றைக் கண்டுபிடித்துச் சொல்கிறீர்களா? கண்டுபிடிப்பை எங்களுக்கு எழுதி அனுப்பினால் அறுவரின் பெயர்களை அடுத்த இதழில் பிரசுரிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்றும் இன்றும்

மணி ஸ்ரீகாந்தன்





பம்பலப்பிட்டி ரயில் நிலையத்தில் இருந்து சுமார் அறுபது வருடங்களுக்கு முன்னர் எடுக்கப்பட்ட படமும், இப்போது அதே கோணத்தில் எடுக்கப்பட்ட படமும். மரங்களுக்கு பதிலாக கொங்கிறீட் வந்திருக்கிறது.

*எழுபதுகள் முதல் கொழும்பு திடீர் மரண விசாரணை மன்றுக்கு பத்திரிகையாளராக சென்று செய்தி சேகரித்துவரும் கட்டுரையாளர் தனக்கு தெரியவந்த உண்மைச் சம்பவங்களை இங்கே உங்களுடன் சுவை பட பகிர்ந்து கொள்கிறார்.*

## மரண விசாரணை மன்றில் கேட்ட கதைகள்

# பஞ்சும் பழைய நெருப்பும்



அது ஒரு சிறு நகரம். அந்த நகரின் புறநகர்ப் பகுதியில் அமைந்திருந்த ஒரு கிராமத்தில் பிரபலமான ஒரு பேக்கரியின் முதலாளி அபேசிங்க கார் பங்களா என்று நல்ல வசதியுடன் இருந்தார்.

அவருக்கு இரண்டு மகள்மார். மூத்தவள் கல்யாணி, இளையவள் மங்கலிகா. நல்ல வசதி வாய்ப்பு இருந்தும் அவர்களை அவர் அந்த கிராமத்தில் இருந்த மகா வித்தியாலயத்துக்கே அனுப்பினார். கொழும்பில் உள்ள பாடசாலையொன்றுக்கு அவர் தமது மகள்மாரை அனுப்பியிருக்கலாம். ஆனால் அவர்கள் அந்த கிராமப் பாடசாலையிலேயே படிக்க வேண்டும் என்று அவர் பிடிவாதமாக இருந்தார். அதற்கு என்ன காரணமோ தெரியவில்லை.

அந்த கிராமப் பாடசாலை அவருக்கு மிகவும் பிடித்திருக்காலாம். அத்துடன் அவர் பாடசாலையில் தான் படித்திருந்தார். கொழும்புக்கு அனுப்புவது வீண் செலவு என்று நினைத்திருக்கலாம் அல்லது பெண்களுக்கு ஓரளவு படிப்பு இருந்தால் போதும் என்று கூட அவர் நினைத்திருக்கலாம். இதில் ஏதோ ஒன்றுதான் அவரது மகள்மார் இருவரும் கிராமப் புற பாடசாலையி-லேயே படிக்க வேண்டும் என்ற அவரது பிடிவாதத்துக்கு காரணமாக இருக்கும். ஆனால் எது என்று தெரியவில்லை.

இத்தனைக்கும் அவரது. மகள்மார் இருவரும் நல்ல அழகானவர்கள். இதனாலும் குடும்ப பின்னணி காரணமா-கவும் ஆசிரியர்களும் ஆசிரியைகளும் அவர்களை தலையில் தூக்கி வைக்காத குறைதான்.

அந்த கிராமப்புற வித்தியாலயத்தில் படித்தவர்கள் அக்கிராமத்தில் உள்ள மக்களின் பிள்ளைகள்தான் அவர்களில் பெரும்பாலனோர் வசதி குறைந்த பெற்றோரின் பிள்ளைகளாவர். ஒரு சிலர் மட்டும் ஓரளவு வசதியுடன் இருந்தனர் இதன் காரணமாக அவர்களில் அனைவருமே கல்யாணிக்கும் மங்கலிக்காவுக்கும் அடங்கியவர்களாகவே இருந்தனர். எனினும் அதனை மீறிய மாணவர்கள் ஒரு சிலரும் இருக்கத்தான் செய்தனர்.

கல்யாணி படித்த 10ஆம் வகுப்பில் ஒரு மாணவன், அடி பிடி சண்டை என்றால் எப்போதுமே முன்னிற்பவன். அந்த பாடசாலை யின் மாணவ தாதா என்றால் பிழையில்லை. அந்த மாணவனுக்கு கல்யாணி மேல் ஒரு கண். ஆனால் அதை வெளியில் சொல்ல முடியாமல் சந்தர்ப்பத்தை பார்த்திருந்தான்.

அப்பிரதேசத்தில் இருந்து கொழும்பு பாடசாலைக்கு செல்லும் ஒரு மாணவன் கல்யாணிக்கு நெருங்கிய உறவு. வசதி படைத்த குடும்பத்தில் இருந்து வருபவன். அந்த மாணவன் ஒரு நாள் அருகில் இருந்த நகரத்தின் பஸ் தரிப்பிடத்தில் வைத்து கல்யாணியுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருப்பதை அந்த மாணவ தாதா பார்த்துவிட்டான்.

அடுத்தநாள் பாடசாலையில் கல்யாணிக்கு ஒரு காதல் கடிதம் எழுதி அவளது தோழி ஒருத்தியிடம் கொடுத்து கல்யாணியிடம் கொடுக்கச் சொல்லியிருக்கிறான்.

கல்யாணியின் தோழி அதற்கு மறுப்பு தெரிவித்ததும் அவளை மிரட்டியிருக்கிறான் மாணவ தாதா.

''கிராமத்தில் உள்ள பழங்கள் கிராமத்தில் உள்ள கிளிகளுக்குத் தானே தவிர அடுத்த கிராமத்து கிளிகளுக்கல்ல" என்று அவன் கூறவே, ''கிளிகளுக்கு பழங்கள் கிடைக்கும் ஆனால் குரங்குகளுக்கு கிடைக்காது" என்று அவள் காட்டமாக பதில் சொல்லியிருக்கிறாள். அவன் கோபத்துடன் கல்யாணியின் தோழியை அடிக்க முயன்றான். இந்த விடயம் சக மாணவ மாவணவரிடையே பரவியது. எனினும் விடயம் ஆசிரியர்களுக்கிடையே பரவாமல் ரகசியம் காக்கப்பட்டது.

ஒரு சில நாட்கள் மௌனம் காத்தபின் அந்த மாணவ தாதா ஒரு நாள் கல்யாணியின் கையை பிடித்து விட்டான். 10ஆம் வகுப்பு மாணவத் தலைவன் ஜயந்த அது பற்றி அவனிடம் விசாரிக்கப் போக அவன் ஜயந்தவை அடித்துவிட்டான். அடிபட்ட ஜயந்த முஷ்டியை மடக்கி விட்ட சரமாரி குத்துக்களால் அந்த மாண தாதாவின் பற்கள் உடைந்து இரத்தம் வழிந்தது. வலி தாளாமல் கத்திய அவனை அவனது நண்பர்கள் கைத்தாங்கலாக வீட்டுக்கே அழைத்துச் சென்று விட்டனர்.

மாணவத் தலைவன் ஜயந்த எப்போதுமே சிரித்த முகத்துடன் காணப்படுவான். எல்லோருடனும் அன்பாக பழகுவான். மாணவர்களிடமும் ஆசிரியர்களிடமும் அவனுக்கு நல்ல மதிப்பு இருந்தது. விளையாட்டில் அதிகம் ஈடுபாடு காட்டாவிட்டாலும் நன்றாகப் படிப்பான்.

அப்படிப்பட்ட சாதுவான ஜயந்த எப்படி அந்த மாணவ தாதாவை அடித்துப் போட முடிந்தது என்று அனைவரும் ஆச்சர்யப்பட்டனர். அந்த கிராமத்துக்கு அருகில் இருந்த நகரத்தில் ஆறு மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட கராட்டோ தற்காப்பு கலை நிலையத்தில் கடந்த சில மாதங்களாக ஜயந்த கராட்டே படித்து வந்த கதை அப்போதுதான் அனைவருக்கும் தெரிய வந்தது.

இந்த சம்பவத்தின் பின்னர் ஜயந்த மீது கல்யாணிக்கு ஒரு ஈர்ப்பு ஏற்பட்டது. நல்ல அழகும் வசதியும் நிறைந்த கல்யாணி வலிய வந்து பேசினால் எவருக்குத்தான் கசக்கும். ஜயந்தவும் கல்யாணியுடன் பேசத்தொடங்கினான். கல்யாணியுடனான பேச்சுவார்த்தையின் பின்னர் சங்கோஜியான ஜயந்த கலகலப்பான சுபாவத்துக்கு மாற முடிந்தது.

மாணவத் தலைவனான ஜயந்த கல்யாணியுடன் பேசிப் பழகியது மாணவர்களுக்கோ ஆசிரியர்களுக்கோ தவறாகப்படவில்லை. அவளுக்காக பரிந்து பேசப் போய் அடி வாங்கியதும், வாங்கிய அடிக்கு பதிலாக மாணவ தாதாவின் பல்லை உடைத்து வட்டியும் முதலுமாக திருப்பிக் கொடுத்த கதை ஏற்கனவே அனைவருக்கும் தெரிந்திருந்ததால் அவர்கள் பேசிப்பழகியதை எவரும் தவறாக நினைக்கவில்லை.

இப்படி [illegible] மெல்ல மெல்ல காதலாக மாறியது. பாடசாலை வாழ்வில் வேறூன்றிய இந்த காதல் இருவரும் பாடசாலையை விட்டு விலகிய பின்னர் தழைத் தோங்கியது.

கல்யாணி பாடசாலை படிப்பை முடித்துக் கொண்டு இரண்டு வருடங்களுக்கு மேல் வீட்டில் இருக்கவில்லை. சொந்தத்தில் நல்ல வரன் கிடைக்கவே சட்டுப்புட்டென்று கல்யாணிக்கு கல்யாணத்தை செய்து வைத்து விட்டார் அவளது தந்தை.

ஜயந்த-கல்யாணி காதலுக்கு இது இடைவேளையா? இல்லை முடிவா?

ஐந்து வருட இடைவெளியின் பின்னர்...

ஜயந்த கிராமப் பாடசாலையை விட்டு உயர்தர படிப்புக்காக நகர்ப் புற பாடசாலைக்கு சென்று பரீட்சையில் சித்தி பெற்றான். எப்படியெப்படியோ அலைந்தாலும் சரியான வேலை கிடைக்கவில்லை. எங்கெங்கோ சுற்றியலைந்து கொஞ்சம் பணம் தேடி கையில் இருந்ததையும் சேர்ந்து ஒரு ஆட்டோ ரிக்ஷா வாங்கி அதை ஓட்டிக் கொண்டிருக்கிறான். தனது உறவுக்கார பெண் ஒருத்தியை கல்யாணம் செய்து இப்போது அவனுக்கு இரண்டு குழந்தைகள். மூத்த பெண் குழந்தைக்கு 4 வயது. இளையவளுக்கு இரண்டு வயது.

கல்யாணியின் கணவன் வசதி படைத்தவனாக இருந்தாலும் ஒரு ஊதாரி, மதுப் பழக்கத்துடன் மாதுப் பழக்கமும் அவனுக்கு இருந்தது.

கல்யாணிக்கும் இரண்டு குழந்தைகள். மூத்தது பெண், இரண்டாவது ஆண்.

நகரத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட முன்பள்ளி பாடசாலையில் பிள்ளைகளை சேர்ப்பதற்காக வந்திருந்த ஜயந்தவும் கல்யாணியும் ஒருவரையொருவர் மீண்டும் சந்தித்தனர்.

இருவரது வாழ்க்கையும் விரக்தியுற்றிருந்த நிலையில் இச்சந்திப்பு மீண்டும் இருவரது வாழ்க்கையிலும் மலர்ச்சியை ஏற்படுத்தியது.

பாடசாலையில் இருந்தபோது அவர்களுக்கிடையே இருந்த பரிசுத்தமான காதல் இப்போது மாறியிருந்தது. இருவருக்குமே கல்யாணமாகியிருந்த போதும் திருமண வாழ்க்கையில் போதிய திருப்தி கிடைத்திருக்காத நிலையில் இருவர் மனதும் அதனை நாடியது.

பிள்ளைகளை முன் பள்ளியில் விட்டு விட்டு ஆட்டோவில் சென்று தனியிடத்தில் இன்பம் அனுபவிக்க ஆரம்பித்தனர். அருகிலுள்ள நகரங்களுக்கும் இந்த இன்பச் சுற்றுலா தொடர்ந்தது.

இப்படித்தான் ஒரு நாள் அருகிலுள்ள நகரமொன்றில் உள்ள லொட்ஜ் ஒன்றில் வாடகை அறையில் இன்பம் அனுபவித்துக் கொண்டிருந்த போது யார் செய்த பாவமோ...

ஜயந்தவுக்கு திடீர் மாரடைப்பு ஏற்பட்டது... அது ஜயந்தவுக்கு மரணத்தை ஏற்படுத்தியது. பதறிப் போனாள் கல்யாணி. என்ன செய்வது என்று பரிதவித்தார் விடுதியின் நிர்வாகி... எப்படி சமாளிப்பது? பொலிஸ் வந்தது கல்யாணியையும் விசாரணைக்கு அழைத்துச் சென்றது.

ஜயந்தவின் மரணம் திடீர் இயற்கை மரணம் என்று மரண விசாரணை அதிகாரியின் அறிக்கை கூறியது.

ஜயந்தவின் மரணத்துடன் கல்யாணிக்கு இருந்த தொடர்பினால் அவளது குடும்பத்துக்கு அவமானம் ஏற்பட்ட போதிலும் அவளது கணவன் அதைப் பெரிதாக பொருட்படுத்தவில்லை. அவனது மதுப் பழக்கத்தை காரணமாகக் காட்டிய கல்யாணி தன்னை ஏற்றுக்கொள்ளச் செய்தாள். தன் மீது தவறு இருந்த போதும் கணவனின் அதே தவறுகளை கல்யாணியும் பொருட்படுத்தாமல் இருக்கப் பழகிக் கொண்டாள்.

புனிதமான பாடசாலைக் காதல் கள்ளக் காதலாக மாறியதால் என்னென்னவோ நடந்து விட்டன.

ஏ. மதுரை வீரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியாயத் தீர்ப்பு



"நீர் எடுத்திருக்கின்ற முடிவு சரிதானா?" ராஜரத்தினத்தின் கேள்வி இது.

மௌனம் தொடர்ந்தது ஆசிரியர்களின் ஓய்வறையில் கூண்டு போல் அடைக்கப்பட்டுள்ள தேவையற்ற இன்னுமொரு பகுதி. பக்கத்தில் ஆசிரியர்களுக்கான ஒரே ஒரு மலசலகூடம் துர்நாற்றம் வீசியபடி. எதிரே நூறு மீற்றர் தூரத்தில் சத்தம் போட்டுக்கொண்டு விளையாடும் சிறிய மாணவர்கள். ஆங்காங்கே நடமாடிக் கொண்டிருக்கும் வளர்ந்த மாணவர்கள். அனைத்தையும் பஸ்லின் புலன்கள் உள்வாங்கிக் கொண்டிருந்தன.

"இந்த முடிவு நான் இன்றைக்கு எடுக்கல்ல. திறிபோ மந்தாக திங்க் பண்ணி எடுத்த முடிவு தான்..."

"அப்போ; இப்போ வந்திருக்கின்ற பென்சன் ஸ்க்கீம் சுலபமாய் போச்சு..."

"உண்மைதான்!" பஸ்லின் முடிவுக்குப்பல நியாயமான காரணங்கள் இருப்பதாகத்தான் அவரைச் சுற்றியுள்ள பல ஆசிரிய நண்பர்களுக்குப்பட்டது.

அது பிரமாண்டமான பாடசாலை அதன் பிரபலத்திற்குப் பளிலும் காரணம். விஞ்ஞானப் பிரிவு அபாரமாக வளர்ச்சி அடைந்ததிற்குப் பளீலின் பங்களிப்பு நிறையவே இருக்கின்றது.

என்னைப் பொறுத்த வரையில் நீர் இந்த ஸ்க்கூலை "விட்டு செல்வது சரியான தீர்மானமாகத் தோணல்ல ராஜரத்தினம் தன் கருத்தை வெளியே வைத்தார்.

அந்தப் பாடசாலையின் விஞ்ஞானப் பிரிவுக்கு நீருற்றியவர்களில் ராஜரத்தினமும் ஒருவர். அது முஸ்லீம் பாடசாலையாக இருந்த போதும் தனது பாடசாலை போல் கருதி சேவை செய்து கொண்டிருந்தார். இலங்கையின் நான்கு திசைகளில் இருந்தும் மாணவர்கள் அந்தப் பாடசாலையில் வந்து சேர்ந்தார்கள். கூடுதலான 'டொனேசன்' கொடுத்துத்தான் பலர் தங்கள் பிள்ளைகளுக்கு அனுமதி பெற்றார்கள். பளீல் ராஜரத்தினம், அருள், பசீல், நாசர், சரா போன்ற சிறந்த ஆசிரியர்களின் கூட்டு முயற்சியில் அந்தப் பாடசாலை வளர்ச்சி கண்டது. இருந்தாலும் ஒரு மத்திய கல்லூரிக்குரிய வளங்கள் மிகவும் குறைவாகவே அங்கே காணப்பட்டன.

ஒரு கனம் பளீலின் மனக்கண்முன் பாடசாலையின் ஆரம்பகாலம் படமாக விரிந்தது. பளீல் வரும் போது ஒரு மகா வித்தியாலயமாகத்தான் அந்தப் பாடசாலை இருந்தது. விஞ்ஞானப் பிரிவில் போதிய மாணவர்கள் இல்லாத நிலை.

"உங்களை எடுக்கிறதுக்கு சரியாக் கஸ்டப் பட்டம்." அதிபரின் வரவேற்பும் வாழ்த்தும் பளீலை ஆர்வப்படுத்தியது. படிப்படியான வளர்ச்சி கருதி விலங்கியல், தாவரவியல் இரண்டு பாடங்களையும் பளீல் கற்பித்தார். இரவு பகலாகப் பாட ஆயத்தம் செய்து மாணவர்களின் திறன் வளர்க்கப்பட்டது.

"உங்களுக்கு என்னென்ன குறையிருக்கோ சொல்லுங்க? இந்த சயன்ஸ் யுனிற்றைக் கட்டி எழுப்பணும்! இதான் என்ர ஆசை. இதுக்கு உங்கட ஒத்துழைப்பு, ஆலோசன வேணும்! அந்தளவிற்கு பளீலின் அபிமானமும், நன்மதிப்பும் கொண்டிருந்தார் அதிபர்.

மூன்றாம் பாட வேளைக்கான மணிச்சத்தம் பளீலை நிஜத்திற்கு அழைத்து வந்தது. ராஜரத்தினம் எதையோ எழுதிக் கொண்டிருந்தார்.

"ராஜரத்தினம்.. எனக்குப் பாடமிருக்கு..."

"நானும் இறுதியாகக் கதைக்கிறன்.. உம்முடைய முடிவை நீர் மாற்றிக்க வேணும். இல்லாது போனால் இத்தனை காலமும் பாடுபட்டதுக்கு அர்த்தமே இல்லாமலாகிடும்!"

பளீல் வகுப்பிற்குச் சென்றதும் சில மாணவர்கள் எழுந்தார்கள். பல மாணவர்கள் இருந்த படியே இருந்தார்கள். பளீல் பொறுத்துக் கொண்டார். பாடத்தை ஆரம்பித்துப் படிப்பித்தார். பக்கத்து வகுப்பிலிருந்து சத்தம் அதிகமாகிக் கொண்டிருந்தது. அந்த வகுப்புக்குச் சென்றார் பளீல்.

"இங்கப் பாருங்க! நீங்க இப்படிச் சத்தம் போட்டா மற்றவர்கள் படிக்கிறதில்லையா..?" கோபத்தோடு சொல்லிவிட்டு மீண்டும் வகுப்புக்கு வந்தார். கரும் பலகையில் தேவையற்ற வசனங்கள் எழுதப்பட்டிருந்தன.

"இதே எழுதின யாரு..? நீங்க சொல்லாட்டி இனிமே பாடம் நடத்த மாட்டான்!"

மாணவர்கள் தரையைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"உங்கள யாரோ தூண்டிவிடுர்றாங்க. அவங்கட பேச்சக் கேட்டு உங்கட வாழ்க்கய பாழாக்காதீங்க!" பளீல் கோபத்தை வார்த்தைகளில் கலந்து சொல்லிவிட்டு வகுப்பை விட்டு வெளியேறினார். நேராக ஆசிரிய ஓய்வறைக்கு வந்தார்.

"என்ன பளீல் அவசரமாக திரும்பிட்டீர்?"

"ச்சே! இவங்க ஸ்ருடன்ற்றா..?"


"என்ன விசயம்?"

"இப்பதான் தெரியுது... நான் எடுத்த முடிவு செரி..."

"முதலில் நடந்ததைச் சொல்லுங்கோவன்"

"பக்கத்துக் கிளாஸ்ல நல்ல சத்தம்.. அவங்களுக்கு அட்வைஸ் பண்ணிட்டு வந்தா தேவல்லாம பிளக் போட்ல எழுதி வெச்சிருக்காங்க!"

"பளீல்! ஸ்ருடன்றை யாரோ தூண்டி விட்டு வேடிக்கை பார்ப்பினம்.. பாவம் ஸ்ருடன்ற்ஸ். அதிபரிடம் சொல்லியிருக்கலாமே!"



ராஹில்

"லாஸ்ட்வீக் அவருக்கே பட்டாசு கொளுத்திப் போட்டான்க... என்ன எக்ஷன் எடுத்தார்?"

"ஓமோம்! ஆனால், இந்தப் பிரச்சினை எந்த நாளும் இருக்கப் போகிறது இல்லையோ!"

"இந்தப் பாடசாலைய கீழேவுழுத்துறதுதான் சிலர்ர நோக்கம் அதுவரைக்கும் ஸ்ருடன்ற்ற தூண்டிக்கிட்டே இருப்பாங்க"

"நீர் கதைக்கிறது நியாயந்தான்! ஆனால் அந்த நிலைக்கு ஸ்க்கூள் ஆகிறதை நாங்கள் பார்த்துக் கொண்டு இருக்க முடியுமோ! எங்கள் வியர்வையால் இரவு பகல் பாராமல் கட்டி எழுப்பிய பாடசாலையிது" ராஜரத்தினத்தின் கூற்றில் நியாயம் இருப்பதை நினைத்து மனதுக்குள் சிரித்துக் கொண்டார் பளீல். "இதே நிருவாகஞ் செய்யணும்! நாம எப்படிச் செய்ற? ஒண்டு இந்தக் கன்றாவிகளப் பாத்துக்கிட்டு வெறும் ஜடமா இருக்கணும்! இல்லாட்டி இந்த இடத்தவுட்டுப் போயிடணும்!"

"இந்த ஸ்க்கூள விட்டுச் செல்லவும் கூடாது. வெறும் ஜடமாகவும் இருக்கவும் கூடாது. ராஜரத்தினம் சொன்னதும் பளீல் ஆச்சரியமாகப் பார்த்தார், "

"அப்படியெண்டா..?"

"நாங்கள் எல்லோரும் சேர்ந்து எதையாவது செய்ய வேணும்!"

"அப்படியெண்டா நாம சிலபேர்தான் சேர்ந்து செய்யணும். அப்படிச் செய்தா சுவரெல்லாம் நம்முடபேர் தான் இருக்கும்"

"எல்லோருமே இப்படித் தயங்கினால் எப்படி?"

பாடசாலைகள் அரசாங்க நிறுவனம் என்பதை மறந்து பலபேர் வீட்டுச் சொத்தாக நினைப்பதால் ஏற்படும் விளைவுகளின் வகை இதுதான் என்பதைப் பளீலும் அறியாமலில்லை.

பளீல் வெளியூரிலிருந்து வந்து கற்பிக்கின்ற ஆசிரியர். நாளாந்தம் இருபது மைல்களைக் கடந்து வந்துதான் அந்தப் பாடசாலையில் கற்பிக்கின்றார். பகற்சாப்பாடு எடுத்துக் கொண்டு வந்துதான் வகுப்புக்கள் நடத்துவார். வீடு திரும்பும் போது இருட்டி விடும்.

ராஜரத்தினம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். வாடகைக்கு வீடு எடுத்துக் கொண்டு மனைவி, பிள்ளைகள் சகிதம் தங்கி வாழ்கிறார். இவர்கள் இருவரும் மதத்தைக் கடந்து மனதால் ஒன்றுபட்ட மனிதர்கள். விசேடமான கறிகள் சமைத்தால், பலகாரங்கள் செய்தால் அன்றைக்குப் பளீல் ராஜரத்தினத்தின் விருந்தாளி. அதே போல் பளீலின் வீட்டில் ஏதாவது விசேசம் என்றால் ராஜரத்தினமும் குடும்பமும் சமூகமளிக்கத் தவறுவதே இல்லை. இன்று அந்தப் பாடசாலையின் தலையெழுத்து மாறிக் கொண்டு செல்வதை நினைத்து வருந்திக் கொண்டிருக்கின்றார்கள்.

சிறப்பாகக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் நிறையப் பேர் அந்தப் பாடசாலையில் ஆசிரியர்களுக்கு எதிராக எழுப்பப்படும் கோஷங்களினாலும் அவர்களுக்கு நாளாந்தம் வரும் மொட்டைக் கடிதங்களினாலும் வேதனைதான் ஆசிரியர்களுக்கு மிஞ்சியது. இதில் பல ஆசிரியர்கள் வெளியூர்க்காரர்கள். இதனால் களத்தில் துணிச்சலாக இறங்கி ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்டத் தயங்கினார்கள். அதற்கு இன்னும் பல காரணங்கள் இருந்தன. ஒரு ஆசிரியரைப் பற்றி பிற ஆசிரியர்களுக்கு மொட்டைக்கடிதம் வருதல், ஆசிரியர்களுக்குள்ளே குழு மனப்பான்மை, அவர்களுக்கிடையில் சந்தேகப்பார்வை. ஆசிரியர்கள் ஆசிரியர்களைப் பற்றி குறை கூறுதல் போன்றவைதான் பிரச்சினையை வளர்த்தன.

ஒருகுழுவினர் தங்களுக்குச் சார்பான ஒரு அதிபரைப் பாடசாலைக்கு எடுத்தல், இன்னுமொரு குழுவினர் அவர் வேண்டாம் என்று கோஷம் எழுப்புதல், அதற்கு மாணவர்களைத் தூண்டி அவர்களைப் பயன்படுத்துதல் பிறகு அவரை மாற்றுதல் அல்லது இடை நிறுத்துதல், மற்றக்குழுவினர் எதிர்த்தல்.. இப்படிப் பிரச்சினைகள் நீண்டு கொண்டு சென்றதன் விளைவாக இன்று அந்தக் கல்லூரி ஆட்டங்கண்டு கொண்டிருக்கிறது. இந்த நிலையினால் விஞ்ஞானப் பிரிவு ஆசிரியர்கள் இருவர் இடமாற்றம் பெற்றுச் சென்றார்கள்.

"ரீச்சிங் என்பது சேவை. அதற்குத் தியாக உணர்வும், அர்ப்பணிப்பும் வேணும் பளீல். இது இல்லாது போனால் பெயர்ந்து யாராலும் வேலை செய்ய முடியாது. இங்கிருந்து எத்தனையோ ரீச்சர்ஸ் ரிட்டையரானார்கள். அவர்களின்ர சேவையைப் பாராட்டி ஒரு பிரியா விடையாவது செய்தார்களா? இல்லையே! இந்தக் கன்றாவிகளை நினைத்தால் இங்கே உம்மாலேயும் வேர்க் பண்ண முடியாது! என்னாலும் முடியாது."

"ராஜரத்தினம்...! இது இன்ரவல் நேரமில்லை. ஆனா இன்ரவல் மாதிரி இருக்கு. இங்க டிசிப்பிளின் இல்ல... ஒரு ஸ்கூள்ள முதல் தேவ டிசிப்பிளின். ஒரு ஆசிரியர் படிப்பிக்கிறதுக்கு அமைதியான சூழல் தேவ இது இங்க இல்ல. ஆகவே முதல்ல எல்லா ரீச்சர்ஸ்கும் ஒன்றாகணும்."


"தொடர்ந்து பேசுவதில் எந்தப் பயனும் இல்லை என்ற காரணத்தினால் இருவரும் மௌனமானார்கள். அப்போது காரியாலயத்திற்கு முன் ஒரு தாய் சத்தம் போட்டு ஏதோ கூறிக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த சாராவிடம் கேட்டார் ராஜரத்தினம் "ருவல் மெற்ஸ் கிளாஸ்ல இருக்கிறான் அந்தப் பொண்ணோட பையன். நேற்று ராக்கிங் பண்ணியிருக்கிறாங்க.. அதான் பிரச்சினை..."

"யூனிவர் சிற்றிய விட மோசம்..." பளில் கோபத்தோடு சொன்னார்.

பொறியியல், வைத்தியம், வர்த்தகம், கலை, விவசாயம் போன்ற எல்லாப் பிரிவுகளுக்கும் சாரி சாரிகாக மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்று கொண்டிருந்த அந்தப் பொற்காலம் பளீலின் மனசுக்குள் மலர்ந்தது.

அப்பொழுதெல்லாம் காலைக் கூட்டங்களில் திறமையான ஆசிரியர்களின் நாமம் காற்றில் கலக்க மாணவர்களின் இதயங்களில் அந்தப் பெயர்கள் செதுக்கப்படும். ஆசிரியர் குழுக்கூட்டங்களின் போது நன்றியும் பாராட்டுக்களும் தெரிவிக்காத சந்தர்ப்பங்களே இல்லை. இதுதான் ஆசிரியர்களுக்குக் கெடக்கின்ற கௌரவம். இதைத்தான் அவர்கள் மரியாதை என நினைக்கிறார்கள். வெறும் சம்பள அதிகரிப்புக்களையோ, அல்லது அதிகமான மாணவர்களுக்கு ரியூசன் வகுப்புக்கள் நடத்துவதையோ ஒரு நல்ல ஆசிரியர் விரும்பமாட்டார்.

(31ஆம் பக்கம் பார்க்க)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே.எஸ்.ராஜா என்ற மகா ஆகிருதி



மருதானை காந்தி மியூசியம் திறந்தவெளி அரங்கில் நமது அறிவிப்பாளர் கே.எஸ்.ராஜா ஒரு திறந்தவெளி அரங்கில் நிகழ்ச்சி செய்யப் போகிறார் என்ற அறிவிப்பு வெளியானதும் அங்கே அவரை நேரில் காண வேண்டும் என்பதற்காக மக்கள் திரண்டிருந்தனர். 1986 அக்டோபர் மாதம் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அறிவிப்பாளர் ஒருவர் 'இதோ வரப் போகிறார் உங்கள் அபிமான அறிவிப்பாளர் கே.எஸ்.ராஜா' என அடிக்கடி அறிவித்துக் கொண்டிருக்க, சனத்திரள் அவரைப் பார்க்க பரபரத்துக் கொண்டிருந்தது. இறுதியில் ஒருவர் வந்து மைக்கைப் பிடித்தார். கூட்டம் அவரைக் கண்டு கொள்ளவில்லை. மைக்கைப் பிடித்தவர், ''வீட்டுக்கு வீடு வானொலிப் பெட்டிக்கு அருகே...'' என ஆரம்பித்தபோது தான் இவர் நாம் எதிர்பார்த்திருந்த அந்த கே.எஸ்.ராஜா என்பதை குரல் ஓசையை வைத்து அறிந்து கொண்ட மக்கள் கூட்டம் ஆர்ப்பரித்தது.

லேசான சாம்பல் நிற சஃபாரியில் சற்றே குள்ளமாக தொப்பி அணிந்தபடி ரசிகர்கள் எதிர்பாராத தோற்றத்தில் அவர் காட்சி அளித்தார். ஆச்சரியம் தாங்காத ஒரு மாணவி, அவரது உருவம் பற்றி கேட்டு விட்டார். ஏனெனில் அவரது குரல் ஆகிருதியைக் கேட்கும் எவருமே, அவர் ஆஜானுபாகுவான தோற்றம் கொண்டிருப்பார் என்றே எதிர்பார்ப்பார்கள்.

ராஜா அவரிடம், ''நீங்கள் எப்படி எதிர் பார்த்தீர்கள்?'' என்று கேட்டார்.

''கொஞ்சம் உயரமான, பருமனான அதிரடி ஸ்டைலில் இருப்பீர்கள் என்று எதிர்பார்த்தேன்'' என்று மாணவி பதில் சொன்னாள்.

''அமிதாப்புக்கு என் மாதிரி அழகான தமிழ்க்குரல் கிடையாதே?'' என்றான் கே.எஸ். அரங்கமே சிரிப்பில் அதிர்ந்தது. அன்று அவர் நடத்திய 'பாட்டுக்கு பாட்டு' ஆரம்பத்திலேயே சூடு பிடித்தது. அதிகாலை மூன்று மணிவரை பார்வையாளர்களை தனது கேலி கிண்டலினால் மகிழ்ச்சியில் ஆழ்த்தி வைத்திருந்தார் கே.எஸ். பின்னர் அவர் தங்கியிருந்த ஹோட்டலுக்கு நிருபர்கள் படையெடுத்து பேட்டி கண்டனர்.

கே.எஸ்.ராஜாவின் பெயர் கந்தையா ஸ்கந்தராஜா. அப்பா மருத்துவர். அம்மா ஆசிரியை. உச்சரிப்பு சரியாக இருக்க வேண்டும் என்பதற்காக அவரை அம்மாதான் பழக்கப்படுத்தி எடுத்தாராம். அவரது அக்காமார் டாக்டர்கள். றோயல் கல்லூரி பழைய மாணவர் என்பதோடு பல்கலைக்கழகமும் சென்று வந்தவர். அவருக்கு 1994ம் ஆண்டு இலங்கை வானொலியில் பொறுப்பான உயர் பதவியொன்று கிடைக்கவிருந்த சமயத்திலேயே, மர்மமான முறையில் கோல்பேஸ் மைதானத்தில் இறந்து கிடக்கக் காணப்பட்டார். இவர் நஞ்சு கொடுத்து கொலை செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்ட போதிலும் யார் இதைச் செய்திருப்பார்கள்; பின்னணி என்ன என்பது இறுதிவரை யூகங்களாகவே இருந்துவிட்டன.

ஆனால், இலங்கை வானொலியின் மயில்வாகனத்தின் வெண்கலக் குரலுக்குப் பின்னர் வர்த்தக சேவையை துடிப்புள்ள, அனைவரையும் ஈர்க்கச் செய்யும் வகையில் வானொலி சேவையை புரட்டிப் போட்டவர் தான் இந்த கே.எஸ்.ராஜா அவருக்குப் பின்னர் அப்படி ஒரு ஆகிருதி வானொலியில் தோன்றவில்லை.

# நன்றாகத்தான் இருந்தது

## கண்மணி சேவை வழங்கிய ஒலிம்பிக் நேரலை

பாராட்ட வேண்டிய இடத்தில் பாராட்டவும் குட்டு வைக்க வேண்டிய இடத்தில் குட்டு வைக்கவும் துணிச்சல் இருக்கிறது என்பதை நமது ரூபாவின் கண்மணிச்சேவை நிரூபித்திருக்கிறது. கடந்த மாதம் ஒலிம்பிக் போட்டி நிகழ்வுகளின் மொத்தக் காட்சிகளையும் தொடர்ச்சியாக கண்மணியில் ஒளிபரப்பினார்கள். விளையாட்டு மற்றும் ஒலிம்பிக் ரசிகர்களுக்கு இது பெரு விருந்தாக இருந்தது. சிலர் கண் உறக்கமின்றி டி.வி.பார்த்தார்கள். சாப்பிடும் போதும் வேலை செய்யும் போதும் அதே நினைவில்தான் இருந்தார்கள். இவ்வாறு ஒலிம்பிக் போட்டியை அப்படியே ஒளிபரப்பியதற்காக ரூபா கண்மணிச் சேவைக்கு நேயர்கள் சார்பாக வாழ்த்துகள்.

இன்னொரு விஷயம், நிகழ்ச்சிகளுக்கு நடுவே பல விருந்தினர்கள் கண்மணி ஸ்டூடியோவுக்கு வந்தார்கள். விளையாட்டு வீரர்கள், முன்னாள் வீரர்கள், விளையாட்டுத்துறை முன்னாள் / இந்நாள் அதிகாரிகள் மற்றும் பிரமுகர்கள் வருகை தந்து நிகழ்ச்சி தொகுப்பாளர்களுடன் பேசினார்கள்; கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

இவ்வாறு வந்தவர்கள் அனைவருமே இலங்கை விளையாட்டுத் துறையை ஓஹோவென்று புகழவில்லை. கடுமையான கண்டனங்களை முன் வைத்தார்கள். விமர்சித்தார்கள். குறிப்பாக லண்டன் சென்ற இலங்கை குழுவினரும் விமர்சனத்துக்குள்ளாயினர். இலங்கை குழுவினர் தொடர்பான குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டன. இவற்றைப் பார்த்த நேயர்கள், அட, இது ரூபவாஹினிதானா? என ஆச்சரியப்பட்டுப் போயினர். இப்படியே இத் தொலைக்காட்சி சேவை ஏனைய நிகழ்ச்சிகளிலும் வெளிப்படையாகவும் மக்களின் கருத்துகளை முன் வைப்பதாகவும் நடந்து கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்றும் பல நேயர்கள் பேசிக் கொண்டனர். ஆஹா, அப்படி மட்டும் இருந்து விட்டால்...

தமிழில் ஒலிம்பிக் செய்திகள் மொழி பெயர்த்துச் சொல்லப்பட்டன. சில சமயம் மொழிபெயர்ப்பு சரியாகவும் இயல்பாகவும் அமையவில்லை. ஒரு தடவை ஹுஸைன் போல்ட் என்ற பெயரை 'போல்ட் ஹுஸைன்' என்று உச்சரித்து மாட்டிக் கொண்டார் தமிழ் அறிவிப்பாளர். விசேஷம் இதுவல்ல; தேசிய சேவை அறிவிப்பாளர் ஒருவர் இதைச் சொல்லி சிரித்ததுதான் விசேஷம்!

எனினும் மொத்தத்தில் கண்மணி வழங்கிய ஒலிம்பிக் நேரலை நன்றாகத்தான் இருந்தது. அங்கே பேசப்பட்டவை சிந்திக்கவும் வைத்தது.

இந்தியாவின் DD Sports மற்றும் IBN அலைவரிசைகள் ஒலிம்பிக் நிகழ்ச்சிகளை நேரடியாக ஒளிபரப்பின. அத்தனை பெரிய இந்தியா நான்கு வெண்கலம் இரண்டு வெள்ளி என ஆறு பதக்கங்களைக் கைப்பற்றியதை, முட்டையிட்ட கோழி கர்மாறு போடுவதைப்போல ரொம்பப் பெரிதாக இந்த இந்திய அலைவரிசைகள் சலிப்பேற்படும் வகையில் ஊதிக் கொண்டிருந்தன. இவ்வளவு பெரிய நாட்டுக்கு ஏன் இப்படி ஒரு பின்னடைவு என்பது பற்றி விலாவாரியாக அலசுவதில் அக்கறை காட்டவில்லை. ஜீ டிவி, தினமும் இரவு ஏழு மணிக்கு ஒரு அரை மணித்தியால தொகுப்பை தந்தது. அந்தத் தொகுப்பும் இந்தியப் புராணம் தான் பாடிக் கொண்டிருந்தது. சொன்னதையே மறுநாளும் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தாள் அந்த மெலிந்த தொகுப்பாளினி. சய்னா நேவால் மூன்றாம் இடத்துக்கான பெட்மின்டன் போட்டியில் சீன வீராங்கனையோடு மோதினார். இடையில் சீனவீராங்கனைக்கு கால் பிடிப்பு ஏற்பட்டு ஆட்டத்தில் இருந்து விலகிக் கொண்டதால்தான் நேவாலுக்கு வெண்கலம் கிட்டியது. தசைநார் பிடிப்பு வராதிருந்தால் நேவால் வெற்றி பெற்றிருப்பாரா? என்ற கேள்வியை இந்திய ஊடகங்கள் எழுப்பவில்லை.

அவ்வகையில் பார்த்தால், கண்மணிச் சேவை சுய பரிசோதனையுடன் வழங்கிய ஒலிம்பிக் வர்ணனை ரொம்பப் பாராட்டுக்குரியது!

## சக்தி எப்.எம்.மின் நெத்தியடி நிகழ்ச்சி: சரியா தவறா?

ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு 9 மணி தொடக்கம் நள்ளிரவு 12 மணிவரை மாலைகளில் நேரடி கருத்து யுத்தமாக வெடிக்கும் சக்தியின் சரியா? தவறா? அருமையிலும் அருமை.

அன்றாட வாழ்வில் யதார்த்தங்களை ஆதரிப்போர் சிலர்... நிராகரிப்போர் பலர்.. இதிலும் நேயர்களின் கருத்துக்கள் முட்டி மோதும் களமாக இது விளங்குகிறது. சில தலைப்புகளுடன் உரையாடும் பொழுது தமது வாழ்வில் இடம்பெற்ற சம்பவங்களினை கூறும் நேயர் நெஞ்சங்களின் துணிவு பாராட்டத்தக்கது. அறிவுரை என்றாலே அலறி அடித்தோடுபவர்களும், அலட்சியம் செய்வோரும் இருக்கின்ற இக்கால கட்டத்தில் அனைவரது கருத்துக்களையும் ஏற்றுக்கொள்ளும் முகமாகவும், அவர்களை வழிப்படுத்தும் முகமாகவும் அமைந்துள்ள சக்தி எப்.எம்.மின் சரியா தவறா நிகழ்ச்சி நேயர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இவ்வெற்றிக்கு காரணமானவர் சக்தி எப்.எம்மின் தொகுப்பாளர் கிருஷ் அண்ணா. இவரது நகைச்சுவையான பேச்சும், குறித்த விடயத்தை கருத்தாழத்துடன் எடுத்துக்கூறும் திறனும், சிறுவர்களும், இளையவர்கள், வயது வந்தவர்கள் அனைவரையும் திருப்திப்படுத்தும் விதமாக நிகழ்ச்சி நடாத்துகின்றமையினாலும், அடுத்தடுத்து கேள்விக்கணைகள் தொடுக்கும் திறனுள்ளவராகவும் இருப்பதால் சக்தியின் சரியா? தவறா? வெற்றி நடை போடுகிறது. அலுப்பட்டுமின்றி இந்த நிகழ்ச்சியில் இராப்பொழுதுக்கு ஏற்ற விதமான பாடல்களினை தெரிவு செய்து இவர் காற்றலைகளில் தவழவிடுவது நேயர்களை இலகுவாக இந்நிகழ்ச்சி கேட்பதற்கு உதவுகிறது. பதினைந்தாவது ஆண்டுக்குள் நுழைய காத்திருக்கும் சக்தி எப்.எம் மேலும் பல புதுமைகளை செய்ய வாழ்த்துகின்றோம்.

- ந.எ.சாந்தரூபன், நல்லூர்




சூரியனின் ஆள் என்று சொல்ல மறக்காதீர்கள்!

நீங்கள் நன்றாகத் தூங்கிக் கொண்டிருக்கும் போது அல்லது [illegible] ஏதாவது [illegible] ஈடுபட்டிருக்கும் போது தொலைபேசி சிணுங்கும். எடுத்தவுடன் ஹலோ சொன்னால், மறுமுனையில் உங்கள் பெயரைச் சொல்லி அழைத்து பேசுகிறோம், [illegible] நீங்கள் விரும்பும் வானொலி எதுவென்று சொல்ல முடியுமா? என்று ஒரு குரல் மறுமுனையில் கேட்கும். நீங்கள் அப்பாவியாக இருந்து, சக்தி, வெற்றி என்று சொன்னால் அழைப்பு துண்டிக்கப்பட்டு விடும். நான் விரும்பும் வானொலி சூரியன் என்று [illegible]

[illegible] சூரியன் என்று சொல்ல மறந்துவிட வேண்டாம்!








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் போன 'கேக்' பெட்டி

அருணா பொன்னம்பலம்



மலையக தேயிலைத் தோட்டங்களில் வெயில் காலத்தில் பாம்புகளின் நடமாட்டம் அதிகமாக இருக்கும். வெயில் காலத்தில் பாம்புகள் அதன் புற்றுகளில் இருந்து தண்ணீர் தேடி வெளியே வருவதுண்டு. இதனால்தான் அவற்றின் நடமாட்டம் வெயில் காலத்தில் அதிகம்.

ஹட்டனை அடுத்திருந்த அந்த தோட்டத்திலும் பாம்புகள் நடமாட்டம் அந்த மாதம் அதிகரித்திருந்தது. மாதத்தில் ஓரிருவராவது பாம்புக்கடிக்கு ஆளாகி சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இரண்டு மூன்று நாள் சிகிச்சையின் பின்னர் அவர்கள் வீடு திரும்பினர். எப்போதோ ஒரு முறைதான் பாம்புக் கடியினால் உயிரிழப்பு ஏற்பட்டது.

அந்த மாதமும் ஒரு பாம்புக்கடி சம்பவம் அந்த தோட்டத்தில் இடம் பெற்றது. கடிக்கு ஆளானவர் தோட்டத்தில் கொழுந்து எடுத்துக் கொண்டிருந்த ஒரு நடுத்தர வயதுப் பெண். ஆனால் தேயிலை செடிகளுக்கு நடுவில் இருந்து அந்த பாம்பு கடிக்கவில்லை. கொழுந்து எடுத்து முடித்துக் கொண்டு தேயிலை மடுவத்துக்கு செல்லும் வழியில் மாலை 4 மணியளவிலேயே பாம்பு பாதையின் ஓரத்தில் இருந்து கடித்துள்ளது.

கடித்து விட்டு பாம்பு மறைவதற்குள் கூட வந்த மற்றொரு பெண் தொழிலாளி கையில் இருந்த மன்னைக் கத்தியால் ஓங்கி அடித்திருக்கிறார் அடி சரியாக பாம்பின் தலையில் விழுந்ததில் பாம்பு அந்த இடத்திலேயே சுருண்டு விட்டது.

பாம்புக் கடிக்கு ஆளாகிய பெண் கால் வலிப்பதாக கூறியதும் அவரை அங்கேயே அமரவைத்துவிட்டு கங்காணிக்கு தகவல் அனுப்பியிருக்கிறார்கள்.

கங்காணி துரையுடன் பேசி விட்டு வருவதற்குள் பாம்புக் கடிக்கு ஆளாகிய பெண்ணை வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்ல தோட்ட லொறி அங்கே வருவதற்கும் சரியாக இருந்தது.

அடிபட்ட பாம்பு குற்றுயிரும் குலையுயிருமாக இருந்து இப்போது உயிரை விட்டிருந்தது.

பாம்பு கடித்தால் அது என்ன பாம்பு என்று தெரிந்து கொண்டால் தான் அதற்கு சரியான மருந்தை வைத்தியரால் கொடுக்க முடியும் என்பது கங்காணிக்கு தெரிந்திருந்தது. எனவே அடிபட்டு செத்துவிட்டிருந்த பாம்பையும் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்ல தீர்மானித்தார். லொறியின் சாரதியும் அந்த யோசனையை ஆதரித்தான்.

லொறி சாரதி சுற்று முற்றும் பார்த்தான். லொறியின் மூலையில் ஒரு கேக் பெட்டி கிடந்தது. யாரோ எப்போதோ எதையோ கேக் பெட்டியில் வைத்து கொண்டு வந்து லொறியில் வைத்து சாப்பிட்ட பின் பெட்டியை மூலையில் வீசியிருக்கிறார்கள்.

பாம்பை ஒரு குச்சியால் எடுத்து பெட்டிக்குள் வைத்து மூடினார்கள். லொறியில் இருந்த பிரவுன் பேப்பர் பேக் ஒன்றில் பெட்டியை வைத்தனர். ஒரு கேக் பெட்டியை அழகாக பார்சல் செய்யப்பட்டதை போல் அது இருந்தது.

லொறி வைத்தியசாலைக்கு சென்றதும் பாம்பு கடித்த பெண் உடனடியாக உள்ளே சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்டார். செத்த பாம்பு இருந்த பேக்கை கையோடு எடுத்துச் சென்ற கங்காணி அதனை வார்ட்டில் இருந்த நர்சின் மேசையில் வைத்து விட்டு பாம்புக்கடிக்கு ஆளான பெண்ணுடன் உள்ளே சென்றிருக்கிறார்.

'கடித்த பாம்பை கொண்டு வந்தீர்களா' என்று டாக்டர் கேட்டதும் கங்காணியும் லொறி சாரதியும் உடனே வெளியே வந்து நர்சின் மேசையில் பாம்பு வைக்கப்பட்டிருந்த பெட்டியை தேடியிருக்கிறார்கள். பெட்டியை அங்கு காணவில்லை. இங்கே தானே வைத்தேன் என்று கூறிக்கொண்டே கங்காணி சுற்றும் முற்றும் தேடியிருக்கிறார்.

கங்காணியும் லொறிச் சாரதியும் எதையோ தேடுவதைக் கண்ட நர்ஸ் அருகே வந்து விசாரித்தாள்.

ஒரு பெட்டி என்று இழுத்தார் கங்காணி.

ஆம் ஒரு பிரவுன் பேக்கில் என்றாள் நர்ஸ்.

அந்த பார்சல்தான் எங்கே காணவில்லை என்றான் சாரதி.

கங்காணி மேசைமேல் பார்சலை வைத்ததை நர்ஸும் கண்டிருக்கிறார். ஆனால் இப்போது அந்த பார்சலை காணவில்லை.

என்ன தேடுகிறீர்கள் என்று கேட்டார் அங்கு நாற்காலியில் அமர்ந்திருந்த ஒரு பெரியவர்.

இங்கே இருந்த பார்சல் என்று இழுத்தான் லொறிச்சாரதி.

ஒருவர் அதை எடுத்துக் கொண்டு அவசர அவசரமாக வெளியே சென்றாரே... நான் பார்த்தேன் என்று கூறினார் அந்த பெரியவர்.

கங்காணியும் லொறிச் சாரதியும் பேக்கை கொண்டு வந்து அங்கே வைத்ததை பார்த்திருந்த ஒருவர் இருவரும் டாக்டரின் அறைக்குள் நுழையும்வரை காத்திருந்து ரகசியமாக அதை எடுத்துச் சென்றிருக்கிறார்.

உள்ளே இருப்பது கேக் என்று நினைத்துத்தான் அவர் அதை எடுத்துச் சென்றிருக்கிறார்.

ஆனால் உள்ளே இருந்தது என்ன என்பது உங்களுக்கும் கங்காணிக்கும் லொறிச் சாரதிக்கும் மட்டுமே தெரியும் உள்ளே இருப்பது என்ன என்று யாரிடமும் சொல்லிவிடாதீர்கள்.

அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது...

---

## பசுமையின் உதயம் நோக்கி...

(18ஆம் பக்கத் தொடர்)

பொதுமக்களின் அன்றாட தேவைகளை மேற்கொள்வதில் பயன்படக் கூடிய பிரமாண்டமான பாலங்களும் கிழக்கு மாகாணத்திலே ஆங்காங்கு அமைக்கப்பட்டிருக்கின்றன.

பொதுமக்களுக்கு தமது காலத்தையும் சிரமத்தையும் சேமித்துக் கொள்ளவும் உயிர் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளவும் இப் பாலங்கள் துணை புரிகின்றன.

அதே போன்று வர்த்தகம், கைத்தொழில், நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இப் பாலங்கள் மக்களுக்கு துணை புரிகின்றன. வள்ளங்கள் ஊடாக பாதுகாப்பற்ற வகையில் இக்கரையில் இருந்து அக்கரைக்கு சென்ற மக்கள் இன்று மிகவும் இலகுவாகவும் பாதுகாப்பான முறையிலும் பயணம் செய்து வருகின்றனர்.

கிழக்கு மாகாணத்துக்குள் தற்போது பெரும் அளவிலான பாலங்களின் நிர்மான வேலைகள் பூர்த்தியடைந்து அவைகள் மக்களின் பயனுக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளன.

அவை பின்வருமாறு

**அருகம்பே பாலம்**
**கின்னியா பாலம்**
**இறக்காமம் பாலம்**
**கோட்டை கல்லாறு பாலம்**
**பெரிய கல்லாறு பாலம்**
**நைனாக்காடு பாலம்**
**வாவுகல பாலம்**
**யானை விழுந்தான் பாலம்**
**ஹொராபிட்டிய பாலம்**
**பக்கிலி கந்துவ பாலம்**
**ஓட்டமாவடி பாலம்**
**யாங் ஓயா பாலம்**
**புடவைக் கட்டு பாலம்**

இதற்கு புறம்பாக கிழக்கு வாழ் மக்களின் பயனுக்காக தற்போது அமைக்கப்பட்டு வரும் பாலங்கள் பின்வருமாறு

**கல்லடி பாலம்**
**காயங்கேணி பாலம்**
**பனிச்சங்கேணி பாலம்**
**வெருகல் பாலம்**
**கங்கைப் பாலம்**
**இறால்குழி பாலம்**
**உப்பாறு பாலம்**

### குடிநீர் விநியோகம்

கிழக்கு மாகாணத்தில் மக்கள் எதிர் கொள்ளும் மற்றொரு முக்கிய பிரச்சினை குடிநீர் பற்றாக்குறையாகும். கடல் ஓரங்களில் வாழும் மக்களைப் போலவே ஏனைய பிரதேச மக்களும் இப்பிரச்சினையால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். அதற்கு பரிகாரமாக சுத்திகரிக்கப்பட்ட குடி நீர் வழங்குவதற்காக பல கருத்திட்டங்கள் கிழக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:

இந்நீர் விநியோக திட்டங்கள் மூலம் நன்மை பெறுவோர் கிழக்கு மாகாணத்தில் வாழ்கின்ற மக்களேயாவர். அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை பிரதேசங்களை மையமாகக் கொண்டு பாரபட்சமற்ற முறையில் இந்த வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

### மீன்பிடி கைத்தொழில்

கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் அது நீண்ட கடலோரத்தை கொண்டது. மேலும் நன்னீர் மீன் வளத்தை மேம்படுத்தக் கூடிய குளங்கள் பல இங்கே அமைந்துள்ளன. மேலும் தேசிய மீன் உற்பத்தியில் கிழக்கு மாகாணம் அபிவிருத்தியில் முக்கிய இடத்தை வகிக்கிறது. தேசிய மீன் உற்பத்தியில் 20 சதவீதத்தை கிழக்கு மாகாணம் உற்பத்தி செய்கிறது. 2007/09 காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தின் மீன் உற்பத்தி 35 ஆயிரம் மெட்ரிக் தொன்னில் இருந்து 67 ஆயிரத்து 500 மெ.தொன் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. மீன் பிடித்தொழிலில் ஈடுபடும் குடும்பங்களின் தொகை 2007 முதல் 2009 வரை 52, 281 இல் இருந்து 58, 882 வரை அதிகரித்தது. அரச மீன்பிடித்துறையில் அபிவிருத்திக்காக மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் இதற்கு முக்கிய காரணியாக அமைந்திருக்கிறது.

மீன்பிடித் தொழிலில் நவீன தொழில்நுட்பத்தை கையாளுதல், உயர்ரக மீன் வளர்ப்பு நிலையங்கள் அமைத்தமை, மீனவர்களுக்கு நன்னீர் மீன் வளர்ப்புக்கான நுட்ப முறைகளை அபிவிருத்தி செய்தல் போன்ற அரசின் செயற்பாடுகள் மீன்பிடித்தொழிலை அபிவிருத்தி செய்வதில் அச்சாணியாக விளங்கியது. அரசினால் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக மட்டக்களப்பு, திருகோணமலை பிரதேசங்களில் வாழும் மீனவர்களுக்காக செய்முறை வலயங்கள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி இங்கினியாகல நீரியல் வள அபிவிருத்தி நிலையத்தை நவீன தொழில்நுட்பத்துடன் அபிவிருத்தி செய்வதற்கும் இப்பிரதேசத்தில் உள்ள நன்னீர் மீன் வளர்ப்பு மற்றும் அலங்கார மீன் வளர்ப்பை ஊக்குவிக்கவும் நீரியல் வள பூங்காக்கள் அபிவிருத்தி செய்வதற்கும் அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

இதன் மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் இளைஞர்களுக்கு தொழில் வசதி வழங்கப்பட்டிருக்கிறது. முல்லைத்தீவு, புடவைக்கட்டு, கொட்டியார், வாழைச்சேனை, பொத்துவில் போன்ற மீன்பிடி துறைமுகங்களையும் நங்கூர நிலையங்களையும் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டமையால் கிழக்கு பிரதேசத்திலே மீனவர்கள் பெரும் நன்மை அடைந்து வருகிறார்கள்.

### கால்நடை அபிவிருத்தி

நாட்டின் கால்நடை தொகையில் 30 சதவீதத்தினை கொண்டுள்ள கிழக்கு மாகாணமானது 17 சதவீதமான பாலுற்பத்தியில் பங்கெடுக்கின்றது. 2006 - 2009 காலப்பகுதியில் நாளொன்றுக்கு 6.9 மில்லியன் லீட்டராக இருந்த பாலுற்பத்தி 18.4 மில்லியன் லீட்டராக அதிகரித்தது.

கிழக்கு இலங்கையிலே கால்நடை அபிவிருத்தி செய்வதற்காக அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் இந்த அபிவிருத்திக்கு அச்சாணியாக விளங்குகிறது.

நாட்டில் பாலுற்பத்தியை அதிகரிப்பதில் அரசின் தொலைநோக்கு மஹிந்த சிந்தனையில் இவ்வாறு குறிப்பிடப்படுகிறது.

''எமது நாட்டின் பால் தேவையில் 15 சதவீத அளவிலான சிறிய தொகை மட்டும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்த துரதிஷ்டவசமான நிலைமையில் இருந்து நாம் உடனடியாக மீட்சி பெற வேண்டும். இறக்குமதி செய்யப்படும் பால் மாவுக்கு சலுகைகளை வழங்கி வெளிநாட்டு கம்பனிகளை வளம் பெறச் செய்வதற்கு பதிலாக மீண்டும் பால் பொங்கும் நாடொன்றை நோக்கி நாம் நகர வேண்டும்'' (மஹிந்த சிந்தனை 51ஆம் பக்கம்)

இந்த தொலைநோக்கை அடிப்படையாக கொண்டு அரசு கிழக்கிலங்கை உட்பட நாடளாவிய ரீதியில் கால்நடை அபிவிருத்திக்காக பல அபிவிருத்தி உபாய முறைகளை முன்னெடுத்துச் செல்கிறது. அவ்வுபாய முறைகள் வருமாறு:

(31ஆம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இணையத்தில் உலாவரும் மதனகாமராஜர்கள்

ஜேர்மனியில் இன்டர்நெட் மூலமாகவே ஒரு தமிழ்க்குடும்பம் பிரிந்து விட்டது. திருமணம் முடித்து முதல் வருடமே தனது மனைவியோடு செலவு செய்யும் நேரத்தை விட அதிகமான நேரத்தை இன்டர் நெட்டில் செலவு செய்ததன் விளைவாகவே தடல் புடலாக செய்த திருமணம் முறிந்து விட்டது. அவர்களுக்கு ஒரு குழந்தை வேறு!

கணவன் கொம்பியூட்டருக்குள்ளே முகத்தை பொருத்தி வைத்திருப்பான் என்று அந்த பெண்மணி கவலையோடு சொன்னாள். கைக்குழந்தையென்றும் பாராமல் அவள் கணவனிடமிருந்து பிரிந்து வேறாகி இருக்கிறாள். இத்தனைக்கும் அவர்கள் இருவரும் காதலித்ததே இன்டர்நெட்டில் தான்! இரவு பகல் என்று பாராமல்




இன்டர்நெட்டில் காதலித்தவர்களின் திருமண பந்தத்தை எது சேர்த்ததோ அதுவே பிரித்தும் விட்டது!

இன்டெநெட் உண்மையில் பிரச்சனைக்குரியதா? என்ற கேள்வி பரவலாக எழுப்பப்படுகின்றன. வேறு பொழுது போக்குகளை விட மிக அதிக நேரத்தை விழுங்கும் ஒன்றாகவும் முழு சுதந்திரமான ஒன்றாகவும் இருப்பதனால் அதனை சிறுவயதினர் முதல் வாலிபர்கள் பெரியவர்கள்வரை விரும்புகின்றனர்.

''நெட் கபேக்" களில் போய்ப் பார்த்தால் பெரும்பாலனவர்கள் செக்ஸ் பக்கங்களையே பார்த்துக் கொண்டிருப்பதைக் காணலாம். இது வயது வித்தியாசமின்றி பார்க்கக் கூடிய சுதந்திரத்தை வழங்குகிறது. வீடுகளில இதற்கு எந்த விதத்திலும் பெற்றோரின் அனுமதி கிடையாது என்பதனால் சிறுவர்கள் நெற்கபேகளை மொய்க்கிறார்கள். நெட்ஊடாக ஒரு சுதந்திர உலகத்துக்குள் பிரவேசிப்பதாக சிறு வயதினர் உணருகிறார்கள். தங்களை எதுவும் கட்டுப்படுத்த முடியாது என்ற தற்துணிவு அவர்களுக்கு ஏற்பட்டுவிடுகிறது. சாதாரண ஆங்கிலம் தெரியாத இலங்கை குடிமகன் 'புக்கி' பேப்பரை வாசிப்பது மாதி

சாதாரண ஆங்கில அறிவோடு முழு உலகத்தையே இங்கே வலம் வரலாம். இங்கே ஒரு கண்ணாமூச்சி விளையாட்டுத்தான் நடக்கிறது. இன்டர் நெற்றில் சட்டிங் செய்யப் போனால் வரும் முதலாவது கேள்வி வரும் நீங்கள் ஆணா-பெண்ணா? என்பது தான். ஆண் பெண்ணாகவும் பெண் ஆணாகவும் நடிக்கலாம் இன்ரநெற்றில். உங்களோடு தொடர்பு வைத்திருப்பவர் யாரென்று தெரிய உங்களுக்கு வாய்ப்பே இல்லாமல் போய்விடும்.

இன்ரர்நெட்டில் காதல் இல்லாமல் பேசிக் கொண்டிருப்பது, ஒரு பெண் என்றால் கிளர்வூட்டும் இச்சை ததும்பும் வார்த்தைகளால் அவளைக் கவர ஆண் முயற்சி செய்கிறான். அப்படியே பெண்களும் முயற்சி செய்கிறாள். யாருக்கும் தெரியாமல் மனக்கிளர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய ஒரு சாதன-மாகவே சிலரால் இன்டர்நெட் அவதானிக்கப்படுகிறது. இன்டர் நெற்றில் ஒருவர் எவ்வளவு பொய் வேண்டுமானாலும் சொல்லலாம். வேறொருவர் போல நடிக்கவும் முடியும்.



இன்டர் நெற் காதல்கள் பெரும்பாலும் அவநம்பிக்கையில் தான் மலருகின்றன. ஆனாலும் அதுவும் காதலாகத்தான் பரிணமிக்கின்றன. ஒருவரை ஒருவர் காணாமலும் குணாதிசயங்களை அறியாமலும் அவராக இருப்பரோ என்ற சந்தேகத்திலும்தான் தினமும் கதைப்பார்கள். இது காதலிக்கும் இருவருக்கும் ஒருவகை அமைதியில்லாத மன உணர்வுகளை ஏற்படுத்தி மனச்சோர்வு வியாதிக்கும் சிலரை இட்டுச் செல்லும். திடீரென்று உண்மைகள் தெரிய வரும் போது பெரும்பாலும் இந்தக் காதல்கள் வாடி வதங்கிப் போய்விடுகின்றன.

சுமார் ஒரு வருடமாக இன்ரநெட்டில் காதலித்து வந்த மேரி வாடிச் சுருண்டு விட்டாள். மேரி வங்கியில் காசாளராக இருக்கிறாள். ஒரு இரவு ஒருவன் தன்னை ஜோர்ஜ் என்று அறிமுகப்படுத்திக் கொண்டு வந்திருக்கிறான். தான் இங்கிலாந்தில் இருப்பதாகவும். தானும் வங்கியொன்றில் பணி புரிவதாகவும் கூறி மிகவும் கண்ணியமான முறையில் காதலை வளர்த்திருக்கிறான். உண்மையில் மனம் விட்டு மேரி காதலித்தாள். அவனை நம்பி விட்டாள். இலங்கைக்கு வந்து சந்தித்து அவளைத் திருமணம் முடித்து இங்கிலாந்துக்கு அழைத்துச் செல்வதாகவும் வாக்குறுதி கொடுத்திருந்தான். அவனும் கண்டிக்கு வந்தான். மேரி அவன் தங்கியிருந்த ஹோட்டலுக்கு தனது அக்காவுடன் போனாள். அவனைப் பார்த்த பின்பு தான் தெரிந்தது அவனுக்கு வயது 42 என்பது. இருவரும் வயதைப்பற்றி பேசாமல், முகம் பாராமல் காதலித்ததன் விளைவை மேரி கண்டாள். எதுவுமே பேசாமல் ஹோட்டலை காலி செய்தாள் மேரி.

இன்டர்நெட்டில், பல எத்தர்கள் உலா வருகின்றனர். அவர்களையெல்லாம் கண்டுபிடிப்பது கடினம். இங்கே காதல் என்று வரும் போது நேர்மையற்ற செயல்கள் மூலம் பெரும் ஆபத்தான விளைவுகளை சந்திக்க நேருகிறது. காதல் என்றால் நிறைய முன் ஜாக்கிரதை அவசியம்.

ஆபத்தானதும் காமக் கிளர்ச்சியூட்டக் கூடிய வெப்சைட்டுகளையும் பார்க்கக் கூடாது என்ற எச்சரிக்கை பெற்றோரால் விடுக்கப்படுகிறது. ஆனால் எத்தனை பிள்ளைகள் இந்த அறிவுரையை கேட்கின்றனர்? எல்லோருக்கும் தெரியக்கூடிய இடத்தில் கம்பியூட்டரை வைக்க வேண்டுமென்று சில சிறுவர் கருத்தரங்குகளில் வற்புறுத்துகிறார்கள். புதியவர்கள் சிறுவர்களுடன் தொடர்பு கொள்வதற்காக இன்டர்நெட்டை பயன்படுத்தும் போது எண்ணிப் பார்க்க முடியாத ஆபத்துகளுக்குள் அவர்களை கொண்டுபோய் தள்ளி விடுகிறது.

மெது மெதுவாக காமம், ததும்பும் உணர்வுகளை சிறுமிகளின் மனதில் விதைக்க இன்டநெட் சாத்தியமான வழியைத்திறக்கிறது. நுண்ணிய உணர்வு-களை அவர்கள் விளங்கப்படுத்துகிறார்கள். சில ஸ்பரிசங்களை செய்து பார்க்கும் படி சொல்கிறார்கள். தனிமை யில் இருக்கும் சிறுமிகள் கிளர்வு மேலீட்டால் அதனை செய்து பார்க்க உந்தப்படுகிறார்கள்.

தங்கள் இச்சையைத் தீர்த்துக் கொள்ள சிறு பிள்ளைகளைத் தேடி அலையும் காமாந்தகர்கள் பலர் இன்டநெட்டில் இளைஞர்களைப் போல பாசாங்கு செய்கிறார்கள் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

ஒரு ஆய்வின் படி இன்டர் நெட்டைப்பயன்படுத்துகிற ஐந்து பிள்ளைகளில் ஒரு பிள்ளை பாலியலில் ஈடுபட அழைக்கப்படுகிறது. பத்தில் இருந்து பதினேழு வயதுள்ள முப்பத்து மூன்று பிள்ளைகளில் ஒரு பிள்ளை இன்டநெட் உரையாடல்கள் மூலம் தொடர்ந்து பாலியல் தொல்லைகளுக்கு உள்ளாக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையிலும் இந்த அச்சம் ஏற்பட்டிருக்கிறது வேலைக்குப் போகும் பெற்றோர் வீட்டில் உள்ள பிள்ளைகள் விடயத்தில் அதிக கவனம் செலுத்துவதில்லை. கொம்பியூட்டர் முன் தனது பிள்ளை என்ன செய்கிறது என்பதனை பெற்றார் கண்டு கொள்வதில்லை. நெற் மூலம் என்னவெல்லாம் செய்யலாம் என்பது பெரும்பாலான பெற்றோருக்குத் தெரிவதில்லை.

இன்ரநெட்டில் இளைஞர் ஒருவரை காதலிப்பதாக நினைத்துக் கொண்டிருந்த இளைஞி ஒருத்திக்கு பேரதிர்ச்சி ஏற்பட்டது. தான் காதலித்த அந்த நபர் வயதில் மூத்த சிறைக் கைதி என்ற உண்மை நீண்ட நாட்களுக்கு பிறகே அவளுக்கு தெரிய வந்தது. இப்படித்தான் பாழ் கிணற்றில் பலர் தவறி விழுகின்றனர். இவர்கள் வலு நுணுக்கமாக தமது வலையை விரிக்கிறார்கள். எடுத்த எடுப்பில் எல்லோரும் செக்ஸ் பேச்சுக்களை ஆரம்பிப் பதில்லை. அதனால் மிகவும் சற்றிங் செய்யும் போது மிகவும் அன்பாகவும் வலு சுவாரஸ்யமாகவும் பேசுவார்கள். நட்புத் தோரணையில் செய்திகளை அனுப்புவார்கள். கொஞ்சம் கொஞ்சமாக தமது விருப்பங்களை வெளியிடு வார்கள். எதிர் முனையில் இருப்பவர் தன்னை முழுமையாக நம்பும் வரை இந்தக் காத்திருப்பு தொடரும். பின்னர் சிறிது சிறிதாக செக்ஸ் உரையாடல் ஆரம்பமாகும். அதிகமாக இதில் பலியாகிப் போவது, புள்ளிவிபரங்களின் படி, பதினைந்து வயதுக்கு கீழ்ப்பட்ட பெண்பிள்ளைகள் என்பது தான் அதிர்ச்சி!

சுயபால் சேர்க்கையாளர்களும் 'சற்றிங்' மூலமாக தங்களது இச்சையை தீர்த்துக் கொள்கிறார்கள். இதில் ஆண் பெண் என்று வித்தியாசம் கிடையாது. இதன் விளைவாக பல இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள் பாலியல் வல்லுறவுக்கும் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கும் உட்படுத்தப்படுகின்றனர். இதற்கு இணங்காதவர்கள், மறுப்பவர்கள், எதிர்ப்பு காட்டுபவர்கள் முடிவில் அடித்து துன்புறுத்தப்படுகிறார்கள். அல்லது கொலை செய்யப்படுகிறார்கள். இந்த விபரங்களை வெளிநாட்டு பத்திரிகைகள் சஞ்சிகைகளில் தினமும் காணலாம். தீயவர்கள் தங்களுடைய மன இச்சையை தீர்த்துக் கொள்வதற்கு தினமும் 'சற்றிங்' இல் அலைகிறார்கள், பசுத்தோல் போர்த்தியபடி. எனவே சற்றிங்கில் சந்திக்கிற அனைவரும் நல்லவர்கள் அல்ல.

''இன்டநெட் காதல் மிகவும் மோசமானது. ஏனெனில் மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள். இவர்கள் பெரும்பாலும் வேறொரு பாலினரைப் போல் நடிக்கிறார்கள். தொடர்பு கொள்பவர் ஆணா பெண்ணா என்பதனைக் கூட தெளிவாக உணர முடியாது. ஒருவர் திருமணம் முடித்தவரா இல்லையா? போன்ற மிக அத்தியாவசியமான விபரங்கள் எளிதில் மறைக்கப்பட்டு விடுகின்றன.

இப்பொழுது பல உத்திகளோடு நடக்கும் ஒரு வியாபாரமாக இன்டநெற் கபேக்கள் மாறிவிட்டன. இது காதலர்களுக்கு பிரச்சனையில்லாத மறைவிடமாகவும் மாறிவருகிறது. ஒரு மணித்தியாலத்திற்கு 30 ரூபா கொடுத்துவிட்டு மற்றவர்களின் தொந்தரவு இல்லாமல் இரகசிய-மான மொழியில் காதல் செய்வதற்கு இதை விட உகந்த இடம் இல்லை.

இன்டநெட் காதலின் அபாயங்கள் பற்றி நிறைய விவாதிக்கப்பட வேண்டியது அவசியமாகும். தினமும் பேசுகிற அல்லது பார்க்கிறவர்களை விட சற்றிங்கில் வரும் நண்பரோ நண்பியோ அறிவில் அல்லது உலக விடயங்களில் உயர்ந்தவராக இருக்கலாம். எனவே வீட்டிலுள்ளவர்கள் கணவன் அல்லது மனைவி, தாய், சகோதரர், சகோதரிகள் போன்றவர்கள் மற்றும் அயலவர்களோடு நேரம் செலவழிப்பது வீண் என்ற மனோபாவம் ஏற்படுகிறது. வீட்டில் இருக்கும் நேரத்தை கொம்பியூட்டர் முன் செலவழிக்க ஆரம்பித்து விடுவார்கள். இதனால் உறவுகளுக்குள் பிளவு, பிரிவு, மனக்கசப்பு, வெறுப்பு இயல்பாகவே வந்து விடும்.

உண்மையில் இன்ரநெட் ஒரு சிறந்த சாதனம். ஒரே நொடியில் காரியமாற்ற முடியும் - பக்ஸ், தொலைபேசி, ரெலக்கஸ் தந்தி என்று சிரமமப்படுவதை விட மிக மிக குறைந்த செலவில் தொடர்பாடலுக்கு இலகுவானதுதான். ஆனால் காதலுக்கு உசிதமானதல்ல.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோச்சடையான்:

# வரும்... ஆனால்... வரும்!

கோச்சடையானா? வரும்...ஆனா வராது... என்று சாக்குருவி போல சாபம் போட்டுக் கொண்டிருந்தவர்கள் வாயில் மண் போடுகின்ற மாதிரி செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. படத்தின் அறுபது சதவீத படப்பிடிப்பு வேலைகள் முடிவடைந்து விட்டன. ஆரம்பத்தில் இந்தப் படம் எப்படி வருமோ என்று சந்தேகப்பட்டுக் கொண்டிருந்த ரஜினி, தன் உடல் நிலை பிரச்சினைகளையும் மறந்து இப்போது உற்சாகமாகி விட்டார்.

கோச்சடையான் ஒரு அனிமேஷன் படம் என்பதைத் தவிர வேறு எந்தத் தகவல்களையும் கசிய விடாமல் ரொம்ப ஜாக்கிரதையாக இருந்து வருகிறார் இயக்குநர் மற்றும் தயாரிப்பாளர் சௌந்தர்யா. இந்தப் படம் சிறுவர்கள் மத்தியில் விளம்பரப்படுத்தப்பட்டு ஒரு 'கிரேஸை' அவர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக கோச்சடையான் பெட்ஜ், டி-ஷர்ட், தொப்பி, சாவிக் கொத்து போன்றவற்றை தயாரித்து விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கோச்சடையானைப் பார்க்க குடும்பம் குடும்பமாக வரவேண்டும் என்பதற்காகவே இந்த ஏற்பாடு. வேறு சில முயற்சிகளையும் சிறுவர்களைக் கவர்வதற்காக மேற்கொண்டு வருகிறதாம் கோச்சடையான் குழு.

இதுவரை எடுத்த காட்சிகள் அருமையாக வந்திருப்பதால் சௌந்தர்யா மகிழ்ச்சியில் இருக்கிறார். லண்டனிலும் சென்னையிலும் எடுத்த காட்சிகளுக்கு முழு உருவம் கொடுக்கும் வேலையில் குழுவினர் முழு மூச்சாக ஈடுபட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க, முற்றிலும் புதிய தொழில்நுட்ப பிரயோகத்தில் இப்படம் எடுக்கப்படுவதால் எதிர்பார்த்ததைவிட மிக அதிகத்துக்கு பட்ஜட் எகிறிவிட்டதாம். முழுப் படத்தையும் எடுத்து மெருகேற்றி விளம்பரம் செய்து வெளியிடும் போது மொத்த பட்ஜட் இரண்டரை மடங்காக எகிறும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. தயாரிப்பு குழுவினருக்கு இது கலக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. எனினும் சௌந்தர்யா, ரஜினி டீம் இனி முன் வைத்த காலை எப்படியும் பின் வைக்க முடியாது. கோடிகளைக் கொட்டியாயிற்று. இனி மீதியையும் எங்கேயாவது தேடி படத்தை முடிப்பதைத் தவிர வேறு வழி இல்லை.

நீங்கள் பயந்து விடாதீர்கள். படம் எப்படியும் உங்கள் பார்வைக்கு வரும். ஆனால் 2013ல் தான். தமிழ் சினிமாவில் இது ஒரு இமாலய முயற்சிதான், சந்தேகமே இல்லை!



## கதாநாயகனாக வையாபுரி

நகைச்சுவை நடிகர்கள் கதாநாயகனாக நடிக்கும் பட்டியலில் தற்போது இணைந்திருப்பவர் நடிகர் வையாபுரி. பிரபு சாலமனின் உதவியாளர் கிருஸ்ணா. இயக்கும் 'மழையில் நனைந்த தங்கம்' படத்தில் இவர் நாயகனாக அறிமுகமாகிறார். கதாநாயகி இன்னும் தேர்வாகவில்லை. இரண்டு பிள்ளைகளின் தந்தையாக நடிக்கும் வையாபுரி. தன் முன்னேற்றத்திற்கு தடைக்கல்லாக வரும் பெரும் மழையை எப்படி சமாளித்து முன்னேறுகிறார் என்பதுதான் கதை. இதில் 'மழை' முக்கிய வேடத்தில் நடிக்கிறதாம்!



## அக்டோப

விரைவில் வெளிவரவிருக்கும் ப
தென் மாவட்டங்களில் இருந்து தே
தோட்டங்களில் வேலை செய்வத
பெயர்ந்த தமிழ்த் தொழிலாளர்க
பண்ணியிருக்கிறார் பாலா. சிவகங்
ஆகிய பிரதேசங்களில் இருந்து பஞ்சம் பிழைக்கவென
பற்றிய பதிவை இதுவரை எந்தத் தமிழ்ப்படமும் மேற்கொ
வேண்டும் எனத் தோன்றியிருக்கிறது.

90 நாட்களில் படப் பிடிப்பை முடித்திருக்கும் பாலா, ஏ
மூழ்கியுள்ளார். படத்தில் அதர்வா கதாநாயகன். நாயகி
உடையலராங்காமும் தோற்றமும் தமிழ் சினிமாவுக்கு புதி
யுனிட். அப்படியானால் அன்றைய தென் மாவட்ட வழக்க
கோவணத்திலும் தன்ஷிகா பிளவுஸ் அணியாமலும் வரு
பாலா படத்தில் எதுவும் நடக்கலாம். தயாரிப்பாளரான ப
Sure என்கிறார்.



## பாடகி வாய்ப்பை

தெலுங்குப் பெண்ணாக இருந்தாலும்
ஆற்றல் உடையவர் அ
நடிகர்களுடன் தமிழிலிலேயே பேசிக்
படங்களுக்கு அவ
இதனால் படத்
இசையமைப்ப
ஆனால் 'அ
என்று

## BOLL

## சூத்

ஏற்றிவிட்ட
மறந்துவிட்ட
தமிழ் திரைய
அம்மணியின்
கட்டுவதுதான்
முன்னணி ந
அவருக்கு
ஜாலியா
தமிழ் நா
அசின் போ
ஆராய மு
சூத்திரத்
படுகிற
அதெ
பெரிய



## தாராள

## எமிஜெக

தமிழ் நாட்டு நடிகைகளே க
கவலைபடாமல் அறைகுறை
போது பிரிட்டன் இறக்குமதியான
பற்றி கவலைப்படுவாரா? தி
வரும்போது ரொம்பவும் தாராள
அணிந்து வருகிறார்.
பிடிப்பாளர்களின் வி
விளங்குகிறார். அவர்
புகைப்படக்காரர்கள் கூட்டம்
அவரைச் சூழ்ந்து மின்னல்கள
போட்டுத் தள்ளுகிறார்கள். நம்ம
போது எங்கே போட்டோ
வைத்து மறைத்துக் கஷ்டப்படு
தாராளமாக எடுங்கப்பா
போட்டோக்காரர்களின்
பத்திரிகைகளில் அ

# பிரபுவை மறக்க முடியாத நயன்தாரா!

''உங்க காதலே முடிஞ்சு போச்சு... அப்புறம் எதற்கு கையில அவர் பெயரை குத்தி வைத்திருக்கீங்க? அதை அழிச்சிடுங்க'' என்று சக நடிகர்கள் நயன்தாராவுக்கு ஆலோசனை சொல்லியும் அதை ஏற்க மறுக்கிறாராம் நயன்தாரா. ஆனால் குத்திய பச்சையை அழிக்க நயன் மறுப்பதாகக் கேள்வி. அவர் என்னைப் பிரிந்திருக்கலாம். ஆனால் என் காதல் அப்படியே தான் இருக்கிறது. என்று பிடிவாதம் பிடிக்கிறாராம் அம்மணி. ஆனால், பிரபுதேவா தரப்போ அம்மணியை அடியோடு மறந்து தலை முழுகிவிட்டது. ஆனால் நயன் மட்டும் இலவு காத்த கிளிப்போல காத்திருக்கிறார். பாவமாக இல்லை, இந்த நடிகைகளின் [illegible] பார்க்கும்போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...பரில் பரதேசி

a film by bala

...ரதேசியல்
...தேயிலைத்
...ற்காக புலம்
...ளை மையமாக வைத்து இம்முறை படம்
...ங்கை, இராமநாதபுரம், ராமேஸ்வரம், தஞ்சாவூர்
...புறப்பட்டுச் சென்ற இலட்சக்கணக்கான தமிழர்கள்
...காள்ளவில்லை. பாலாவுக்குத்தான் அதைச் செய்ய

...னைய வேலைகளில் இப்போது
... தன்ஷிகா. இவர்களின்
...யதாக இருக்கும் என்கிறது
...கப்படி அதர்வா
...வார்களோ? இருக்கலாம்.
...ாலா, அக்டோபரில் ரிலீஸ்



# லண்டனில் படமாகும் 'காதலே என்னைக் காதலி'

வழக்கமாக ஓரிரு பாடல்களை மட்டுமே லண்டனில் படமாக்கும் நமது தமிழ் சினிமாகாரர்கள். முதன் முறையாக 'காதலை என்னை காதலி' படத்தின் படப்பிடிப்பை முழுக்க முழுக்க லண்டனிலேயே வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

''லண்டனில் வாழும் தமிழ் குடும்பத்தை சேர்ந்த நாயகனுக்கும், மேற்கத்திய கலாசாரத்தை சேர்ந்த நாயகிக்கும் காதல் பிறக்கிறது. இவர்களுடைய காதல் கல்யாணத்தில் முடியும் போது, கலாசாரத்தை முன்னிறுத்தி பிரச்சனை ஏற்படுகிறது. தங்கள் கல்யாணத்துக்கு குறுக்கே நிற்கும் கலாச்சார மாறு-பாடுகளை காதலர்கள் எப்படி சரி செய்து வாழ்க்கையில் ஒன்று சேருகிறார்கள் என்பதை யதார்த்தமாக சொல்லியுள்ளோம் என்கிறார் இயக்குநர் ஷான்.

நாயகனாக ''காதல் செய்ய விரும்பு'', ''மிட்டாய்'' உட்பட படங்களில் நடிக்க சந்தோஷ், நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக ஹாலிவுட் நடிகை அனாரா நடிக்கிறார். முக்கிய வேடத்தில் நடிக்கும் மனோரமா, 'நிழல்கள்' ரவி இருவருக்கும் அழுத்தமான பாத்திரங்களாம். முழுக் கதையும் லண்டனில் நடைப்பெறுவதால் லோகேஷன்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து படமாக்கியிருக்கிறோம். லண்டனில் உள்ள புகழ் பெற்ற இரவு விடுதிகளில் படமாக்கப்பட்டுள்ள பெலிலடான்ஸ் ஹைலைட்டாக இருக்கும். இது ஹொலிவுட் ஸ்டைலில் காதலுக்கு மரியாதை செய்யும் படமாக இருக்கும்..'' என்கிறார் பாடலாசிரியரும் இயக்குநருமான ஷான்.



# ...மறுத்த அஞ்சலி

...ம், தமிழில் சரளமாக பேசக்கூடிய
...அஞ்சலி. தன்னோடு நடிக்கும் சக
...கொண்டிருப்பார். தான் நடிக்கும்
...வரே தமிழில் டப்பிங் பேசுகிறார்.
...த்தில் ஒரு பாடலை பாடும் படி
...பாளர் ஒருவர் கேட்டிருக்கிறார்.
...அதெல்லாம் நமக்கு வராதுங்க'
... அன்புடன் மறுத்து விட்டாராம்
அஞ்சலி.

# ரம்பா வாழ்க்கையை கலைக்க முயற்சி?



லண்டன் வாழ் ஈழத்தமிழரை திருமணம் முடித்து குழந்தை குட்டியுமாக குடும்ப பெண்ணாகி விட்டார் தொடையழகி ரம்பா. ஆனால், கோடம்பாக்கத்துக்காரர்களுக்குத்தான் ஒரு நடிகை திருமணமாகி குடும்பமும் குடித்தனமுமாக வாழ்வது பிடிக்காதே! உடனே வதந்தி பரப்பி விட்டார்கள், லண்டன் கணவரோடு ரம்பா தகராறு, விவாகரத்திற்கு தயாராகி விட்டார் ரம்பா என்று! இதைக் கேட்ட ரம்பா ஆத்திரத்தில் நெருப்பாகக் கொதித்துக் கொண்டிருக்கிறாராம். ''என் வாழ்க்கை மற்றவர்களுக் கிடைக்காத ஒரு அற்புதமான வாழ்க்கை. புருஷன் பெண் என்று நல்லாதான் வாழ்க்கை நடக்குது. ஆனால், தமிழ் நாட்டு காரர்கள் சும்மா இருக்காமல் புருஷனை விட்டு பிரிந்து விட்டதாக வதந்தி கிளப்புறாங்க'' என்று சொல்லி சொல்லி மாய்ந்து போகிறாராம் தொடையழகி. திருமணமான நடிகைகளிடம் திரும்பவும் நடிக்க வந்தால் நல்ல வாய்ப்பும் வருமானமும் கிடைக்கும் என்று சென்னை படவுலக பட்சிகள் வேதம் ஓதி நடிகைகள் மனதை கலைப்பது உண்மைதான். சில நடிகைகள் தான் இந்த சுனாமிகளுக்கு அசராமல் குடியும் குடித்தனமுமாக வாழ்க்கையை தொடர்கிறார்கள். அதுவே ரம்பாவுக்கும் ஆகட்டும்!

# ...YWOOD

## ...திரம் தெரிந்த அசின்!

... ஏணியான தமிழ் திரையுலகத்தை
...ார் என்று அசின் மீது ஒரு குற்றச்சாட்டு
...லகில் பரவலாக இருக்கிறது. ஆனால்
...நீண்ட கால கனவே மும்பை திரையுலகில் கொடி
... அவர் நினைத்தபடி எல்லாம் நடந்து முடிய மும்பையில்
...ட்சத்திர அந்தஸ்திற்கு வந்து விட்டார் அசின்.
... தனி பங்களா, பெற்றோருக்கு தனி, என்று
...ான வாழ்க்கை. இதைக் கேள்விப்பட்ட நம்ம
...யகிகளும் இந்திப் படவுலகை வளைக்க
...ட்ட சொக்கு பொடி என்ன என்பதை
...முற்பட்டிருக்கிறார்கள். அசின்
...த்தைத் தெரிந்து கொள்ள படாதபாடு
...ர்களாம்!
..., அசின் சூத்திரம் என்ன
... கம்ப சூத்திரமா?



# ...ம் காட்டும்

# ...க்சன்

...லாச்சாரத்தை பற்றிக்
... ஆடையுடன் திரியும்
... எமிஜெக்சன் அதைப்
...ரப்பட விழாக்களுக்கு
...மாக கவர்ச்சி உடை
... அதனால் புகைப்பட
...ருப்ப நடிகையாக எமி
... செல்லுமிடமெல்லாம்
... அலை மோதுகிறது.
...ாக போட்டோக்களை
... தமிழ் நடிகைகள் கால்மேல் கால் போட்டு உட்காரும்
... எடுத்து அசிங்கபடுத்தி விடுவாங்களோ என்று கையை
...வதை பார்த்திருக்கிறோம். ஆனால், எமி அப்படி அல்ல
...ன்று சொல்லாமல் சொல்கிறாராம். ஆங்கில எமிக்கு
... வேகம் கிறுக்குத்தனமாகத் தெரியலாம். ஆனால்
...திக இடம் பிடிக்கப் போகிறோம் என்பது போனஸ்
விளம்பரம் தானே!

# கிக் பொக்சிங் தெரிந்து வைத்திருக்கும் வரலட்சுமி

ஸ்கொட்லாந்தில் மைக்ரோ பயலொஜி படித்து எம்.பி.ஏ.முடித்து விட்டு சென்னை வந்திருக்கும் சரத்குமாரின் மகள் வரலட்சுமி இப்போது அப்பா வழியில் நடிகையாகி விட்டார். இசை, நடனம், மேடை என்றிருந்தவருக்கு சிம்புவுக்கு ஜோடியாக நடிக்க 'போடா போடி'யில் வாய்ப்பு வந்தது. அதை முடித்த கையோடு சுந்தர் சி.யின் 'மதகதராஜ' படத்தில் நடிக்கப் போகிறார் வரலட்சுமி. அதில் பாவாடை, தாவணி கிராமத்து பொண்ணு வேஷம்.

தனக்கு தற்பாதுகாப்புக் கலைகள் தெரியும் என்றும் கிக் பொக்சிங் அத்துப்படி என்றும் சொல்லும் இவர் முக்கு முட்ட மாமிச அயிட்டங்களை உள்ளே தள்ளி கூடவே யோகாவும் செய்கிறார்!

இவ்வளவு அடி பின்னும் கலைகள் தெரிந்திருந்தாலும் கிசு கிசுக்கள் இவரை விடுவதாக இல்லை. விஷாலுடன் இவருக்கு நெருக்கம் என்றும் இவருக்குப் பயந்து கொண்டு படப்பிடிப்பின் போது அஞ்சலியுடன் பேசுவதையும் விஷால் தவிர்த்து வருகிறார் என்றும் கதை பரவி இருக்கிறது.

இது பற்றி கேட்டால், ஆஹா என வாய் விட்டுச் சிரிக்கிறார். ''இதெல்லாம் நான் கேள்விப்பட்ட விஷயங்கள் தான். இந்த மீடியாக்களுக்கு வேற வேலை இல்லை? படிக்கும் காலத்தில் இருந்தே விஷாலை எனக்குத் தெரியும். நாங்கள் நல்ல நண்பர்கள். அவர் அப்பா ஒரு தயாரிப்பாளர். அப்பா அவர் படங்களில் வேலை செய்திருக்கிறார். எங்கள் குடும்பங்கள் நெருக்கமாக பழகி வருகின்றன. இந்த நட்பை வேறு விதமாகப் பார்க்கக் கூடாது. என் அப்பாவுக்கு அரசியலிலும் திரைப்படத்துறையிலும் நல்ல பெயர் இருக்கிறது. அதை கெடுத்து வைக்க மாட்டேன்'' என்று கூறி உடலைக் குலுக்கிச் சிரிக்கிறார் வரலட்சுமி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முற்றம்

## கண் கெட்டதும்...



அன்று
பாடசலைக்குப் போகாமல்
படம் பார்க்கப் போனபோது
சந்தோசமாய் இருந்தது
உயர்தரம் படிக்கும் போது
பாடம் படிக்காமல்
ஊர் சுற்றிய போது
சுகமாய் இருந்தது!
இன்று
வேலை இல்லாமல்
அப்பா உழைத்திருக்க
சும்மா சாப்பிட்டு
வீட்டில்...
கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம்
பொருள் இப்போது புரிகிறது

- யோ.ரூபன், சுதுமலை

## தமிழுக்காய்


எத்தனையோ வேதனைகள்
என்னற்ற சோதனைகள்
முடிவில்லாத துன்பங்கள்
முடிவில்லா இடப்பெயர்வு
முடிவில்லா அவலங்கள்

யார் துடைப்பார் - கண்ணீரை
யார் புரிவார் அவலத்தை
நிலை தடுமாறுகின்றேன்
இவ்வுலகில் நிம்மதி எங்கே...

தமிழரின் நிலை தடுமாற
விட மாட்டோம் - என்றும்
உணர்வு உள்ளவரை
உயிர் கொடுப்போம்
தமிழுக்காய்

- க.ஸ்ரீசரஞ்சன்,
யாழ்ப்பாணம்





## அன்பு

முகம் பார்க்கும் போது
மட்டும் வரும்
நினைவுகள் முகவரி
இல்லாமல் போய்விடும்
இதயம் பார்த்து வரும்
நினைவுகள் இறுதிவரை
நிலைத்திருக்கும்.

- யூ.அம்சு, மானிப்பாய்



## கவிதை

உன் விழிகள்
பேசிய
புது மொழிகளை
தன்னுயிர் கொடுத்து
என் பேனா
வரைந்த ஓவியம்

- நா.கவின் வினோத்,
மன்னம்பிட்டி

## வழித்துணையாக வரலாமா



என் கனவில் வந்தது
நீயா-தெரியவில்லை
என் வழித் துணையாக
வருவாயா-புரியவில்லை
தெரிவதும் புரிவதும்
எனக்கு-தேவையில்லை
உன் பாதியாக ஏற்பாயா
என்னை-பதிலே இல்லை
உன்னிடம்

- ரீனா

## வாடிய ரோசாப் பூ



தேடினேன் கிடைக்கவில்லை
ஓடினேன் முடியவில்லை
கண் பார்வை இழந்தது
கால் ஓட மறுத்தது
உயிர் இழந்தேன் - காதலி
தந்தால் பரிசு என் கல்லறையில்
வாடிய ரோசப்பூ

- எஸ்.குமணன்
(பழைய துட்டுவாகை நேரியகுளம்)

## உன்னை மட்டுமே...

உறவுகளை எதிர்த்து
உன்னை மட்டுமே
உறவாய் நினைத்து வந்தேன்.
உன்னிடம்
நீயோ இன்று இன்னொரு
உயிருக்கு உறவாய்
செல்கிறாய்
என்னைக் கைவிட்டு

- S.பாஹிரா பாரூக்,
ஹாலி-எல



## காத்திருக்கிறேன் உன் பதிலுக்காக



என் உயிரிலும் மேலானவனே
நீ என்னைப் பிரிந்தாலும்
நான் என்றென்றும் உன்னுடன்
உன் நினைவுகளுடன்
கண்களை திறந்தாலும் மூடினாலும்
விழியெங்கும் நீ
உனக்கு இந்த வேதனை எல்லாம்
ஏற்பட்டதே கிடையாதா?
உன் பதில்
என்னைக் காப்பாற்றும்
- க.நிரோஜினி, மந்துவில் சாவகச்சேரி.

## திருவிளையாடல்

நஷ்டம் வருமானால் அதை
செய்யாதே என்பார் அப்பா
கஷ்டம் வருமானால் அதைத்
தொடாதே என்பார் அம்மா
நாமும் எச்சரிக்கையாகத் தான்
வாழ்க்கையில் நகர்கிறோம்


ஆனால் கஷ்டம் வரும் என்று
தெரிந்தே எந்தத் திட்டமும் இல்லாமல்
அதைச் செய்கிறோம்
காதலிக்கிறோம்
அறிவு அனுபவம் ஆற்றல்
அத்தனையும் தோற்கும்
களம் இது.

தோற்றுப்போன ஒரு தருணத்தில்
மூலையில் உட்கார்ந்து
யோசித்தபோதுதான்
இன விருத்திக்கு இயற்கையின்
திட்டம் இது என்பது புரிந்தது.

இது ஒரு குருஷேத்திரம்
போராளிகளே இங்கிருக்கிறார்கள்
வெற்றியும் தோல்வியும் பொருட்டல்ல
உலகம் உய்ய வேண்டும் என்பதே இயற்கையின்
திருவிளையாடல்

நான் திரும்பவும் எழுந்தேன்
முற்றிலும் புதியவனாக
இன்னொருவனை வசப்படுத்த

- நரேந்திரன் சி.எஸ்



### வாசக கவிஞர்களுக்கு...

பதினைந்து வரிகளுக்கு மேற்படாத வகையில் நச் கவிதைகளை எழுதி எங்களுக்கு தபாலிலோ, இ-மெயிலிலோ அனுப்பி வையுங்கள்

கவிமுற்றம்,
ஆசிரியர், வண்ண வானவில்,
த.பெ இல 1218, கொழும்பு.

மின்னஞ்சல் - vannavaanavil@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடிக்கணக்கான மக்களை காவு கொண்ட பயங்கர நோய்கள்

நாதன்

மருத்துவ விஞ்ஞானம் ஒருபுறம் வளர்ந்து கொண்டிருக்க, மருந்துகள் கண்டுபிடிக்கப்படாத நோய்களுக்கெல்லாம் நிவாரணம் கண்டு பிடிக்கப்பட்டுக் கொண்டிருக்க,

மறுபக்கம் புதுப்புது நோய்கள் தோன்றிய வண்ணம் உள்ளன. இன்று வரை எயிட்சுக்கு மருந்து கண்டு பிடிக்கப்படவில்லை. மருத்துவ விஞ்ஞானத்துக்கு சவால் விடும் புதுப்புது நோய்கள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. இப்படி நோய்கள் ஒரு புறமும் மருத்துவ விஞ்ஞானம் மறுபுறமாக கயிறிழுப்பில் ஈடுபட்டுள்ளன. ஆனால், நாம் இன்று மருத்துவ விஞ்ஞானத்தின் தயவால் ஒரு பாதுகாப்பான உலகிலேதான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்




மக்களின் சராசரி ஆயுள் அதிகரித்திருக்கிறது. நோய்களில் இருந்து நிவாரணம் பெற முடிந்திருக்கிறது. ஒரு நோய் வந்தால் அது என்ன நோய் என்ற தகவலையாவது நம்மால் தெரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் நூற்றாண்டுகளுக்குப் பின் நோக்கிப் பார்த்தால் நமது முதாதையர் பரிதாபமான வாழ்க்கையைத் தான் வாழ்ந்திருக்கிறார்கள். என்ன நடக்கிறது என்பது தெரியாமலேயே கொத்து கொத்தாக மடிந்திருக்கிறார்கள்.

பிளேக் என்ற கொள்ளை நோய், அம்மை, மலேரியா, வயிற்றோட்டம் போன்ற வியாதிகள் உலகெங்கும் பலகோடி மக்களை குறுகிய காலப்பகுதியில் காவு கொண்டிருக்கிறது. என்ன ஏது செய்வது என்பது தெரியாமல் மரணத்தின் பிடியில் சிக்கியிருக்கிறார்கள். இவற்றைத் தெரிந்து கொண்டால்தான், நாம் எவ்வளவு பாதுகாப்பான உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பது உங்களுக்குப் புரியும்.

1348இல் ஐரோப்பாவில் கொள்ளை நோய் தாண்டவமாடியபோது மக்களுக்கு யார் மீது பழியைப் போடுவது என்று தெரியாமல் குழம்பிப் போய் கடைசியில் பழியை யூதர்கள் மீது போட்டனர். யூதர்கள் தான் இந் நோய்க்குக் காரணம் என்ற கருத்து மக்களிடையே பரவி, யூத வெறுப்பை உருவாக்கிற்று. இதன் பயனாக யூதர்கள் நையப் புடைக்கப்பட்டனர். பிரான்சில் யூதர்கள் உயிரோடு கொளுத்தப்பட்டனர். ஜேர்மனியில் ஆறாயிரம் யூதர்களும் பிரான்சில் மூவாயிரம் யூதர்களும் கொலை செய்யப்பட்டனர்.

ஐரோப்பிய நகரங்களில் எல்லாம் பிணக் குவியல்கள் காணப்பட்டனவாம். ஒரு வீட்டில் நோய் கண்டதும் நோயாளியை அவ் வீட்டார்கள் எழுப்பித் தனிமைப்படுத்தினர். அல்லது ஆதரவு இல்லாத தீவுகளில் விட்டனர். சனி, ஜூப்பிட்டர் மற்றும் செவ்வாய்க் கிரகங்கள் ஒரே வரிசையில் வந்ததால் தான் நோய் தோன்றியது என்றும் கடவுளின் ஆக்கினை என்றும் கூட மக்கள் நம்பினர்.




அம்மை, என சந்தேகிக்கப்படும் மற்றுமொரு தொற்று நோய் ஆசிய ஐரோப்பிய மற்றும் மத்திய தரை நாடுகளை தாக்கின. சீன சரித்திராசிரியர் நமா குவாங், கி.பி.517இல் அம்மை நோய் பயங்கரம் பற்றி குறிப்பிடுகையில் நாலில் ஒருவரோ அல்லது இருவரோ தான் தப்பிப் பிழைத்தனர் என எழுதி வைத்தார்.

1665இல் லண்டன் மாநகரம் கொள்ளை நோயால் பீடிக்கப்பட்டபோது சுமார் 8 ஆயிரம் லண்டன் வாசிகள் மரணமடைந்தனர்.

இன்புளுவன்சா 1848-49ஆம் ஆண்டு காலப்பகுதியில் உலகை உலுக்கியது. இக்காலத்தில் அமெரிக்காவில் மட்டும் 10 லட்சம் பேர் மடிந்தனர். இந்தியாவில் ஒரு கோடி பேர் மாண்டு போயினர். மொத்தம் 3 கோடி பேர் உலகெங்கும் இன்புளுவன்சாவால் பீடிக்கப்பட்டு மரணமுற்றனர். இன்புளுவன்சா என்ற இந்த விஷக் காய்ச்சல் வைரஸ் விண்வெளியில் இருந்து பூமிக்கு வந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

1520இல் தென் அமெரிக்காவில் அம்மை நோய் பரவ ஆரம்பித்தது. தெற்கு மற்றும் மத்திய அமெரிக்க நாடுகளில் காட்டுத் தீயாக அம்மை நோய் பரவி முடிந்த போது மொத்த சனத் தொகையான இரண்டரை கோடி மக்களில் ஒன்றரைக் கோடி முதல் ஒரு கோடி 80 லட்சம் வரையிலான மக்கள் இந் நோய்க்கு இரையாகி மடிந்திருந்தனர்.



பாதுகாப்பு உடை அணிந்த கொள்ளைநோய் மருத்துவர்

1812ஆம் ஆண்டு 5 லட்சம் வீரர்கள் கொண்ட படையை நெப்போலியன் ரஷ்யாவுக்குள் நடத்திச் சென்றான். இப் படையெடுப்பில் தோல்வி கண்டு நெப்போலியன் பிரான்ஸ் திரும்பியபோது மூவாயிரம் வீரர்களே எஞ்சியிருந்தனர். டைபஸ் எனும் விஷக் காய்ச்சலும் வயிற்றுப் போக்கும் பெருவாரியான வீரர்களைப் பலி கொண்டிருந்தது. யுத்தத்தைக் காண்பதற்கு முன்னரே பலர் மாண்டிருந்தனர். ஏன், கண்டி ராஜ்யத்தைக் கைப்பற்ற போர்த்துக்கேயருக்கும் ஒல்லாந்தருக்கும் முடியாமற் போனதுக்கு மிகப் பெரும் காரணம் மலேரியா கொசுக்களே.

கி.பி. 541 இல் மத்தியத்தரை நாடுகளில் பிளேக் நோய் காணப்பட்ட தகவலும் 200 ஆண்டுகாலப்பகுதியில் நான்கு கோடி மக்களை இந்நோய் காவு கொண்டதாகவும் அறிய முடிகிறது. அக்காலப்பகுதியில் கொன்ஸ்டான்டிநோபிளில் இந்நோய் காணப்பட்டது. தினமொன்றுக்கு பத்தாயிரம் பேரை இது பலி கொண்டதாக சரித்திரக் குறிப்புகள் மூலம் அறிய முடிகிறது. இந் நோய் உலகெங்கும் இருபது கோடி மக்களை காவு கொண்டதாம்.

1347ம் ஆண்டில் ஐரோப்பாவை கொள்ளை நோய் தாக்கியது. ஐரோப்பாவில் இந் நோய் கண்டு இரண்டரைக் கோடி பேர் மரணத்தைத் தழுவினர். எலிகளின் பெருக்கமே நோய் பரவுவதற்குக் காரணமானது. ஐரோப்பிய நகரங்கள் மக்கள் மடிந்ததால் வெறிச்சோடிப்போயின. நோயாளிகளை எரித்துக் கொன்றனர். சூனியக்காரிகளின் வேலை இது என்ற நம்பிக்கை காரணமாக சூனியக்காரிகள் என்ற சந்தேகம் கொண்ட பெண்களை எரித்துக் கொன்றனர்.

இப்போது புரிகிறதா, நாம் எவ்வளவு பாதுகாப்பான உலகில் வாழ்கிறோம் என்று!

## தெள்ளுப் பூச்சி

பிளேக் நோய் தெள்ளுப் பூச்சியின் மூலம் பரவுகிறது. தெள்ளுப் பூச்சிகள் ஆறு கோடி ஆண்டுகளாக பூமியில் வாழ்ந்து வருகின்றன. முற்காலத்தில் இவற்றுக்கு சிறகுகள் இருந்திருக்கலாம். ஆனால் இன்றைய தெள்ளுப் பூச்சிகளுக்கு சிறகுகள் கிடையாது. பதிலாக பலம் வாய்ந்த கால்களும் திடமான தலை நகங்களும் உள்ளன. இதன் மூலம் தன்னை விட 150 மடங்கு உயரத்துக்கு இவற்றால் எம்பிப் பாய முடிகிறது. இது ஒரு மனிதன் ஆயிரம் அடி உயரம் எம்பிப் பாய்வதற்குச் சமம். இவற்றால் சளைக்காமல் 30 ஆயிரம் தடவைகளுக்கு மேல் களைப்பின்றி எம்பிப் பாய முடியும். எலிகளை ஒழித்து விடுவதன் மூலம் தெள்ளுப் பூச்சிகளை இல்லாமல் செய்துவிட முடியாது. ஏனெனில் முயல் அல்லது ஏதேனும் ஒரு மிருகத்தின் மீது இவற்றால் வாழ்க்கை நடத்த முடியும். 1950ம் ஆண்டு அவுஸ்திரேலியாவிலும் ஐரோப்பாவிலும் வாழ்ந்த முயல்களை தெள்ளுப் பூச்சிகள் ஏறக்குறைய சர்வநாசமே செய்து விட்டன!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவரை தெரியுமா...



சரியான விடை:
சமீரா ரெட்டி

1. எஸ்.நுவா-இங்கிரிய
2. எஸ்.கஜி-வவுனியா
3. கே.கலா-ஹல்வத்துரை
4. எஸ்.அபாஷினி-ஹொரணை
5. ஸ்ரீகாந்த்-ஆரிபகந்த
6. மணிமேகலா-நிவித்திகலை
7. பி.ஆனந்த் கட்டுநாயக்க
8. ஹசீனா-ஓட்டமாவடி
9. அனு-ஹட்டன்
10. சுமித்தா-மாத்தளை
11. திவ்யா-ஹல்வத்துரை
12. நஜிதாபின்ரா-மட்டக்குளிய
13. பி.சுபர்னா-யாழ்ப்பாணம்
14. கே.தர்ஷிகா-மீசாலை
15. வி.மைதிலி-வாணி
16. டி.கயல்விழி-பலாங்கொடை
17. கே.நிஷாந்தினி-உடும்பிராய்
18. எஸ்.சதீஸ்-விஸ்வமடு
19. நிலுஷினி-கொழும்பு
20. ம.துஷா-நோர்வூட்
21. ஆர். தயாபர்ஷினி-மஸ்கெலிய
22. வி.வைஷ்ணவி-பருத்தித்துறை
23. சிவாதன்-பொரளை
24. எம்.அசார்தீன்-மத்தளை
25. லாவண்யா-வவுனியா
26. ம.ஜெனி-இறக்குவானை
27. ஜெனிட்டா ஜோசப்-அவிசாவளை
28. சித்ரா- அக்கரைப்பற்று
29. மங்களநாதன்-இரத்தினபுரி
20. ரிம்கா மத்தாம்பிட்டிய



ஹாகம் ஹேர்பிரிவு வீரமகா காளியம்மன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த வாரம் வெகு விமர்சையாக நடைபெற்றது. அன்னையின் திரு உருவத்தையும், பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுவதையும் படத்தில் காணலாம்.



இங்கிரிய, ஹல்வத்துர, தெல்மெல்லை பிரிவு ஸ்ரீமுத்து மாரியம்மன் ஆலயத்தின் முதலாம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் கடந்த 19.08.2012 அன்று நடைபெற்றது. பிரம்மஸ்ரீ அருள் நேச குருக்களால் ஆலய கலசத்திற்கு அபிஷேகம் செய்யப்படுவதையும், ஆலயத்தின் தோற்றத்தையும் படங்களில் காணலாம்.

## சொல் விளையாட்டு - 20

சரியான விடைகள்

இடமிருந்து வலம்

பப்பாசி, சிரம், அராம்பு, காரட், கன்று.

மேலிருந்து கீழ்


மாங்குருத்து, பாகற்காய், ரம்புட்டான், பபுறு

சரியான விடை அனுப்பியோரில் வெற்றி இடம்பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகள்

1. எஸ்.அபிஷேகா, நீர்கொழும்பு
2. கொஹுவல் சிஹான், வரக்காப்பொல
3. எம்.என்.நசீர், புத்தளம்







ஆறு அதிர்ஷ்டசாலிகள்

1. வே.ரூபனா சுருமலை
2. சுமித்ரா-மாத்தளை
3. வி.திருச்செல்வம்-நீர்கொழும்பு
4. லக்ஷானா-வவுனியா
5. கிரணா-காலி
6. ஜி.மதுஷன்-தலவாக்கலை

கண்டுபிடியுங்கள்

கடந்த இதழில் வெளியான படத்திலுள்ள ஆறு தவறுகள் வட்டமிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

## குறுக்கெழுத்து போட்டி - 22

விடைகள்

இடமிருந்து வலம்

பத்மனாபநகம், நவரங்கம், ஹங்கிநம், நீளை பாலம், கவர், பாலம், கள்ளி, சிலம்பு, கும்பம், கம்பீனி, கம்பல், வதலம், குப்பை.

மேலிருந்து கீழ்

சாங்கியன், மாறுதல், பாதம், தலைதிராணி, கடமை, சம்பளம், கல்பாளம், இதயம், மைனர், கன்னான், பாலம், கம்பன், சிவம், புனிதம், குழந்தை, பதசம், கரம், ரம்பை, வில்லை, கல

சரியான விடைகளை எழுதி பெயர் தெரிவான மூவர்

1. வசந்த பாலேந்திரா, கொழும்பு
2. தி.கோகுலபவன், மட்டக்களப்பு
3. சிவ.ரு.தாஜன், மாத்தளை



''ஹலோ டொக்டர் என் மகள் நான் எழுதி வைத்திருந்த பேனாவை விழுங்கிட்டா''

''ஓகே இன்னும் 10 நிமிடத்தில் வர்றேன்''

''அதுவரை நான் என்ன செய்ய?''

''பென்சிலில் எழுதிட்டு இருங்கள்''

- பீருபிள், நுவரெலியா



''பஸ் கண்டக்டருக்கு வாழ்க்கைப்பட்டது தப்பா போச்சு''

''ஏண்டி?''

''வீட்டு வாசப்படியில நிக்க விடமாட்டேங்கிறாரு படியில நிக்காதே மேலே ஏறுன்னு கத்துறாருடி..!''

- எம்.ஜுனைப் சம்ரன், கந்தளை.

## படம் சொல்லும் கதை



இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு எடுத்த இந்தப் படத்தில் நான் (வ.இ) கடைசியில் குட்டிப் பையனாக இருக்கின்றேன். அப்போது நாங்கள் புளத் சிங்கள, தங்கஸ்கந்த எஸ்டேட்டில் குடியிருந்தோம். எங்க வீட்டிற்கு பக்கத்தில் இருந்தவர்தான் ராணி அக்கா. அவங்க என் அம்மாவோட ரொம்ப நெருங்கிய நண்பி. அவங்க ஒரு நல்ல சினிமா ரசிகையும் கூட. அந்தக் காலத்தில் வெளியாகிய படங்களை நகரில் உள்ள தியேட்டருக்குச் சென்று பார்த்து விட்டு வந்து அந்த திரைப்படக் கதையை என் அம்மாவிற்கு விரிவாகச் சொல்வதுதான் ராணி அக்காவின் வேலை. எங்கள் வீட்டு விறாந்தையில் இருந்த திண்ணையில் அமர்ந்து அவங்க கதை சொல்வதை நான் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பேன். அவங்க புதுப் படமொன்றை பார்த்து விட்டு வந்தால் எப்படியும் இரண்டு வாரத்திற்கு அந்தப் படத்தின் கதையைப் பற்றிதான் அவரின் பேச்சாக இருக்கும். மற்றப் பெண்களும் வாயைப் பிளந்து கேட்டுக் கொண்டிருப்பார்கள்.
மேலும் படம் பார்த்து விட்டு வரும் போது அந்தப் படத்தின் பாட்டு புத்தகத்தையும் மறக்காமல் வாங்கி வந்து விடுவார். அந்தப் புத்தகங்களின் அட்டைப் படம் சிவப்பு, அல்லது நீலக் கலரில் இருக்கும். அதில் எம்.ஜி.ஆர்.சிவாஜியின் படங்கள் அச்சிடப்பட்டிருக்கும். அந்தப் படங்களை பார்க்க எனக்கு ரொம்ப பிடிக்கும். நான் சிவாஜியும் எம்.ஜி.ஆரும் அவங்க வீட்டில் இருந்த பாட்டு புத்தகங்களில் இருந்தே எனக்கு அறிமுகமானார்கள். இந்தப் படம் ராணி அக்காவின் அண்ணன் செல்லதுரையின் திருமணத்தன்று மத்துகமை எகுவா எஸ்டேட்டில் எடுத்தது. படத்தில் (இ-வ) ராணியின் அண்ணன், ராணி நான்காவதாக எனது அம்மா. அப்புறம் நான். இப்போ ராணி அக்கா எங்கே இருக்கிறார் என்று தெரியவில்லை.


- எம்.ராஜேஷ், இங்கிரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# File System என்றால் என்ன?




பைல் சிஸ்டம் எனப்படுவது ஹாட் டிஸ்கில் பதியப்படும் பைல்களை இயங்கு தளம் கையாளும் ஒரு வழி முறையாகும். உங்கள் கணினியில் ஏராளமான பைல்கள் இருக்கலாம். எனினும் அவற்றை ஒழுங்காகப் பேணவும் நிர்வகிக்கவும் ஒரு வழி முறை இல்லையெனின் கணினி நத்தை வேகத்திலேயே இயங்கும்.



உதாரணமாக ஒரு அலுவலகத்தில் உள்ள ஆவணங்களை முறைப்படி ஒழுங்காக வைக்காமல் வெவ்வேறு இடங்களில் சிதறிக் கிடக்குமாயின் தேவையான நேரத்தில் ஒரு பைலைத் தேடிப் பெற எவ்வளவு நேரத்தைச் செலவிட வேண்டியிருக்கும்? முறையான ஒரு பைல் சிஸ்டம் இல்லையாயின் இது போன்ற ஒரு நிலையையே கணினியும் எதிர் கொள்ளும்.

வீடுகளிலோ அலுவலகத்திலோ பலரும் பல விதமான முறைகளில் பொருட்களை ஒழுங்கு படுத்துவது போல் கணினியிலும் பைல்களை ஒழுங்கு படுத்துவதில் FAT16. FAT32, NTFS எனப் பல வழி முறைகள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் தமக்கேயுரிய சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளதுடன் அவற்றிற்கிடையே சில பொதுவான பண்புகளும் உள்ளன.

ஹாட் டிஸ்கின் உள்ள வெற்றிடத்தில் டேட்டாவை சேமிப்பதில் காட்டும் திறன், ஹாட் டிஸ்கில் உள்ள பைல்கள் அனைத்தையும் பட்டியலிடுதல் மூலம் அவற்றை விரைவாக மீட்டுக் கொள்ளும் திறன், பைல்களை அழித்தல், கொப்பிடுதல், பிரதி செய்தல், இடம் மாற்றுதல் போன்ற பைல் சார்ந்த அடிப்படை விடயங்களை மேற்கொள்ளுதல் என்பன பொதுவான பண்புகளாகும். இந்த அடிப்படை விடயங்களுடன் சில பைல் சிஸ்டம் பைகளைச் சுருக்குதல் (compression). குறியீட்டு முறைக்கு மாற்றுதல் (encryption), கடவுச் சொல் (password) மூலம் பாதுகாப்பளித்தல் போன்ற கூடுதல் வசதிகளையும் கொண்டிருக்கும்.

FAT16 (File Allocation Table) என்றால் என்ன? எம்.எஸ்.டொஸ் இயங்கு தளத்துடன் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த பைல் சிஸ்டம் அதிக பட்சம் 2GB கொள்ளளவு கொண்ட ஹாட் டிஸ்கிற்கே பொருந்தும். ஹாட் டிஸ்கில் டேட்டா செல்லும் போது வளையம் கொண்ட ட்ரேக்ஸ் (tracks) எனும் பாதையிலேயே பதியப்படுகின்றன. ஒவ்வொரு ட்ரேக்கும் செக்டர்ஸ் (Sectors) எனும் பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன. அத்தோடு ஒவ்வொரு ட்ரேக்கும் ஒரே அளவான செக்டர்களைக் கொண்டிருக்கும். ஹாட் டிஸ்கில் டேட்டாவைப் பதியும் மிகவும் சிறிய பகுதியே செக்டர் ஆகும். ஒரு செக்டரின் அளவு 512 பைட்டுகளாகும். ஒரு ஹாட் டிஸ்கை போமட் செய்யும் போது இவ்வாறு செக்டர்களாகப் பிரிக்கப்படுகின்றன.

ஹாட் டிஸ்கின் மொத்த கொள்ளளவு 10 கிலோ பைட் எனின் அந்த ஹாட் டிஸ்க் 20 செக்டர்களாகப் பிரிக்கப்படும். எனினும் இயங்குதளமானது நேரடியாக ஒவ்வொரு செக்டரையும் அணுகுவதில்லை. மாறாக அது பல செக்டர்களை ஒன்று சேர்த்து க்ளஸ்டர (Cluster) எனும் ஒரு அணியாக மாற்றி அதனையே அணுகுகின்றது. இதனை (Allocation unit) எனவும் அழைக்கப்படும். உதாரணமாக ஒவ்வொரு பொக்கெட்டிலும் பை ஒன்றைக் கையில் வைத்திருக்கும் ஒரு நபருக்கு ஒப்பிடுங்கள். ஒவ்வொரு பையிலும் 512 பைட் டேட்டாவையே சேமிக்க முடியும். ஒவ்வொரு நபரையும் 1,2,3 என இலக்கமிடாமல், பைல் சிஸ்டமானது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களை ஒன்று சேர்த்து ஒரு அணியாக மாற்றி அவர்களை முதலாவது அணி எனப் பெயரிடுகிறது. மொத்தமாக 400 பேர் இருப்பார்கள் எனின் பைல் சிஸ்டம் அணிக்கு நால்வராக 100 அணிகளாகப் பிரித்துக் கொள்ளும்.

இன்னொரு வகையில் சொல்வதானால் 400 செக்டர்கள் கொண்ட ஒரு ஹாட் டிஸ்கில் (200 கிலோபைட்) பங்கிட்டு அளவாக 4 செக்டர்களை ஒரு க்ளஸ்டர் கொண்டிருப்பின் மொத்தமாக 100 க்ளஸ்டர்கள் காணப்படும்.

பைல் சிஸ்டமானது ஒரு குறித்த செக்டரை அணுக வேண்டுமானால், முதலில் அந்த செக்டர் இடம் பெறும் க்ளஸ்டர் இலக்கத்தையே அணுகும். அந்த க்ளஸ்டருக்குள் செக்டரின் தொடரிலக்கத்தின் மூலம் உரிய செக்டரை அடையும். உதாரணமாக ரவி எனும் நபரைக் கண்டுபிடிக்க ரவி இடம்பெறும் அணியை முதலில் அணுகி அந்த ரவியைக் கண்டு பிடிப்பதற்கு ஒத்ததாகும்.

FAT16, FAT32 மற்றும் NTFS எனும் மூன்று பைல் சிஸ்டங்களும் இம்முறையிலேயே இயங்குகின்றன. அப்படியானால் இவற்றுக் கிடையே என்ன வேறுபாடு உள்ளன? முக்கிய வேறுபாடு யாதெனில் ஒவ்வொரு பைல் சிஸ்டமும் ஹாட் டிஸ்கில் எவ்வளவு வெற்றிடத்தைக் கையாளும் திறன் வாய்ந்தது என்பதிலேயே தங்கியுள்ளது.

பைல்களைக் கையாளும் திறனில் காணப்படும் பாரிய சிக்கல் யாதெனில் ஹாட் டிஸ்கில் ஒவ்வொரு க்ளஸ்டரும் ஒரு பைலை மட்டுமே சேமிக்கும். அதாவது ஒவ்வொரு அணியும் ஒரு விடயத்தை மாத்திரமே கையாளும்.

## இந்த மாத டவுன்லோட்

### pdfunlock.com/

இலத்திரனியல் ஆவணங்களை கணினி வழியே பதிக்கவும் பரிமாறவும் என Adobe நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ள ஒரு பைல் வடிவமே Portable Document Format எனும் PDF பைல்களாகும். இணைய தளங்களிலும் மின்னஞ்சல் ஊடாகவும் மென்பொருள் உதவிக் குறிப்புகள், கையேடுகள், விண்ணப்பப் படிவங்கள் போன்ற பல வகையான ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் PDF பைல்களாகவே பரிமாறிக் கொள்ளப்படுகின்றன.

பீடிஎப் பைல்கள் எழுத்துக்கள், வெக்டர் கிரபிக்ஸ், நிழற் படங்கள், அட்டவணைகள், ஹைபலிங்ஸ் எனப் பல்வேறு விடயங்களைக் கொண்டிருக்கும். பல நிறுவனங்கள் தங்கள் நிறுவனம் சார்ந்த ஆவணங்களை அறிக்கைகளை வலையமைப்பிலோ, இணையத்திலோ வெளியிட இந்த பீடிஎப் பைல்களையே பெரிதும் நம்பியிருக்கின்றன.

சில வேளைகளில் நீங்கள் பார்வையிடும் பீடிஎப் பைலானது சில கட்டுப்பாடுகளைக் கொண்டிருக்கும். அதாவது அந்த பைல்களை நீங்கள் பார்வையிட அல்லது வாசிக்க மட்டுமே அனுமதிக்கும் அது தவிர அந்த பீடிஎப் பைலிலிருந்து ஒரு டெக்ஸ்ட் பகுதியை பிரதி செய்யவோ. அச்சிடவோ அல்லது மாற்றங்களை செய்யவோ அனுமதிக்காது. அவ்வாறு மாற்றங்கள் செய்ய வேண்டுமானால் அதற்குரிய கடவுச் சொல்லை உங்களிடம் எதிர்பார்க்கும். இவ்வாறான பீடிஎப் பைல்களிலுள்ள கட்டுப்பாடுகளை உடைத் தெரிவதற்கென இணையத்தில் ஏராளமான ஒன்லைன் கருவிகள் உள்ளன. நான் இங்கு உங்களுக்கு http://www.pdfunlock.com/ எனும் வெப் தளத்தைப் பரிந்துரைக்கிறேன். இவ்விணைய தளத்திற்குச் சென்று உங்கள் பீடிஎப் பைலை அப்லோட் செய்திட இரண்டொரு நிமிடங்களில் அதிலுள்ள கட்டுப்பாடுகளை நீக்கி மறுபடியும் உங்கள் கணினிக்கு இலவசமாகவே டவுன்லோட் செய்து கொள்ளும் வசதியைத் தருகிறது.

## YouTube வீடியோவை டவுன்லோட் செய்திட...




இணைய வீடியோக்களில் கூகிள் நிறுவனத்தின் YouTube அதிக பிரசித்தி பெற்றது என்பது அனைவரும் அறிந்த விடயம். எனினும் இந்த வீடியோவைப் ஒவ்வொரு முறையும் (Online) இணையத்தில் இணைந்தே பார்க்க முடியும். ஒரு முறை பார்த்த வீடியோவை மறுபடியும் பார்ப்பதற்கும் இணையத்தில் இணைய வேண்டும். ஒப்லைனில் (offline) பார்ப்பதானால் டவுன் லோட் செய்தே பார்வையிட முடியும்.

யூடியூப் வீடியோக்களை டவுன்லோட் செய்வதற்கு யூடியூப் தளத்திலோ அல்லது நாம் பயன்படுத்தும் பிரவுசரிலோ வசதிகள் இல்லை. எனவே அதற்கு மூன்றாம் தரப்பு மென்பொருள் கருவிகளைப் பயன்படுத்த வேண்டும். இதற்கென ஏராளமான மென்பொருள் கருவிகள் பயன்பாட்டில் உள்ளன.

யூடியூப் வீடியோக்களை டவுன் லோட் செய்ய நான் இங்கு பரிந்துரைக்க விரும்புவது Real Player எனும் மீடியா ப்ளேயர் மென்பொருளாகும். நான் அறிந்த வரையில் யூடியூப் வீடியோவை டவுன்லோட் செய்ய ரியல் ப்ளேயர் இலகுவானதும் விரைவானதுமான ஒரு வழி முறையைத் தருகிறது.

ரியல் ப்ளேயர் மூலம் யூடியூப் வீடியோவை டவுன்லோட் செய்ய முதலில் Real Player மென்பொருளின் சமீபத்திய பதிப்பை www.real.com எனும் இணைய தளத்திலிருந்து நிறுவிக் கொள்ளுங்கள். பின்னர் ரியல் ப்ளேயர் விண்டோவில் Tools மெனுவில் Preferences தெரிவு செய்ய வரும் டயலொக் பொக்ஸில் Enable web download and recording for these installed browsers என்பதைத் தெரிவு நிலைக்கு மாற்றுங்கள். அத்தோடு டவுன்லோட் ஆகும் வீடியோவை எந்த போல்டரில் சேமிக்க வேண்டும் என்பதையும் குறிப்பிடுங்கள். இனி நீங்கள் பயன்படுத்தும் எந்த பிரவுசரிலும் யூடியூப் வீடியோ அல்லது வேறு எவ்வகையான இணைய வீடியோ பார்க்கும் போது வீடியோ காட்சியின் மீது மவுஸ் பொயிண்டரை நகர்த்தும் போது வீடியோ விண்டோவின் மேல் Download This Video. எனும் பட்டன் தோன்றக் காணலாம். அந்த பட்டனில் க்ளிக் செய்ய டவுன்லோட் பணி ஆரம்பிக்கும்.

தத்துவப் பித்தன்



பிகரோடு பீச் மணல்ல
வீடு கட்டி விளையாடிய
அருமை,
பிகரோட அண்ணன்
ரவுண்டு கட்டி
அடிக்கும்போதுதான்டா
புரியும்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




FaceBook, Twitter, Blog பிரியர்களே!
இப்போது வண்ணவானவில் Facebook, Twitter, Blog உடன் நீங்களும் சுவாரஷ்யமான விடயங்களை Share, Tag பண்ணலாம்.
சிறந்தவை இங்கே பிரசுரமாகும்.

வண்ண வானவில் விலாசங்கள்:

facebook :- vannavaanavil@facebook.com
Twitter :- vannavaanavil@twitter.com
Blog :- vannavaanavil@blogspot.com






அமெரிக்காவை கண்டு பிடிக்கும் முன்
கொளம்பஸ்க்கு திருமணம் ஆகியிருந்தால்....?
ஏங்க எங்க போறீங்க?
யார் கூட போறீங்க?
ஏன் போறீங்க?
எப்படி போறீங்க?
என்ன கண்டுபிடிக்க போறீங்க?
ஏன் நீங்க மட்டும் போறீங்க?
நீங்க இங்க இல்லாமல் நான் என்ன பண்ணுறது?
நானும் உங்ககூட வரட்டுமா?
எப்ப திரும்ப வருவீங்க?
எங்க சாப்புடுவீங்க?
எனக்கு என்ன வாங்கிட்டு வருவீங்க?
இப்படி பண்ணனும்னு எனக்கு தெரியாமல் எத்தனை நாளா பிளான் பண்ணீட்டு இருந்தீங்க?
இன்னும் வேறு என்னவெல்லாம் பிளான் இருக்கு?
பதில் சொல்லுங்க ஏன்?
நான் எங்க அம்மா வீட்டுக்கு போகட்டுமா?
நீங்க என்ன அம்மா வீட்டுல கொண்டுவிடுவீங்களா?
நான் இனி திரும்ப வரவேமாட்டேன்?
ஏன் பேசமா இருக்கீங்க?
என்ன தடுத்து நிறுத்த மாட்டீங்களா?
இதுக்கு முன்னாடியும் எனக்கு தெரியாம இந்த மாதிரி பண்ணியிருக்கீங்களா?
எத்தனை கேள்வி கேட்குறேன் ஏன் மரமண்டை மாதிரி நிக்கிறீங்க?
இப்ப பதில் சொல்லுறீங்களா இல்லையா?

இதுக்கு அப்புறமும் அவரு அமெரிக்காவை கண்டுபிடிக்க கிளம்பியிருப்பாருன்னா நினைக்கிறீங்க!!!!

Kohila Rajagopal @facebook




ShanThishan @facebook




Sangeeth Sudha @facebook

காதலன் காதலியின் போனில் தன் நம்பரை தேடிய போது கிடைத்த பெயர் !!!!

......ரீசார்ஜ் அண்ணா

Rameshwaran @facebook

செம பன்ச்...!!

மாமியாருக்கும் சாமியாருக்கும் என்ன வித்தியாசம்...!!!

மாமியரல ஒரு பொண்ணுக்குத தொல்ல.....

சாமியரல எல்லா பொண்ணுக்கும் தொல்ல.....

Kokul @facebook




Jaya Kumar @facebook

## அம்மா Vs அப்பா Vs நண்பன்

| நிகழ்வு | அம்மா | அப்பா | நண்பன் |
|---|---|---|---|
| பரிட்சையில் பாஸ் | எல்லாம் கடவுள் அருள் | உண்மையிலேயே உன் மார்க்கா?? | வா மச்சி சரக்கு அடிக்கலாம் |
| பரிட்சையில் குறைந்த மார்க் | பையன் நல்லாத் தான் எழுதினான், நேரம் சரியில்லை | உருப்படவே மாட்டே | வா மச்சி சரக்கு அடிக்கலாம் |
| வேலை கிடைத்தால் | உடம்ப நல்லா பாத்துக்கோ | நல்ல கஸ்டப்பட்டு வேலை செய் | வா மச்சி சரக்கு அடிக்கலாம் |
| வேலைக்கு போனால் | அந்த வேலை சரியில்லை, பரவாயில்லை விட்டுப்பா | உன் வாழ்க்கையிலே செஞ்ச முதல் நல்ல காரியம் இது தான் | வா மச்சி சரக்கு அடிக்கலாம் |
| பிறந்தநாள் | தீர்க்காயுசா இரு | எப்பவும் வாழ்க்கையிலே நல்ல பேர் எடு | வா மச்சி சரக்கு அடிக்கலாம் |
| காதல் தோல்வி | அவளுக்கு உன்னை கட்டிக்க கொடுத்து வைக்கலை | இந்த கழுதைக்கு இது தான் குறைச்சல் | வா மச்சி சரக்கு அடிக்கலாம் |
| கல்யானம் | 16ம் பெற்று பெரு வாழ்வு வாழுப்பா | இனிமேலாவது லைப்ல பொறுப்பா இரு | வா மச்சி சரக்கு அடிக்கலாம் |
| தந்தையானால் | குழந்தை உன்னை போல இருக்கு | உன் அப்பன் போல இருக்கான்டா | வா மச்சி சரக்கு அடிக்கலாம் |

## நண்பன் வார்த்தை மாறுவதில்லை

Sumaiyyah Saleem @facebook




Kajan Kajana @facebook

தொகுப்பு: லக்ஷனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வானவில் மங்கை

# குழந்தைகள் விளையாடும் போது கண்களுக்கு ஏற்படும் ஆபத்துகள்

சரியான பாதுகாப்பும், சமயோசித புத்தியும் இருந்தால் விளையாட்டின் போது கண்களுக்கு உண்டாகிற விபத்தை 90 சதவீதம் தவிர்க்கலாம். விளையாடும் போது குழந்தைகளுக்கு அடிபடுவது சாதாரணம். மற்ற இடங்களில் அடிபடும்போது தானாகவே சரியாகிவிடும் என பெற்றோர் அலட்சியம் காட்டினாலும் கண்கள் விஷயத்தில் அப்படி இருக்கக் கூடாது. கிரிக்கெட் உள்ளிட்ட எந்த விளையாட்டுக்கான பந்தும், கண்களில் படுவது ஆபத்தானது. குறிப்பாக



கிரிக்கெட்டுக்கான அழுத்தமான பந்து கண்களில் பட்டால் 'கிளாகோமா' என்கிற பிரச்சனை வரலாம். விழித்திரையில் பட்டு அது கிழியலாம். விழித்திரையே விலகிப் போகலாம். அழுத்தம் அதிகமாகி, 'பாப்பா' பகுதி கிழியலாம். கண்களில் உள்ள வெள்ளையான பகுதி பிளவுபடலாம். திடீர் என்று கண்கள் கூசும் உணர்வு, காட்சிகள் மங்கலாகி தோன்றுவது சொன்ன பிரச்சினைகளின் அறிகுறிகளாக இருக்கலாம்.

கிரிக்கெட் மட்டுமில்லாமல் பல விளையாட்டுகளின்போதும் குழந்தைகளின் பார்வைக்கு ஆபத்து உண்டு. சில குழந்தைகள் எங்கிருந்தாவது பழைய உபயோகித்த சிரிஞ்சை எடுத்து விளையாடுவாங்க. அதன் கூர்மையான ஊசி கண்ணில் பட்டால் ரொம்பவே ஆபத்து வெளிப் பார்வைக்கு ஊசி குத்தினதே தெரியாது. மருத்துவரினால்தான் கண்டுபிடிக்க முடியும். விளையாட்டின்போது, கண்களையும் முகத்தையும் மூடும்படியான கவசம் அணிவது அவசியம் என்கிறார்கள் டாக்டர்கள். மைதான விளையாட்டில் இது சாத்தியப்படலாம். ஆனால் வீடுகளில் விளையாடும் போது இது சாத்தியப்படாது என்பதால் பெற்றோர் முன்னெச்சரிக்கையுடன் இருப்பதே புத்தசாலித்தனமானது.

விளையாடி வந்ததும், கண்கள் சிவந்து இருந்தாலோ, வலியிருந்தாலோ கண்களை சுற்றி கருத்திருந்தாலோ அதை அலட்சியப்படுத்தாமல் உடனடியாக கண்' மருத்துவரைப் பார்க்க வேண்டும். கண்களை கசக்காமல் ஒரு கப் மாதிரியான பொருளால கண்களை மூடிக்கிட்டு மருத்துவரிடம் செல்ல வேண்டும். விழித்திரை நிபுணரைப் பார்க்கலாம் மருந்துகள், அறுவை சிகிச்சை, விலகிப் போன விழித்திரையை ஒட்ட வைக்கிற 'க்ரையோ தெரபி' என்று இன்று எவ்வளவோ மருத்துவ சிகிச்சைகள் இருந்தாலும் சரியான நேரத்தில் கண்டுபிடித்து சிகிச்சை செய்தாலேயே முழுப்பலன் கிடைக்கும்.



## குழந்தைகளுக்கு கண்ணாடி: தாமதம் வேண்டாம்!

டி.வி. பார்ப்பதால் பார்வை பாதிக்கப்படும் என்பது தவறான கருத்து. டி.வி.பார்ப்பதால் தலைவலி வரலாம். கண் சிவந்து கண்ணீர் வரலாம். ஆனால் பார்வைக் கோளாறு வராது. கிட்டப்பார்வை தூரப் பார்வை கோளாறு எல்லாம் வராது.

கண்களில் பிரச்சினை என்பது மரபுவழி சம்பந்தப்பட்டதாகவோ விழித்திரை, கருவிழி சம்பந்தப்பட்டதாகவோ இருக்கலாம். இதற்கு மாத்திரை மருந்து சிகிச்சை சரிப்பட்டு வராது. கெரட்டும் கீரையும் சாப்பிடுவதாலும் கோளாறு தீராது. கெரட் மற்றும் பச்சைக் காய்கறிகளில் பீட்டா கெரடின் சத்து உள்ளது. செரிமானத்தின்போது அது வைட்டமின் ஏ ஆக மாறும். இச்சத்து மிகக் கொஞ்சமாகவே கண்களுக்குத் தேவை. எனவே காய்கறி சாப்பிட்டால் கண் பிரச்சினை வராது என்பதில் உண்மை இல்லை.

இந்த மாதிரி தவறான நம்பிக்கைகளை வளர்த்துக் கொள்ளக் கூடாது சரியான நேரத்தில் சரியான மருத்துவ அறிவுரையோடு குழந்தைகளுக்கு கண்ணாடி அணிவிக்க வேண்டும். அழகு, தோற்றத்தை கண்ணாடி கெடுத்து விடும் என்று யோசிக்க கூடாது. இப்போது விதவிதமான பிரேம்கள் வந்துவிட்டன. அவசியமானால் பிற்காலத்தில் லென்ஸ் பொருத்திக் கொள்ளலாம். மற்றப்படி, கெரட், கீரை சாப்பிட்டால் சரியாகி விடும்; டி.வி பார்க்கக் கூடாது. அவசியம் கண்ணாடி போட்டேதான் ஆக வேண்டுமா? என்ற கேள்விகளை எழுப்பி பெற்றோர் தாமதித்துக் கொண்டிருக்க கூடாது.

### டிப்ஸ்

*பல்லி, கரப்பான் தொல்லைகளுக்கு நான்கு சின்ன வெங்காயத்தை நசுக்கி சுவரோரம் நான்கு புறத்திலும் வைத்துவிட்டாலே போதும் தொல்லை இருக்காது.*

*சோப்பு அடிக்கடி கரைந்து வீணாகின்றதா? சோப்புக்கு கீழே ஒரு ஸ்பாஞ்சை வையுங்கள் கரைந்து போகும் சோப்பு அதிலே உறிஞ்சப்பட்டிருக்கும் அதையெடுத்து உபயோகிக்கலாம் சோப்பு வீணாகாது.*

*தக்காளியை வதக்கும் போது சிறிது மஞ்சள் பொடி சேர்த்தால் சீக்கிரமாக வதங்கிவிடும்.*

*மாதவிடாய் சீராக வருவதற்கு வாரத்திற்கு இருமுறை இளநீர் அருந்த வேண்டும்.*

## சமைத்துப் பாருங்கள்


### கிரிஸ்பி சிக்கன் பிரை

**தேவையானவை:-**

| | |
|---|---|
| கோழியின் கால்பகுதி | - 1 kg |
| வெங்காயம் | - 1 (பெரியது) |
| தக்காளி | - 1 (பெரியது) |
| இஞ்சி | - 3 அங்குலம் |
| பூண்டு | - 6 பல் |
| பேங்கிங்பவுடர் | - 1 தேக்கரண்டி |
| கோதுமை மா | - 1 கப் |
| கோன்பிளார் | - 1/4 கப் |
| மிளகாய்த்தூள் | - 2 தேக்கரண்டி |
| உப்பு | - தேவையான அளவு |
| எண்ணெய் | - பொரிப்பதற்கு |

**செய்முறை:-**

ஒரு பாத்திரத்தில் இறைச்சியை போட்டு இஞ்சி, பூட்டு, தக்காளி, வெங்காயம் போன்றவற்றை அரைத்து விழுதாக சேர்க்கவும் பின் பேங்கிங் பவுடரையும் சேர்த்து இறைச்சி மூழ்கும் அளவிற்கு நீர் ஊற்றி ஊறவிடவும் 3 மணி நேரத்திற்கு கோதுமை மா, கோன்பிளார்மா, உப்பு, மிளகாய்த் தூள் ஆகியவற்றை கலந்து வைத்து அதில் ஊறவைத்த இறைச்சியை நன்கு வடித்து இதில் பிரட்டி எடுத்து எண்ணெயில் பொறித்தெடுக்கவும்.



### கொள்ளு இட்லி

**தேவையானவை:-**

| | |
|---|---|
| கொள்ளு | - 100g |
| உழுத்தம் பருப்பு | - 50g |
| புழுங்கல் அரிசி | - 300g |
| ரவை | - 50g |
| வெந்தயம் | - 1/2 தேக்கரண்டி |
| உப்பு | - தேவையானளவு |



**செய்முறை:-**

கொள்ளு வாசனை வரும் வரை வறுக்கவும். பின் உழுந்து, அரிசி, கொள்ளு, வெந்தயம் ஆகியவற்றை தனித்தனியாக 3 மணிநேரம் ஊறவைக்கவும். பின் உழுந்தை மட்டும் வெந்தயம் சேர்த்து அரைக்கவும் மற்றவைகளை தனியாக அரைத்து ஒன்றாக கலந்து ரவை, உப்பு சேர்த்து கரைத்து வைத்து மறுநாள் இட்லி அவிக்கவும். அவிப்பதற்கு முன் ஒரு சிட்டிகை சமையல் சோடா சேர்க்கவும்.




அ.கன்சிகா

பாரதிபுரம், யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானவில் பூங்கா

# போற்றலும் தூற்றலும்



**தன்** நாட்டின் நடப்பு நிலை எப்படி இருக்கிறது என்று அறிய மாறு வேடத்தில் பேரரசன் அக்பரும் அரசவை விகடனுமான பீர்பாலும் நகர்வலம் புறப்பட்டனர்.

வழியில் விறகுகளை தலையில் சுமந்து கொண்டு ஒருவர் வந்து கொண்டிருந்தார்.

''அய்யா, தங்களுக்கு இன்று நடந்த விஷயம் தெரியுமா?'' என பீர்பால் கேட்டார்.

''என்ன நடந்தது?'' என்று கேட்டார் முதியவர்.

''நமது மன்னர் இன்று இயற்கை எய்தி விட்டார்'' என்றார் பீர்பால். இதனைக் கேட்ட முதியவர் அதிர்ச்சி அடைந்தவராக, ''நமது மன்னர் இயற்கை எய்திவிட்டாரா? நமது மன்னர் நாட்டிற்கு பல நன்மைகள் செய்துள்ளார். இன்று நமது நாடு செழிப்புடன் விளங்குவதற்குக் காரணம் அவர்தானே'' என்று கவலையுடன் கூறிய முதியவர் விடை பெற்றார்.

''மன்னரே! விறகு வெட்டியான முதியவர் மனதில் நீங்கள் ஆழப் பதிந்துள்ளீர்கள் என்று அறிய முடிகிறது'' என்றார் பீர்பால்.

அரசரும், பீர்பாலும் பேசியபடி நகர வீதியை அடைந்தனர். வீதியில் ஒரு பெண் தலையில் மோர் பானையுடன் வந்து கொண்டிருந்தாள்.

அந்தப் பெண்ணைப் பார்த்து பீர்பால், ''மோர்க்காரப் பெண்ணே! எங்கள் இருவருக்கும் இரண்டு குவளை மோர் கொடு'' என்று கூறி மோருக்கானப் பணத்தைக் கொடுத்த பீர்பால், மோர்க்காரப் பெண்ணிடம் ''நம் மன்னர் இன்று இயற்கை எய்திவிட்டார் என்கிற செய்தி உனக்குத் தெரியுமா?'' என்றார்.

அதற்கு மோர்க்காரப் பெண், ''மன்னர் இருந்தால் என்ன மறைந்தால் என்ன? மன்னராகப் பிறந்தாலும் இயற்கையை வெல்ல முடியாது'' என்று கூறிவிட்டு வேகமாகச் சென்றுவிட்டாள்.

''பீர்பால், நாம் சந்தித்த இரு வரும் இருவிதமான எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளனரே இதற்கு என்ன காரணம்?'' என்றார் அக்பர்.

''மன்னரே! விறகு வெட்டி பழுத்த முதியவர். தங்களின் மீது பெரும் மதிப்பை வைத்துள்ளார். அதனால் இயற்கை எய்திவிட்டார் என்ற செய்தியைக் கேட்டதும் அதிர்ச்சியினால் வேதனையடைந்தார்.

''மோர் விற்ற பெண்ணிடம் கொஞ்சம் கூட நாட்டுப்பற்று கிடையாது. சிந்தனை முழுவதும் மோர் அதிகமாக விற்றால் நல்ல பணம் கிடைக்கும் என்பதாக இருந்தது'' என்றார் பீர்பால்.

''அப்படியானால் யார் மீது தவறு?'' என்றார் அக்பர்

''தவறு நம்மீது தான். நாட்டின் நலன் கருதி பல நல்ல செயல்களைச் செய்யும் போது மக்களின் சிலர் போற்றுவதும், சிலர் தூற்றுவதும் நடைமுறையான விஷயம்தான். நாட்டில் எது நடந்தாலும் மன உறுதியுடன் மக்களின் நன்மைக்காக நாடாளும் மன்னராக இருக்க வேண்டும் தவிர, இப்படியெல்லாம் பேசுகிறார்கள் என்று சிந்திக்கக்கூடாது'' என்றார் பீர்பால்.

**நீதி: பொது வாழ்க்கையில் ஈடுபடுபவர்கள் புகழ்ச்சி, இகழ்ச்சிக்கு மயங்க கூடாது.**



# பிரமாண்டமான புத்தர் சிலை

இந்தியாவில் 2,500 ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்த சிறந்த சிந்தனையாளர் கௌதம புத்தர். பல சீர்திருத்த கருத்துகளை சொன்னவர். பின்னர் இவரது போதனைகள் பௌத்த மதமாக இந்தியாவிலும், சீனா, ஜப்பான், மலேசியா, இலங்கை, நேபாளம், திபெத் உட்பட பல நாடுகளிலும் பரவியது. இந் நாடுகளில் பிரமாண்டமான புத்தர் சிலைகள் மன்னர்களினால் அமைக்கப்பட்டன.

பள்ளிகொண்ட நிலையில் சாய்ந்திருக்கும் உலகின் மிகப் பெரிய புத்தர் சிலை மியான்மர் நாட்டின் பிரபல சுற்றுலா மையமான மாவ்லாமைன் நகரை ஒட்டி, ஒரு சிறிய குன்று மீது அமைக்கப்பட்டு இருக்கிறது இந்த சிலை. பிரமாண்ட புத்தரின் நீளம் 180 மீட்டர்; உயரம் 30 மீட்டர். சிலையின் உட்புறத்தில் 8 மாடி கட்டிடமாக ஒரு மடாலயம் அமைந்திருக்கிறது. இதில் 182 அறைகள் இருக்கின்றன. புத்த பிக்குகளும் பக்தர்களும் தியானம் செய்யவும் உள்ளே வசதிகள் இருக்கின்றன.

# நன்மை செய்யும் எரிமலைகள்



உலகம் நாம் வாழ்வதற்கு ஏற்ற மாதிரி குளிர்ச்சியாகவும் சரியான வெப்பமுடனும் உள்ளது. ஆனால் அதன் உள்புறம் கடுமையான வெப்பமுடன் காணப்படுகிறது. பாறைக் குழம்பு கொதி நிலையில் உள்ளன.

எரிமலைகளின் கீழுள்ள இந்தத் திரவப் பாறைகள், திடீரென்று ஏற்படும் அழுத்த மாறுபாட்டால் ஒருநாள் பீறிட்டு வெளியே வருகிறது. இதைத்தான் 'எரிமலை வெடிக்கிறது' என்கிறோம். எரிமலை வெடிப்பதால் ஏற்படும் தீமைகளை நன்கு அறிவோம். ஆனால், சில நேரங்களில் அது நமக்கு நன்மையாகவும் முடிவதுண்டு.

சில சமயம் எரிமலை வெடிப்பு, அந்தப் பகுதி மண்ணின் தன்மையையே மாற்றிவிடுமாம். தரிசு நிலங்களாக இருந்தவை விளைச்சலுக்கு உகந்ததாக மாறிவிடுவதும் உண்டு.

எரிமலை வெடிப்பின் காரணமாக சில பகுதிகளில் தங்கம், வெள்ளி, செம்பு அதிகளவு கிடைத்திருப்பதாக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.


துருவப் பகுதியான அண்டார்டிகாவின் உள்ள ஈரோபிஸ் என்னும் எரிமலை வெடித்தபோது மிக மிக சுத்தமான தங்கம் வெளிப்பட்டதாம்.

ஆப்ரிக்காவில் சில எரிமலைகள் வெடித்ததால் வெளிப்பட்ட அதிகளவு கார்பன்கள் தான் வைரங்களாக மாறி, இன்னும் தென் ஆப்பிரிக்கா மற்றும் லைபீரியா நாட்டில் கிடைப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

எரிமலைகள் அதிகமுள்ள நியூசிலாந்து மற்றும் ஜப்பான் நாடுகளில் இயற்கை எரிவாயு அதிகம் கிடைக்கிறது. ஐஸ்லாந்தில் 85 சதவீத வீடுகளில் இதைத்தான் சமையலுக்குப் பயன்படுத்துகிறார்கள்!


தொகுப்பு: அஜந்தன், மட்டக்களப்பு

# Star Baby




துஷ்யந்தன்
புஸ்பரத்தினம் – வளர்மதி
யாழ்ப்பாணம்

# வரைந்து பாருங்கள்



# சொல் விளையாட்டு 22




## இடமிருந்து வலம்

1. வாசனைத் திரவியம் (4)
2. குதிரை (3)
4. மின்சாரம் இதில் செல்லும் (3)
5. உறைப்பு (3)
7. உஷ் (5)
11. புன்சிரிப்பு

## மேலிருந்து கீழ்

1. நேரம் காட்டும் (5)
2. பெருமை (3)
3. இரும்பையும் அறுக்கும் (4)
6. கலகம் (3)
7. ஒரு வகை சூதாட்டம் (3)
8. ஒரு நடிகர் (3)
10. குறைந்த விலையில்

**சரியான விடை அனுப்பும் அறுவரின் பெயர்கள் பிரசுரிக்கப்படும். சொல்விளையாட்டு 20ன் விடைகளும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பெயர்களும் 22ஆம் பக்கத்தில்...**

| ஸ்டார் பேபி பகுதிக்கு உங்கள் குழந்தைகளின் படங்களையும் அனுப்பலாம். | முகவரி: STAR BABAY, Editor, Vanna Vaanavil Editorial, Lake House Colombo - 10 |
|---|---|

# வண்ணம் தீட்டுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜன்னலுக்கு வெளியே...



இவர் தமிழ் திரையுலகில் பிரபல்ய நடிகை

A. சந்தியா
B. ஜோதிகா
C. மீனா
D. ரிச்சா

சரியான விடையைக் கண்டுபிடித்தால் உங்கள் பெயர், முகவரியுடன் 0778021501 என்ற தொலைபேசி எண்ணுக்கு டைப் செய்து உடனே அனுப்பி வையுங்கள்

மனிதனின் கண்ணீருக்கு காரணம்,
காதலும் நட்பும் மட்டுமல்ல...
வெங்காயமும் தான்...
(அப்படிப் போடு!)
- இஜாஸ் அஸ்மி, அக்குறனை

நீ விரும்பும் இதயம்
உன்னை தவிக்க
விட்டு செல்லும்
போதுதான்
நீ தவிக்கவிட்ட
இதயத்தின் வலி
உனக்கு புரியும்...
- ஏ.ஆர்.மஜீத், மாவடிப்பள்ளி

## SMS பூக்கள்

நீங்கள் படித்தது, கேட்டது, கற்பனையில் உருவானது என்று உங்களுக்குப் பிடித்த எஸ்.எம்.எஸ். கதை, கவிதை, ஜோக்குகளை இங்கே பதிவு செய்யலாம். இப்போதே உங்கள் செல்போன்களை எடுத்துப் பதிவு செய்து உங்கள் பெயர் முகவரியுடன் அனுப்புங்கள். செல்போன் வசதியற்றவர்கள் தபாலட்டையிலும் அனுப்பலாம். முகவரி 3ஆம் பக்கத்தில்.

0778021501

**லவ் பண்ணுங்க லைப் நல்லா இருக்கும் என்பதன் உண்மையான அர்த்தம் என்ன தெரியுமா?**

1. லவ்வரோட படத்துக்கு போகும் போது தியேட்டர் காரன் லைப் நல்லா இருக்கும்.
2. ஹோட்டல் போகும் போது ஓட்டல்காரன் லைப் நல்லா இருக்கும்.
3. பைக்ல போனா பெட்றோல் நிலையம் வைத்திருப்பவன் லைப் நல்லாயிருக்கும். அவளை எங்க கூட்டிட்டு போனாலும் இப்படி அடுத்தவன் லைப் தான் நல்லாயிருக்கும். எனவே அடுத்தவன் லைப் நல்லா இருக்கவாவது லவ் பண்ணுங்க.

- சுகந்தன், வவுனியா.



சாஜஹான் மும்தாஜ்
நினைவாக தாஜ்மஹால்
கட்டினான்...!
பைத்தியக்காரன்...!
கொஞ்சம் யோசித்து
இருந்தா மும்தாஜ்
நினைவா அவ
தங்கச்சிய கட்டி
இருக்கலாம்...!
- மணி, இரத்தினபுரி

**ப்ளீஸ்...ப்ளீஸ்... பதில் முக்கியம்**

ஒரு நாள் நைட் 12 மணிக்கு நான் உங்க வீட்டுக்கு கையில் காயத்தோடு வந்தேன்... அப்போ உங்க வீட்டில் யாருமே இல்ல... நான் வரும் போது கரண்ட் கட் ஆகிருச்சு, அதனால் நாம ரெண்டு பேரும் மாடிக்கு போய் பேசிக்கிட்டு இருக்கோம்... அப்போது கீழே லேண்ட்போன் ரிங் ஆகுது. நீ மட்டும் மெழுகுதிரியோடு கீழே போய் போன்ன எடுக்கிற... போன்ல எங்க வீட்டுல இருந்து நான் ஆக்சிடன்ட்டில் இறந்து விட்டதா சொல்றாங்க... நீ மறுபடியும் மேல வருவியா மாட்டியா?

நித்தியா, கிருளப்பனை கொழும்பு.



எறும்பும் யானையும் உயிருக்குயிராய் காதலிச்சிச்சாம்.. பிறகு இரண்டுக்கும் திருமணம் நடந்ததாம். கெட்டகாலம், திருமணமான அடுத்த நாளே யானை இறந்து விட்டதாம். அப்போது அந்த எறும்பு என்ன நினைச்சிருக்கும்? ரொம்ப யோசிக்காதீங்க... ஒரு நாள் லவ்வுக்காக வாழ்நாள் முழுவதும் குழி தோண்ட விட்டுட்டியேனன்று நினைச்சிதாம்.

- எம்.சங்கரீஸ்வரன், பூண்டுலோயா.

நாங்க முக்கியமா இரண்டு பேருக்கிட்ட கோவப்படக் கூடாது
1. டொக்டர்
2. கடவுள்
கடவுள்கிட்ட கோபப்பட்டா டொக்டர் கிட்ட அனுப்பிரு வாரு...
டொக்டர் கிட்ட கோபப்பட்டா கடவுள் கிட்ட அனுப்பிடுவாரு...
- ஏ.எம்.ஜெஸீர், கிண்ணியா

### திருமண வாழ்த்து



10 பொருத்தங்கள் பார்த்து,
9 கிரகங்களின் அருளால்,
8 திக்குகள் புகழ்விளங்க,
7 ஜென்மம் எடுத்து,
6 சுவை உண்டு,
5 புலன்கள் சாட்சியாக,
4 வேதங்கள் ஓதி,
3 முடிச்சு போட்டு,
2 மனமும்,
1 சேர்ந்து வாழ்வாங்கு வாழ்வதே திருமணம்
- பஸ்னா பரீத், மிரிகம்பிட்டிய

கவலையில்லாத மனிதர்கள்
உலகில் இருவர் தான்...!
ஒருவர் கல்லறையில்...
இன்னொருவர் கருவறையில்...
- சுபேஷ், யாழ்ப்பாணம்



மகன்: கம்யூட்டர் படிக்கிறதுக்கு காசு கொடுப்பா...
அப்பா: செருப்பு பிஞ்சிடும்... நீ படிக்க கேட்டா தர்றேன், கம்யூட்டர் படிக்கிறதுக்கு நா ஏன்டா தரனும்.
- மஸ்மியா

நீ சிரிக்கும் ஒவ்வொரு விநாடியும் நான் உன் பின்னால் இருப்பேன் ஏன் தெரியுமா? அந்த கொடுமைய யார் முன்னால நின்னு பார்க்கிறது?
- யூ.நிஷாந்தன், நாவலடி, பரந்தன்.

வீக்ல வண்டே ஹொலிடே
மாதத்தில வண்டே செலரிடே
இயர்ல வண்டே போர்த்டே
லைப்ல வண்டே டெத்டே
But பிரண்ஷிப் இஸ் எவரிடே.
- எச்.எம்.எம்.ஹிஷாம், வாழைச்சேனை-05

அலுவலகத்துக்கு வெளியே நின்றா சஸ்பென்ட் என்று அர்த்தம். வீட்டுக்கு வெளியே நின்றா ஹஸ்பன்ட் என்று அர்த்தம்.

அம்மா குரங்கு: என்னங்க நம்ம புள்ளய காணோமே!
அப்பா குரங்கு: நம்ம புள்ள இப்போ ரொம்ப பிஸி!
அம்மா குரங்கு: அப்படி என்ன பிஸிங்க?
அப்பா குரங்கு: ச்சூ...! சத்தம் போடாத நம்ம புள்ள SMS படிக்குது!
- எஸ்.கிஎறிஸ்ஷா, மாத்தளை

பெண்களும் ஒரு ஓசைதான் காதலித்துப் பாருங்க சங்கு ஊதுற சத்தம் கேட்கும்.
- ம.்.பாஸ்கான், ஓட்டமாவடி.



**ரீமிக்ஸ் சில் மயக்கம் என்ன பாடல்:**

ஓட ஓட ஓட ஓட ரன்னும் கூடல
அடிக்க, அடிக்க அடிக்க சிக்சும் போகல...
போக போக போக ஒன்னும் புரியல
ஆக மொத்தம் டீமும் வெலங்கல...
ஹன்றட் அடிக்கும் போது கேப்டனா இல்லையே
கேப்டனா இருக்கும் போது ஹன்றட் இல்லையே...
கையில் பேட்டு இருக்கு போல் இல்லையே
லைப்பு பூரா இந்த தொல்லையே
உலகமே ஸ்பீடா சுத்துவதே... எங்கட டீம்
தோற்றுப் போகுதே... மொத்தம் கிரவுண்டும்
கிண்டல் பண்ணுதே கோட்ச் என்ன பாவம்
பண்ணிச்சோ...
- ரிப்பாஸ், ஹெம்மாத்தகமை.

என்னதான் உலகம் டெக்னாலோஜியில் முன்னேற்றம் கண்டாலும் மின் மினி பூச்சிக்கு சார்ஜ் ஏற்ற முடியுமா? ஈக்கு ஈமெயில் அனுப்ப முடியுமா? எறும்புக்கு இயர் போன் மாட்ட முடியுமா? பல்லிக்கு பச்சை குத்த முடியுமா? யோசிங்க... யோசிங்க... நல்லா யோசிங்க
- எஸ்.ரமணா, ஓல்ட் துட்டுவாக்கை



**என்னைத் தெரிகிறதா?**

ஸ்ரீதேவி

அஸ்ஸலாம் அலைக்கும் (அரபு)
வணக்கம் (தமிழ்)
நமஸ்காரம் (சமஸ்கிருதம்)
குட்மோர்னிங் (ஆங்கிலம்)
நமஸ்கார் (இந்தி)
நமஸ்தே (பெங்காலி)
சலாம் (உருது)
பஸ்நாராம் (குஜராத்)
வசரக்காணம் (பஞ்சாமி)
தகஸ்வரல் (காஷ்மீர்)
சொலமுதாக் (ஜப்பானிஸ்)
நைமன்ஹீ (சீனா)
என்ன உங்க மொழியில்
சொல்லலியே என்று கோபமா?
ஓகே. ஐ. டெல் யூ
''கும்புடுறேன் சாமியோ...''

தூண்டிலில் சிக்கிய மீனும்,
உன் அன்பில் சிக்கிய
நானும்
துடிப்பது நிச்சயம்!
மீன் துடிப்பது
விடுதலைக்காக, நான்
துடிப்பது உன் நட்புக்காக...!
- திவிஜா, சித்தன்கேணி

ஒருவரைப் பற்றி பல மணி நேரம் பேசுவது நட்பு இல்லை. அந்த ஒருவரே விட்டு கொடுக்காது பேசுவது தான் உண்மையான நட்பு...
- அனுஷியன், யாழ்ப்பாணம்

லவ் பண்ண ஸ்மார்ட் வேணும். லவ் சொல்ல தைரியம் வேணும். பிஸினஸ் பண்ண டிரிக்ஸ் வேணும். அன்பு காட்ட கோள் பிரண்ட் வேணும். பாசம் காட்ட டீ வேணும். இப்படி SMS போட என்ன மாதிரி நல்ல மனசு வேணும்.
- ஆர்.விமலேஸ்வரி, வவுனியா

ஒரு காதலன் தனது காதலிக்கு ஒரு SMS அனுப்புகிறான். அன்பே நீ இப்போது உறங்கி கொண்டு இருந்தால்-உன் கனவுகளை எனக்கு அனுப்பு, நீ சிரித்துக் கொண்டிருந்தால்-உன் புன்னகையை எனக்கு அனுப்பு, நீ அழுது கொண்டிருந்தால்-உன் கண்ணீரை எனக்கு அனுப்பு அதற்கு காதலி அவனுக்கு அனுப்பிய பதில்: நான் டொ... இருக்கிறேன். இப்போ என்னத்த அனுப்ப?
மிப்ரா, தியத்தாவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசுமையின் உதயம் நோக்கி...

(14ஆம் பக்கத் தொடர்)

அரச முதலீடுகளை அதிகரித்தல்
கால்நடை வளர்ப்புக்கு தனியார் துறையினை ஊக்குவித்தல்.
இனப் பெருக்கத்திற்கான பொருட்களை உயர்வடையச் செய்தல்
விலங்குகளின் உணவு உற்பத்தியை பலப்படுத்தல்
சேவைகள் விரிவாக முறைமைகளை விருத்தி செய்தல்
கால்நடை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை மேம்படுத்தல்

### கைத்தொழில் அபிவிருத்தி

கிழக்கு மாகாணத்தில் கைத்தொழில் துறையை அபிவிருத்தி செய்வதில் அரசு கிழக்கின் உதயம் வேலை திட்டத்தின் மூலம் பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. நவக்கிரி, லக்கல உயனவில் இரு கைத்தொழில் பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. திருகோணமலை மட்டக்களப்பு பிரதேசங்களில் அபிவிருத்தியின் பொருட்டு முன் மொழியப்பட்ட கைத்தொழில் பேட்டைகள் மூலம் 4280 நேரடி தொழில் வாய்ப்புகள் கிழக்கு மாகாண இளைஞர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படும்.

இதற்கு புறம்பாக 'கமநெகும' வேலைத்திட்டத்தின் கீழ் 2006 / 2014 வரையிலான காலப்பகுதிக்குள் கிராம அபிவிருத்தியின் முக்கிய அம்சமான அடிப்படை வசதி அபிவிருத்தி துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கிராம வீதிகள், மின்சாரம், நீர் விநியோகம், பொதுக் கட்டட அமைப்பு, வாழ்வாதாரம், சமூக அபிவிருத்தி போன்ற துறைகள் அபிவிருத்தி எய்தியுள்ளன.

### கிழக்கின் உதயம் கமநெகும 2006/13 வரை

மேலே குறிப்பிட்ட அரசின் அபிவிருத்தி நடவடிக்கைகளின் மூலம் கிழக்கிலங்கை வரலாற்றில் மற்றைய மாகாணங்களோடு தோளோடு தோள் நின்று துரித அபிவிருத்தியை நோக்கி பயணம் செய்வது பற்றில் சிறிதேனும் ஐயமில்லை.

30 ஆண்டு கால போரினால் பின் தள்ளப்பட்ட கிழக்கிலங்கை ஏனைய பிரதேசங்களின் அபிவிருத்தியை போலவே துரித வளர்ச்சியை பெற்றுள்ளது. பொதுமக்களின் வாழ்க்கை தரம் உயர்ந்து நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் மைய நிலையமாக சிறு நடைபோடும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

கிழக்கு இலங்கையில் அபிவிருத்தி பற்றி கீழே தரப்பட்டுள்ள அட்டவணை வரைபடம் இதற்கு சிறந்த சான்று ஆகும்.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து சமாதான சூழலை ஏற்படுத்தியமை இத்துரித வளர்ச்சிக்கு மூல காரணமாக இருந்ததை நாம் ஒரு போதும் மறந்துவிடக்கூடாது. (29 ஆம் பக்கம் படம் பட்டியல்)





## குவலாலம்பூரில் நடைபெற்ற...

(18ஆம் பக்கத் தொடர்)

ஏனைய நாட்டவர்களான மலேசிய அஞ்சலை சுப்பிரமணியம் 'கந்த புராணத்தில் வாழ்வியல் கூறுகள்' என்ற தலைப்பிலும், மலேசிய டாக்டர் அமிர்தவல்லி கணேசன் 'பன்னிரு திருமுறைகளில் முருகப்பெருமான்' என்ற தலைப்பிலும், இந்தியாவைச் சேர்ந்த முனைவர் மு.ஞானத்தாய் 'வெள்ளிமலைக் குமார கோயில் வரலாறும்-சிறப்புகளும்' என்ற ஆய்வினையும், மலேசியாவைச் சேர்ந்த திருமதி பரமேஸ்வரி கிருஷ்ணன் 'திருமுருகன் ஆலயம் சபாக் பேர்ணம், சிலாங்கூர் வரலாற்றில் முதல் கண்ணோட்டம்' என்ற தலைப்பிலும் மலேசிய பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன் 'திருப்புகழும் கந்தரலங்காரமும் சாற்றும் திருமால் பெருமைகள்' என்ற கட்டுரையும், மலேசிய முனைவர் இரா.சீதாலட்சுமி 'திருவிளையாடல் உணர்த்தும் முருகப் பெருமான் பற்றிய செய்திகள்' என்ற தலைப்பிலும் மலேசியாவை சேர்ந்த க.சிவ்வாழி 'திருப்புகழில் சிவபெருமான் கருணை' என்ற தலைப்பிலும், மலேசிய மூத்த விரிவுரையாளர் கோவிந்தசாமி 'முருகப்பெருமானின் பாடல்களில் சித்தர் நெறி' என்ற தலைப்பிலும், இந்திய பேராசிரியர் கடலி தியாகராஜன் 'உள் உள்ளவனை உணர்' என்ற கட்டுரையையும், இந்தியாவைச் சேர்ந்த முனைவர் க.சுசீலா 'முருகனின் விழாக்களும் குறியீடுகளும்' என்ற தலைப்பிலும், இந்தியாவைச் சேர்ந்த திருமதி சரளா ரங்கநாதன் 'நாட்டார் வழக்காற்றியல் நோக்கில் முருகன்' என்ற தலைப்பிலும் மலேசியாவைச் சேர்ந்த குமரன் இராமையா 'கந்தபுராணமும் பெரிய புராணமும் உணர்த்தும் பக்தி நெறி' என்ற ஆய்வினையும், மலேசியாவைச் சேர்ந்த ஜெ.இந்துஜா ஜெயராமன் 'திருப்புகழில் அறுபடை வீடுகளில் வெளிப்படும் முருகனின் திருவருட் சிறப்பினில் பாசம்' என்ற ஆய்வினையும் இந்தியாவைச் சேர்ந்த வயிநாராயண சாமியின் 'தமிழின முருக பக்தி வழிபாடு' என்ற கட்டுரையும் ஆய்வரங்குகளில் சமர்ப்பிக்கப்பட்டன.

தென் ஆபிரிக்கா, கனடா, ஐரோப்பிய நாடுகள், சிங்கப்பூர் ஆகிய இடங்களிலிருந்தும் பலர் பேராளர்களாக கலந்து வந்து கொண்டனர். 'அரோகரா' கோஷம் 'வேல்வேல் முருகா' 'வெற்றி வேல் முருகா' கோஷமும் என்னேரமும் எழுப்பப்பட்டன. வெளிநாட்டு பேராளர்கள், கட்டுரையாளர்கள், ஆய்வாளர்கள், சிறப்பு சொற்பொழிவாளர்கள் பொன்னாடை போர்த்தி சிறப்பு செய்யப்பட்டனர்.

இறுதி நிகழ்வில் சகலருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. இந்திய ஆறு படை வீடுகளிலிருந்தும் 150 முருகன் கோவில்களிலிருந்தும் கொண்டு வரப்பட்ட திருநீறு பொட்டலங்கள் பிரசாதமாக வழங்கப்பட்டது. திருநீறுடன் ஒரு வேல் வழங்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்விழாவில் முன் வாசல் கோலம் அனைவரின் கவனத்தையும் வெகுவாக ஈர்த்தது. சகலருக்கும் சைவ சிற்றுண்டிகள், சைவ சாப்பாடுகள், மோர் ஆகியன தாராளமாக வழங்கப்பட்டன. கிட்டத்தட்ட 1000 பேராளர்கள் கலந்து கொண்டனர். இதில் 200 பேர் வெளிநாட்டு பேராளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நேர்த்தியான மாநாட்டைப் பற்றி பின்னர் விரிவாக ஆராய்வோம்.

## ஒலிம்பிக் சிதறு தேங்காய்...

(33ஆம் பக்கத் தொடர்)

சரி, உங்களில் எத்தனை பேருக்கு நம் நாட்டு தேசிய கீதம் முழுமையாகத் தெரியும்! சத்தியமாக எனக்கும் தெரியாது! இந்த ஒலிம்பிக் போட்டியை பார்க்க வந்த இடத்தில் காதலாகி, கல்யாணம் வரை முடிந்தவர்களும் கணிசமாக உள்ளனர். அதாவது ஒரு நாளைக்கு சராசரியாக 2 பேர் காதலைச் சொல்லி கல்யாணம் வரை முடித்துள்ளனராம். மொத்தமாக 25 ஜோடிகளின் காதல் திருமணத்தில் முடிந்திருக்கிறது என்கிறது ஒரு கணக்கு. ஆனால் திருமணத்துக்கு சம்மதித்தவர்கள் ஒரே நாட்டைச் சேர்ந்தவர்களா வேறு வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களா என்பது தெரியவில்லை. ஒலிம்பிக் பார்க்க வந்திருந்தவர்களுக்கு புரியாத தோன்றியபோது நாலைந்து மன்னை ஒருநாள் கிடைத்தாலும், யாருடையது என்ன என்ற விபரம் இதுவரை தெரியவில்லை என்ற செய்தியை படித்த போது செம்மனி ஞாபகத்துக்கு வந்தது. அங்கேயும் செம்மணிக்காரர்கள் இருந்தார்களா அல்லது மயானத்தின் மீது ஒலிம்பிக் பார்க்கை அமைத்தார்களா, தெரியவில்லை! ஒலிம்பிக் முடிவடைந்ததும் லண்டன் விமான நிலையங்கள் பெரும் பயணிகள் நெருக்கடியை சந்தித்தது. தொன் கணக்கான பொருட்களுடன் பன்னாட்டு விளையாட்டு வீரர் குழுக்கள் தத்தமது நாடுகளுக்கு புறப்பட்டுச் செல்ல ஆரம்பித்ததால் இந்த நெருக்கடி. எனினும் பிரமாண்டமான முன்னேற்பாடுகளால் விமான நிலையங்கள் நிலைமையை சமாளித்தன. லண்டன் என்றுமே அதிக பிஸியான நகரம் என்பதால் இது பிரச்சினையாக இருந்திருக்காது! ஆகஸ்ட் 7ம் திகதி செவ்வாய்க் கிழமையன்று லண்டன் மெட்ரோ ரயில்களில் ஒரே நெரிசல். அன்று மட்டும் 40 லட்சம் பேருக்கு மேல் ரயில்களில் பயணித்தனராம்.

ஒலிம்பிக் கிராமத்தில் மொத்தம் 16,000 படுக்கைகள், 11,000 சோபாக்கள், 22,000 தலையணைகள், 28,000 துவாய்கள் போடப்பட்டிருந்ததாம். அப்புறம் இன்னொரு முக்கியமான விஷயம். ஒவ்வொரு வீரர், வீராங்கனைகளுக்கும் தலா 15 ஆணுறைகள் வழங்கப்பட்டிருந்தன. அதாவது ஒரு நாளைக்கு ஒன்று என்ற ரீதியில்! இது பிரயோசனமா என சிலர் சிரிக்கப்படியே கேட்டார்களாம்! இந்த நாட்களில் ஒலிம்பிக் கிராமத்தில் மொத்தம் 20.7 லட்சம் வாழைப்பழங்களை வீரர்களும், வீராங்கனைகளும் தின்று தீர்த்துள்ளனராம்.

இலங்கையர்களான நமக்கு இறுதிச் சுற்றுக்கு வருவதே பிரம்மப் பிரயத்தனமாக இருக்கிறது. இந்தியாவுக்கு ஒரு தங்கப் பதக்கம் கூட கிடைக்கவில்லை. மைக்கல் பெல்ப்ஸ் 18 தங்கம் மொத்தமாக வென்றிருக்கிறார் என்பது மலைப்பை ஏற்படுத்தும் விஷயம். ஆனால் இதைக் கொஞ்சம் பாருங்களேன்! இங்கிலாந்து டென்னிஸ் வீரர் ஆன்டி முரே பெற்ற ஒலிம்பிக் தங்கப்பதக்கங்களை விட்டு நாய்களுக்கு போட்டு அழகு பார்த்துள்ளாராம் அவரது காதலி! இது, அவர்களது உறவில் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாம்.

ஒலிம்பிக் வோட்டர் போலோ விளையாட்டின்போது அமெரிக்க வீராங்கனை ஒருவருக்கும், ஸ்பெயின் வீராங்கனை ஒருவருக்கும் தண்ணீருக்கடியில் கடும் சண்டை ஏற்பட்டதாம். இதில் ஸ்பெயின் வீராங்கனையின் மேலாடையை அமெரிக்க வீராங்கனைப் பிடித்து இழுத்ததில் அவரது மார்பு வெளியே தலை காட்டியிருக்கிறது. ஆத்திரத்த ஸ்பெயின் வீராங்கனை அமெரிக்க வீராங்கனையின் மார்பில் அடித்திருக்கிறார். ஒலிம்பிக் போட்டி ஒன்றில் இப்படி பெண்களுக்கு இடையே மார்பு சண்டை ஏற்பட்டது இதுதான் முதல் தடவையாம். மைதானத்துக்கு வெளியே போட்ட சண்டைகளை இங்கே கணக்கில் எடுத்துக் கொள்ளக்கூடாது!

## வானவில் சிறுகதை...

(12ஆம் பக்கத் தொடர்)

திறமையான ஆசிரியர்களைப் பற்றி வாய்புகழும். அப்படியான ஒரு இனிப்பான நிலைதான் பனிலுக்கு இருந்தது. ஆனால் திறமையானவர்கள் தான் கீர்த்தி பெருமையும் புகழையும் தீய, குறுகிய மனங்கள் நிரவிக்காது. இதன் முதல் ஆரம்பப்படிதான் அதிபர் மாற்றம். தங்களுக்குரிய, தங்களின் விருப்பங்களை நிறைவேற்றக்கூடிய ஒரு பொம்மை அதிபரின் வருகை. இதனால் பல ஆசிரியர்கள் பழிவாங்கப்பட்டார்கள். பரீட்சை முடிவுகள் வழமை போல நல்ல முறையில் வந்தாலும் அதற்குக் காரணமான ஆசிரியர்களைப் பாராட்ட மனம் வரவில்லை.

வகுப்புகளுக்குச் சென்று கற்பிக்கும் எண்ணம் பனிலுக்கு இல்லை. மாணவர்கள் வந்து மன்னிப்புக் கோராத வரை இனி வகுப்புகளுக்குச் செல்வதில்லை என்று ராஜரத்தினத்திடமும் அதிபரிடமும் உறுதியாகச் சொல்லிவிட்டார். ''பனில்! இது பிழையான தீர்மானம். மாணவர்கள் மன்னிப்புக் கேட்பார்கள், என்று நின்றால் பாவங்கள். அவர்களைத் தாண்டி விட்டு வேடிக்கை பார்க்கிறார்கள்''

''அப்போ! என்ன சொல்றீங்க நான் பாக்குறா?''

''இரண்டொரு சுட்டிகள்தான் குழப்புறாங்கள். மற்ற ஸ்டூடன்ஸையும் பயம் காட்டி பயன்படுத்துறாங்கள். அதுக்காக வகுப்புகளுக்குச் செல்லாமல் இருக்கிறது சரியல்ல.''

ராஜரத்தினம் சொல்லி முடிக்கவும் அந்த மாணவர்கள் பனிலைத் தேடி ஸ்டாவ்ரூமுக்கு வருவதற்கும் சரியாக இருந்தது.

''சுத்தும் சொல்லுங்க.. பொறுத்து மன்னிப்புக் கேட்போம்!''

''எங்களுக்கு நீங்கதான் வேணும். நாங்க தப்புச் செஞ்சா நீங்கதானே மன்னிக்கணும்.. மன்னிச்சுக்குங்க..சேர்! மாணவர்கள் அழுதபடி மன்னிப்புக் கேட்டார்கள்.

''சேர்! நீங்க ரெண்டுச்சம் போயிடுங்களாமே! சேர்! ரெண்டுபேருந்தான் குழப்புறாங்க.. நீங்க ராஜரூப்பில போயிடாதீங்க! நாங்க உங்களைத்தான் நம்பியிருக்கோம்...''

''சேரி..சேரி!''

மாணவர்கள் சென்று விட்டார்கள்.

''பார்த்தீர் பனில்! ஸ்டூடன்ஸ் எவ்வளவு நல்லவங்கள் என்று''

மாணவர்களின் கண்ணீர், அவர்களின் பேச்சு பனிலின் இதயத்தைப் பாதித்துவிட்டது.

'அவர்சியம்
விரல்கள் புண்ணாவது
இனரீயம்
விரல்களே விழிகளாவது'

எப்போதோ படித்த இந்தக் கடுகுக் கவிதையின் ஆழம் பனிலுக்கு இப்போதுதான் புரிந்தது. விரல்களை எல்லாம் புண்ணாக்குவதா? அல்லது விழிகளாக்குவதா? இதயம் எப்பொழுதும் குழம்புகின்ற குட்டைதான். தெரிந்தும் தெரியாமலும் அந்தக் குட்டையில் கற்கள் விழுந்து கொண்டுதான் இருக்கின்றன. அதற்காகக் குட்டையை அழிப்பதா? அல்லது விழுகின்ற கற்களைத் தடுப்பதா? ''ராஜரத்தினம் வாங்க! செக்ஷனுக்குப் போவம்'' புத்தகம் ஒன்றில் விழிகளை மேய விட்டுக் கொண்டிருந்த ராஜரத்தினத்தை அழைத்தார் பனில். இருவரும் விஞ்ஞானப் பிரிவுக் கென்று ஒதுக்கப்பட்டுள்ள அறைக்குள் நுழைந்தார்கள்.

அலுவலக சிற்றூழியர் ஒருவர் மணிக்கு ஆசிரியர் குழுக்கூட்டம் இருப்பதாகத் தெரியப்படுத்தி விட்டுச் சென்றார். ''உதுக்கு மட்டும் குறைவே இல்லை. நேரத்தை வீணாக்கி கதைப்பாங்கள். ஒரு மூலைம் எடுக்காமல் கலைந்து செல்வாங்கள்!''


ஆசிரிய குழுக்கூட்டம் கூட்டப்பட்டது.

''ஒரு சந்தோசமான செய்தியை அறிவிக்கவே இந்த ஸ்டாப் மீற்றிங் கூட்டப்பட்டிருக்கு. மிஸ்டர் பனில் அவர்களுக்கு மிகச் சிறந்த ஆசிரியருக்கான விருது கிடைத்திருப்பதாக பாடசாலை அதிபராகிய எனக்கும் தனிப்பட்ட முறையில் பனில் ஆசிரியருக்கும் கடித மூலம் அறிவித்திருக்கிறார்கள். இதோ! பனில் ஆசிரியருக்கான கடிதம்''

பனில் தன்னை ஒரு முறை கிள்ளிப் பார்த்துக் கொண்டார் இது கனவா? நிஜமா என்று! எழுந்து சென்று கடிதத்தை வாங்கிப் பிரித்துப் படித்து நிஜம் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டார். சகல ஆசிரியர்களும் பனிலைப் பாராட்டினார்கள். உண்மையான திறமைக்கும், புனிதமான ஆசிரியசேவைக்கும் கிடைத்த வெற்றி என்பதைப் பனில் உணர்ந்து கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பஸ்சில் உவ்வே... தடுப்பது எப்படி?

வாகனமொன்றில் பயணம் செய்யும் போது ஒரு சிலர் வாந்தி போடுவதை நாம் பார்த்திருக்கிறோம் வாகனங்களில் மட்டுமல்ல விமானங்களில் ஆகாயத்தில் பறக்கும் போதும், படகுகளில் ஆற்றையோ, கடலையோ கடக்கும் போதும் இதே போல் சிலருக்கு வாந்தி வரும்.

Motion Sickness, Travel Sickness என்ற இந்த நோயின் அறிகுறிகள் தலைசுற்றல், உடம்பு அசதி, மற்றும் வாந்தி, என்பதாகும்.

வளைவுகள் கொண்ட வீதிகள், இறக்கங்கள் ஏற்றங்களைக் கொண்ட நெடுஞ்சாலைகள் ஆகியவற்றில் பயணம் செய்யும் போது மேற்கூறிய அறிகுறிகள் உக்கிரமடையும். அதே வேளை அவ்வாறான பயணங்களின் போது தலையை தொங்கப்போடுதல் அல்லது பத்திரிகை வாசித்தல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடும்போது நிலைமை மேலும் மோசமடையும். இது எவ்வாறு ஏற்படுகிறது? மற்றும் இதற்கான தடுப்பு முறை என்ன என்பதை இனி பார்ப்போம்.


எமது உடலை சம நிலையில் வைத்திருப்பதற்கான சமிக்ஞையை எமது மூளைக்கு வழங்கும் வெஸ்டிபியூலர் சிஸ்டம் என்ற முறைமை எமது காதுக்கு அருகில் அமைந்துள்ளது. ஒரு வகை திரவத்தால் நிரப்பப்பட்ட இந்த நரம்பு போன்ற திசுக்கள்



மஹிந்த ஹேமப்பிரிய
வைத்தியர்,
றாகமை

வட்ட வடிவமானவை. காதின் உள்ள திரவம் அசையும் போது ஏற்படும் சலனம் மூளையினால் கிரகித்துக் கொள்ளப்படுகிறது. எமது உடல் அசையும் போதும், பயணம் செய்யும் போதும் அதனை சமநிலையில் வைத்திருக்க இதனால் முடிகிறது.

எனினும் நாம் ஒரு வாகனத்தில் பயணிக்கும் போது வீதியில் மற்றும் சாலையில் உள்ள வளைவுகள், திருப்பங்கள் மற்றும் ஏற்ற இறக்கங்கள் கண்ணுக்குத் தெரிந்தாலும் எங்கள் உடலுக்கு தெரிவதில்லை. வாகனத்தில் உள்ளே எல்லாம் சரியாக இருப்பது போலத்தான் கண்களுக்கு தெரியும். ஆனால் காதுக்கு அருகில் உள்ள மேற்கூறிய சுரப்பியிலுள்ள திரவம் உடல் சமநிலையில் இல்லை என்பதை மூளைக்கு உணர்த்தும்.



உடல் சமநிலையில் இருந்தாலும் சமநிலையில் இல்லை என்று வெஸ்டிபியூலர் சிஸ்டம் சுரப்பி கூறுகிறதே என்று, கலவரமடையும் மூளை உணவு சமிபாட்டு முறைமையில் தான் ஏதோ கோளாறு, சாப்பிட்ட உணவு, ஏதோ நஞ்சாகியிருக்க வேண்டும் என்று கணிக்கும். எனவே உணவு விஷமானால் எடுக்க வேண்டிய முதலாவது நடவடிக்கையான குமட்டல் மற்றும் வாந்தியை அது ஏற்படுத்தும்.

இந்த பிரச்சினைக்கு தீர்வாக பல சிகிச்சை முறைகள் உள்ளன. கண்களை மூடுதல் அல்லது நித்திரை செய்தல் மூலம் வீதியில் உள்ள திருப்பங்கள் ஏற்ற இறக்கங்களை கண்கள் பார்க்காது இருக்கும் வகையில் செயற்பட்டால் காதுகளுக்கு அருகே உள்ள வெஸ்டி பியூலர் சிஸ்டத்தில் மாற்றங்கள் ஏற்படுவதை மூளை உணராதிருக்கச் செய்யலாம். ஆனால் இது ஓரளவுக்கே பயன்தரும். சில சமயங்களில் நீடித்த பயனை தரக் கூடும்.

அடுத்து சுயிங்கம் போன்ற அல்லது வேறு வகை உணவு அல்லது திண்பண்டங்களை மென்று கொண்டிருத்தல் மூலமும் இந்த நோய்த் தன்மையை குறைக்க முடியும்.

இத்துடன் Cinne ragine அல்லது Promethazine என்ற வில்லைகளை பயணம் செய்வதற்கு முதல் நாள் இரவு அல்லது பயணத்தை ஆரம்பிக்க அரை மணி நேரம் இருக்கும் போது எடுக்கவேண்டும். இதற்கு உங்கள் மருத்துவரின் அல்லது தகுதி பெற்ற மருந்து விற்பவரின் உதவியை பெறுவது உசிதமானதாகும்.

இதற்கு புறம்பாக இஞ்சி வாந்தி வருவதை தடுக்கும். இஞ்சித் துண்டொன்றை மெல்லுதல், அல்லது இஞ்சியில் செய்யப்பட்ட உணவுப் பண்டங்கள். உதாரணத்துக்கு இஞ்சி தோஸி, இஞ்சி முறப்பா, அல்லது இஞ்சி போட்ட பானம் ஆகியவற்றை உட்கொள்ளலாம். கண்களுக்கு sun glas போடுவதும் ஓரளவுக்கு பயன் தரும்.


நன்றி : ஆரோக்யா

# ஒலிம்பிக் சிதறு தேங்காய்

## நீச்சல் பெண்கள் போட்ட குடுமிப்பிடிச் சண்டை!



காதலியுடன் அண்டிமுரே + நாய்கள்



அனாஸ்



லண்டன் ஒலிம்பிக்கில் நீச்சல் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற ஜியாங் லியூயாங்(21) என்ற சீனா வீராங்கனைக்கு, கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய பதவி வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. அங்கே ஒரு கட்சி ஆட்சி என்பதால் இது ஒரு பெரிய கௌரவம் தான். எததனையோ பேர் அரசியலில் எதிர் நீச்சல் போட்டுக் கொண்டிருக்கையில் நீச்சல் அடித்ததன் மூலம் இவர் அரசியலுக்கு சென்றிருக்கிறார்! லண்டன் ஒலிம்பிக் போட்டியில் பெண்களுக்கான குண்டெறிதல் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற பெலாரசின் வீராங்கனை நட்ஜியா ஆஸ்டப்சக்கிடம் நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனையில் ''மெட்டநோலோன்'' என்ற ஊக்க மருந்து பயன்படுத்தியது தெரியவந்தது. இதனால் அவரது தங்கப்பதக்கம் பறிக்கப்பட்டது. பதக்கம் பறிக்கப்படுவது ஒன்றும் புதிய விஷயம் இல்லைதான். ஏழு வருஷம் கழித்தும் கூட பதக்கம் பறித்திருக்கிறார்கள். ஆனால் பதக்கம் வாங்கிய இரண்டே நாளில் அது பறிக்கப்பட்டதுதான் இங்கே செய்தி!

ஊரில் மத்தளம் கொட்டி வரவேற்றதற்கு முன்னரேயே பதக்கத்தை இழப்பது கொடுமை தானே! விமான நிலையத்தில் இறங்கினால் ஈ காக்காய் கூட இருக்காதே!

லண்டன் ஒலிம்பிக் போட்டியில் 'ஆண்களுக்கான ஈட்டி' எறிதல் போட்டியில் டிரினிடாட் டொபாக்கோ வீரர் வால்காட் தங்கப்பதக்கம் வென்றார். அவரை பாராட்டும் வகையில், அந்நாட்டில் உள்ள கலங்கரை விளக்கம் மற்றும் விமானத்திற்கு வால்காட்டின் பெயர் சூட்டப்பட உள்ளது. அரசியல் பிரமுகர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த கௌரவம் இன்று விளையாட்டு வீரர்களுக்கு அளிக்கப்படுவது பாராட்ட வேண்டிய ஒரு விஷயம். சுசந்திகா வெள்ளிப் பதக்கம் பெற்றுத் தந்தாரே, அவரைக் கௌரவப்படுத்தும் வகையில் ஏதேனும் செய்தார்களா? குறைந்த பட்சம் ஒலிம்பிக் மைதானத்தில் ஊர்வலமாக செல்லவாவது அனுமதித்தோமா?

ஒலிம்பிக் போட்டியில் பங்குகொண்டவர்களில் கவர்ச்சியான பெண் என்ற பெருமையை பராகுவே நாட்டைச் சேர்ந்த ஈட்டி எறியும் வீராங்கனை லெரின் பிரான்கோ பெற்றிருக்கிறார். இவர் வெறும் வீராங்கனை மட்டுமல்ல, அழகுப் பெண்ணும் கூட, அழகிப் போட்டியில் அமர்க்களப்படுத்தியவரும் கூட. மிஸ் பராகுவே அழகிப் போட்டியில் 2வது இடத்தைப் பிடித்தவர் இந்த 'கவர்ச்சி ஈட்டி'



கச்சை கிழிக்கப்பட்ட நிலையில் ஸ்பானிய வீராங்கனை

முதல் பத்து நாட்கள் நடந்த போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கம் வென்ற இங்கிலாந்து வீரர், வீராங்கனைகளில் 37 சதவீதம் பேர் கதறி அழுதனராம், ஆனந்தக் கண்ணீர் விட்டார்களாம். அதேபோல அமெரிக்க தரப்பில் 17 சதவீதம் பேர்தான் அழுதார்களாம். சீனாக்காரர்கள் இதில் 7 சதவீதமாகும். அதாவது அமெரிக்கர்களும் சீனர்களும் ரொம்ப உணர்ச்சி வசப்படுபவர்கள் இல்லை என்று அர்த்தப்படுத்திக் கொள்ளலாம். அவர்கள் விளையாட்டை நாடு, தேசப்பக்தி போன்ற எமோஷனலான விஷயங்களோடு இணைத்து பெருமிதம் கொள்வதில்லை போலும்!



மைக்கல் பெல்பஸ்

பதக்கம் வாங்கி அழுது குமுறியவர்களில் பாதிப் பேர் பெண்கள். அதாவது ஆண்களை விட 25 சதவீதம் கூடுதலாக பெண்கள் அழுதார்களாம். அதேசமயம், எட்டு சதவீத ஆண்கள் மட்டுமே ஆனந்தக் கண்ணீர் வடித்தார்களாம். சீரியல் பார்த்து கண்ணீர் விடுவது நமது தாய்க்குலத்துக்கு மட்டுமே உரியதல்ல. உலகத்தில் உள்ள எல்லாப் பெண்களும் ஒரே மாதிரித்தான் போலும்!

பதக்கம் வாங்க மேடையில் நின்றவர்களில் 44 சதவீதம் பேர் மட்டுமே தங்களது நாட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டபோது கூடச் சேர்ந்து பாடினார்களாம். மற்றவர்களுக்கு தேசிய கீதம் தெரியாதா? என்ற கேள்வி எழுகிறது அல்லவா?

(31ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மனிதனுக்கு நெருக்கமான கொரில்லா

மருத்துவர்
அருந்ததி பொன்னுசாமி
தெஹிவளை மிருகக் காட்சிச்சாலை





கொரில்லா மனிதர்களுக்கு ரொம்பவும் நெருங்கிய இனம். சிம்பன்சி, கிபன், கொரில்லா இந்த மூன்றும் மனித குரங்கு வர்கத்திற்குள் (முதனி) எனப்படும் பேரினத்தை சேர்ந்தவையாகும்.

கொரில்லாவிற்கு வால் கிடையாது. அஜானுபாகுவான தோற்றத்தை உடைய இம் மனித குரங்கு இனம் 5அடி, 6அங்குலம் வரை உயரம் உடையவை. கை முட்டிகளை ஊன்றி நடக்கும் பழக்கமுடைய இவற்றின் எடை 150லிருந்து 160 கிலோ வரை இருக்குமாம். பெண் கொரில்லாக்களின் எடை இதில் பாதியாக இருக்கும். இலை, தழை, பழம், கிழங்கு ஆகியவற்றை பிரதான உணவாகக் கொண்ட இக் கொரில்லா இனம், சில நேரங்களில் சிறிய வகை பூச்சிகளையும் பிடித்து உண்ணுமாம். இதன் ஆயுள் காலம் 30. தொடக்கம் 50 ஆண்டுகளைக் கொண்டது குறிப்பாக காடுகளில் வாழும் போது, இதன் ஆயுட்காலம் குறைவாகவே உள்ளது. மிருகசாலை கர்ப்பகங்களில் வாழும் போது இதன் ஆயுள் நீண்டதாக அமைகிறது. பாதுகாப்பு, போதுமான உணவு, மருத்துவ கண்காணிப்பு என்பன இதற்குக் காரணம், இதனுடைய டி.என்.ஏ 95-99 வீதம் மனிதர்களுடன் ஒத்திருப்பதால் இவை சின்பன்சிக்கு அடுத்ததாக மனிதனுடன் நெருக்கமான தொடர்புடைய உயிரினமாக உள்ளது. இதன் இரத்தம் டீ வகையை சேர்ந்ததாக உள்ளது.


இந்த கொரில்லா இனம் தென் ஆப்பிரிக்க காடுகளிலேயே பெரும்பான்மையாக வாழ்ந்து வருகிறது. கிபன் என்ற சிறிய வகை மனிதக்குரங்கு, இந்தியா, இந்தோனேசியா, தென்சீனா, உள்ளிட்ட மழைவளம் அதிகம் நிறைந்த செழிப்பான காடுகளில் இவை வாழ்கின்றன. சிம்பன்சி ஆப்பிரிக்க மேற்குப் பகுதியில் வாழ்கிறது. கொரில்லாவின் குடும்பம் HOMINIDEA, இதன் துணைக் குடும்பம் Homininae என்பதாகும்.

நம் நாட்டு மிருகசாலையில் சிம்பன்சி, கிபன் உள்ளிட்ட குரங்கு வகைகள் மட்டுமே உள்ளது. கொரில்லா தற்போது இல்லை. முன்னர் கொரில்லா தெஹிவலை மிருகக் காட்சிச் சாலையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. போதிய பராமரிப்பு இல்லாததால் அது இறந்து விட்டது.

ஒரு மிருகசாலை கொரில்லாவை வளர்பதென்றால் குறைந்த பட்சம் 4 ஏக்கர் பரப்பளவு தேவை. அந்த வசதி இங்கு இல்லை. இந்தியாவில் மைசூர் மிருக காட்சிசாலையில்' உள்ள கொரில்லாவின் வாழ்விடம் 4 ஏக்கராக உள்ளதாம். பெண் கொரில்லாக்களின் கர்ப்ப காலம். 250 தொடக்கம் 270 நாட்களாகும். ஒரு முறைக்கு ஒரு குட்டியையே பிரசவிக்கும் அப்படியே இரட்டை பிரசவங்கள் நடந்தாலும் ஒன்று இறந்து விடும். இதற்கு முக்கிய காரணம், கொரில்லா தனது குட்டியை முதுகில் சுமந்து செல்லும். இரண்டு குட்டியாக இருக்கும் போது. இரண்டையும் சுமந்து செல்வது சிரமம். அதனாலேயே ஒரு குட்டி பராமறிப்பின்றி இறந்து விடுகிறது. கொரில்லாவின் கைகள் காலின் நீளத்தை விட அதிகமாக உள்ளது. அதனால் தான் அது கைகளை ஊன்றி நடக்கிறது. கொரில்லாவிற்கு பெரிய பற்களும், உறுதியான கடைவாய் பற்களும் உள்ளன. பலமான தாடை அமைப்பையும் கொண்டிருக்கிறது. இதனால் கொரில்லாவினால் கடினமான உணவுகளை இலகுவாக உண்ண முடிகிறது. குறிப்பாக ஆண் கொரில்லாக்களில் வேட்டைப்பல் பெரிதாக இருக்கும். கற்றுக் கொள்ளும் ஆற்றல் இதற்கு அதிகம். மனிதருக்கு உள்ள பல இயல்புகள் இந்தக் கொரில்லாக்களிடம் உள்ளது. கருவிகளை உபயோகித்து சில வேலைகளை கொரில்லாக்கள் செய்கின்றன.

மரத்திலிருந்து விழும் தேங்காயை எடுத்து அதன் மீது பெரிய கல்லைத் தூக்கி அடித்து தேங்காயை உடைத்து சாப்பிடுவதற்கு இது தெரிந்து வைத்திருக்கிறது. மிருக சாலையில் உள்ள கொரில்லாக்கள் கரண்டியை உபயோகித்து உணவு சாப்பிடவும் செய்யும்! பேசும்போது நாம் உபயோகிக்கும் வார்த்தைகளில் குறைந்த பட்சம் 100 வார்த்தைகளையாவது விளங்கிக் கொள்ளும் அளவிற்கு அதன் மூளை ஆற்றல் கொண்டது. இது தவிர சில நாடுகளில் உள்ள கொரில்லாக்களுக்கு ஊமைகள் பேசும் சைகை மொழியும் தெரியுமாம். நாம் சொல்வதை கற்கும் ஆற்றல் கொண்ட கொரில்லாவை ஏன் மனிதன் வித்தை காட்ட பயன்படுத்துவதில்லை. என்று நீங்கள் கேட்பது புரிகிறது.

இதற்கு ஒரு காரணம் உள்ளது. முதல் காரணம் இதன் பிரமாண்ட முரட்டு உருவம். மற்றது திடீரென்று பாய்ந்து மார்பை கடித்து விடும் இதன் இயல்பு. அதனால் தான் மனிதன் இதை வைத்து வித்தை காட்டுவதில்லை. என்ன தான் கொரில்லாவிற்கு வாலில்லை என்றாலும். இதற்கும் குரங்கு புத்தியே!





காட்டில் கொரில்லா 30 மீட்டர் பரப்பளவில் தான் சுற்றி வந்து வாழும். தினமும் 2 கிலோமீட்டர் தூரம் மட்டுமே நடக்கிறது.

இதன் நாசித் துவாரம் பெரிதாக இருப்பதால் இதன் மோப்ப சக்தியும் அதிகமாக உள்ளது. இதன் வாழ்விடத்தை பொருத்ததாக உணவு பழக்கமும் மாறிவிடும். புலி பசித்தாலும் புல்லை திண்ணாது என்பார்களே அது மாதிரியல்ல இந்தக் குரங்கு. வாழும் இடத்தில் கிடைக்கும் உணவை உண்டு வாழ்க்கையை ஓட்டிவிடும். அதாவது மனிதனைப் போலவே! காடுகளில் கொரில்லாக்களை காண்பது மிகவும் அரிதாகவே இருக்கும். எனவே வ்னவிலங்கு கணக்கெடுப்பாளர்கள். கொரில்லாவின் மலத்தின் பருமனை வைத்துத்தான் இங்கே எந்த வகையான கொரில்லா வாழ்கிறது என்பதை அடையாளம் காண்கிறார்கள்.

பிறந்த குட்டிகள் ஒன்பது மாதங்களுக்கு பிறகே தவழத் தொடங்கும். 30, 40 கிழமைகளில் நடக்கத் தொடங்கிவிடும். மூன்றரை வருடங்கள் வரை தாயிடம் பால் குடிக்கும். 6 தொடக்கம் 8 ஆண்டுகளுக்கு ஒரு தடவையே குட்டியை கொரில்லாக்கள் பிரசவிக்கும். மனிதனைப் போலவே தனது குட்டியை இது அடையாளம் கண்டு கொள்கிறது. வேறு கொரில்லாக்களின் குட்டிகளை இது தத்து எடுக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VIP Bavana Album

















அண்ணனுடன்...



## பாவனாவின் பயோடேட்டா

பெயர் :
கார்த்திகா மேனன்

பிறந்த திகதி :
1986 ஜூன் 6

பிறந்த இடம் :
திரிசூர், கேரளா

அப்பா :
ஜி.பாலச்சந்திர மேனன்

அம்மா :
புஷ்பா

சகோதரன் :
ஜெயதேவ்

முதல் படம்:
நம்மவர் (மலையாளம்) 2002
சித்திரம் பேசுதடி (தமிழ்)



பட உதவி: லக்ஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Printed and published by ANCL No: 35, D.R.Wijewardena Mawatha, Colombo-10 in September, 2012.